1 14

சும் படம்

டோபர் 1958 • 75 காசு

விரைவில் வருகிறது!

"தீய சக்தி அத்தனையும் திரண்டு எதிர் வந்தாலும்
ஓயாத தொல்லை ஒரு கோடி தந்தாலும்-தாரணியில்
தெய்வ பல முள்ளவர்க்குத் தீங் கொன்றும் நேராது
மெய்யாக வெற்றியவர்க் கே" ....

என்கிற
உண்மையை விளக்கும் உன்னத சித்திரம்
பொன்னலூரி பிரதர்சாரின்

தெய்வ பலம்

[தமிழ்]

நடனமும், முக்கிய கட்டங்களும்
கண்கவர் கலரிலே தயாரிக்கப் படுகிறது.

டைரக்ஷன்:- வசந்தகுமார் ரெட்டி

STUDIO Ketha

CHARI

அக்டோபர் வெளியீடு
ஏவி எம். புரொடக்ஷன்ஸ்
மாமியார் மெச்சின மருமகள்
தயாரிப்பு & டைரக்ஷன்
கிருஷ்ணன் பஞ்சு
AVM
புரொடக்ஷன்ஸ்

அக்டோபர் ரிலீஸ்!

ஸதர்ன் மூவீஸ்

மாய மனிதன் (தமிழ்)

டைரக்ஷன்: T. P. சுந்தரம்

89689
சென்னை-600 008.

அக்டோபர் 3-ம் தேதி முதல்

மெடமோய்ஸெல்லி

டிப்ளமோ பட்டம் பெற்ற பெண்களின்
ஹேர் டிரஸ்ஸர் & அழகுக்கலை நிபுணர்

உங்கள் கூந்தலை நாகரீகமான பல மோஸ்தர்களில் அழகுபடுத்தவும், மற்றும் உங்கள் முகப் பொலிவை அதிகப்படுத்திக்கொள்ளவும் கைகளை அழகு படுத்திக் கொள்ளவும் சிறந்த இடம்.

ஆலோசனைக்கு அணுகுக :

ரூம் நெ. 33

ஏர் லயன்ஸ் ஹோட்டல்

மௌண்ட் ரோடு, சென்னை - 2

ரூ. 1000 சவால்

மாயக் கைக்குட்டை

அதிசயமான இக்கைக்குட்டை மாய சக்தியைக் கொண்டு, 16 வருஷங்களாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. நீங்கள் எல்லா விஷயங்களிலும் அது எவ்வளவு கடினமாக இருந்தாலும், தூரத்தில் இருந்தாலும், வெற்றி பெறுவீர்கள். ஒரு முறை சோதனை செய்து பாருங்கள். முதல் இரவிலேயே இதன் மாய சக்தியை அறிவீர்கள். விலை ரூ. 2. ஸ்பெஷல் ரூ. 3/75. தபால் செலவு தனி. அயல் நாடு 10 ஷில்லிங் பி.பி.ஓ. மூன்று கேள்விகளுக்கு பதில் இலவசம். கடிதப்போக்கு வரத்தும், உங்கள் விலாசமும் ஆங்கிலத்தில்.

PROF. B. S VERMAN
Mesmerist & Hypnotist,
8/1, JULLUNDUR (Ph)

பேசும் படம்

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு
சென்னை - 2

சந்தா விகிதம்

ஒரு வருஷம்

உள்நாடு	ரூ.	9. 00
வெளிநாடு	,,	12. 00

ஆறு மாதம்

உள்நாடு	,,	4. 50
வெளிநாடு	,,	6. 00

வி. பி. பி.யில் அனுப்ப இயலாது. ஆறு மாதத்துக்குக் குறைந்த சந்தா கிடையாது.

குறிப்பு : 'பேசும் படம்' சந்தாதாரர்களுக்குப் பிரதி வருஷமும் ஏப்ரல் மாதத்தில் வெளி வரும் 'பேசும் படம்' ஆண்டு மலர் அதிகக் கட்டணமின்றியே அனுப்பி வைக்கப்படும்.

விரைவில் வருகிறது!
தினகரன் பிக்சர்ஸ் அளிக்கும்
ஆஸ்திக்கொரு ஆணும் ஆசைக்கொரு பொண்ணும்
பிரேம் நஸீர் • M.N.ராஜம் • V.K.ராமசாமி
T.K.ராமச்சந்திரன் • கண்ணும்பா • V.M.ஏழுமலை
குலதெய்வம் ராஜகோபால் • T.P.முத்துலக்ஷ்மி
P.D.சம்மந்தம் • யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை
கதை-வசனம்: A.P.நாகராஜன்
சங்கீதம்: K.V.மஹாதேவன்
பாடல்கள்: மருதகாசி
டைரக்ஷன்: K.சோமு
தயாரிப்பு: B.தினகர் ராஜ் B.தர்ம ராஜ்
தினகரன் பிக்சர்ஸ் • சென்னை-6
PSR

செப்டம்பர் 26ம் முதல்
சென்னை
பிரபாத் · வெலிங்டன்
சரஸ்வதி மற்றும்
தென்னுடெங்கும்
பசந்த் பிக்சர்ஸ்
ஜிம்போ
கேவா கலர் தமிழ்
வாடியா பிரதர்ஸ் தயாரிப்பு
தயாரிப்பு & டைரக்ஷன்: ஹோமி வாடியா
தந்திரக் காட்சிகள்: பாபு பாய் மிஸ்திரி
தமிழாக்கம்: பிலிம் சென்டர் மதராஸ்
சங்கீதம்: சித்ரகுப்தா
Elegant

படம் 17

காட்சி 2

பேசும்பட

★ அக்டோபர் 1958 ★

பொருளடக்கம்

பக்க

1. எம். ஜி. ஆர். புரட்சி நடிகரா? ...
2. வீனஸின் 'கல்யாணப் பரி'சில் விஜயகுமாரி (வர்ணப்போட்டோ) ... 1
3. விட்டல் புரொடக்ஷன்ஸ், 'ராஜா உதய வர்மா' படத்தில் கிருஷ்ணகுமாரி (வர்ணப்போட்டோ) ... 1
4. லக்ஷ்மிபிரபா - ஆடை அலங்காரம் ... 2
5. புதிய வெளியீடுகள் ... 2
6. பாத்திரம் பிறந்தது ... 3
7. ஸ்டுடியோ விஜயம் ... 4
8. எம். கருப்பையா (அறிமுகம்) ... 4
9. செய்திச்சுருள் ... 5
10. எட்டயபுரம் பாரதி விழா ... 5
11. அன்பு எங்கே? (படக்காட்சிகள்) ... 5
12. கேள்வி-பதில் ... 6
13. நான் ரஸித்த காட்சி ... 7
14. வெட்டுங்கள், வெட்டுங்கள் ... 7
15. ஒரே வழி (படக்காட்சிகள்) ... 8
16. பெரிய கோயில் (படக்காட்சிகள்) ... 8
17. தபால் பெட்டி ... 9
18. நாடோடி மன்னன் (திரைக்கதை, வசனம்) ... 9

★ SEVENTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Publishe by T. V. Ramanath, at Ramanath Press, 17, General Patters Road Madras-2. (Phone: 86001) Proprietors: Ramanath Publication Managing Editor: T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:
17, General Patters Road, Madras-2.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon

கன்னித் தமிழ் நாட்டில், தமிழ் வளர்த்த பெருநகரமாம் மதுரையில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சம்பவம் நடைபெற்றது.

'கலைகள் வாழவேண்டுமானல் கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்' என்ற உண்மையை அறிந்திருந்த ரசிகப் பெருமக்கள், 'புரட்சி நடிகர்' என்ற பட்டப்பெயரை எம். ஜி. ஆருக்கு அன்று வழங்கினர்கள். அது அவருக்கு எப்படிப் பொருந்துகிறது என்பதை இக் கட்டுரை விளக்குகிறது.

எம்.ஜி.ஆர். புர

ஒரு

ஆராய்ச்சி

ட்சி நம கரா?

தமிழகத்தின் தனிப்பெரும் நடிகர்களில் ஒருவரான எம். ஜி. ராமச்சந்திரன் தற்போது இங்கே நம் முன் நிற்கிறார்—புரட்சி நடிகராக.

'புரட்சி நடிகர்' என்ற பட்டம் இவருக்கு முற்றிலும் பொருந்தும் என்பதை எம்.ஜி.ஆர். பல படங்களில் ஏற்று நடித்த பாத்திரங்களையும் அவருக்குப் பக்கதுணையாக அப்படத்தில் நின்ற பாத்திரங்களையும் அழைத்து இங்கே பேச வைத்திருக்கிறோம்.

இந்தப் பாத்திரங்களின் வாய்மொழி மூலம் மேற்படி படத்தின் வசனகர்த்தாக்களின் மேற்கோள்களும் வருகின்றன.

பாத்திரங்களை ஏற்று நடித்தவர்கள் யார் என்பதைக் குறிக்க அடைப்புகளில் குறிப்பிட்டிருக்கும் நடிகர்களுடைய சொந்த அபிப்பிராயம் அல்ல இவை. அவர்கள் ஏற்று நடித்த பாத்திரங்கள்தான் பேசுகின்றனவேயன்றி அவர்கள் பேசுவதில்லை. இதேபோல வசனகர்த்தாக்களின் சொந்த அபிப்பிராயமாக அவர்களது மேற்கோள்களையும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லி விடுகிறேன்.

இந்தக் கட்டுரையில் — நாடகம் என்றும் சொல்லலாம் — புரட்சி நடிகர் நடித்த படங்களிலிருந்து 'மந்திரிகுமாரி'யையே ஆரம்பமாக வைத்திருக்கிறோம்.

'வடவனூர் சகோதரர்கள்' என்ற தலைப்பில் 1950-ம் ஆண்டு, ஜூன் இதழ் 'பேசும் பட'த்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த எம். ஜி. ராமச்சந்திரன்—சக்ரபாணி வாழ்க்கை வரலாற்றில் "சுருங்கச் சொல்லின் இவருடைய முழுத்திறனும் வெளிப்பட்ட முதல் படம் மருதநாட்டு இளவரசிதான்" என்று குறிப்பிட்டிருந்தோம்.

எனவே இளவரசியைத் தொடர்ந்து வந்த 'மந்திரிகுமாரி'யையே முதலாவதாகக் கொண்டு, சில முக்கிய படங்களை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த கட்டுரை ஆரம்பிக்கப்படுகிறது.

ஒவ்வொரு படமாக விவாதத்திற்கு கொண்டு வரப்பட்டு முடிக்கப்படுவதால், காட்சித் தலைப்புக்காக படத்தின் பெயரே உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

'நடிகர் திலகம்'—சிவாஜி- கணேசனைப் பற்றி 'சிவாஜி கணேசன் குற்றவாளியா?' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த கட்டுரையை நேயர்கள் படித்திருப்பார்கள். இந்தக் கட்டுரையின் வரிசையில் இடம் பெறும் இரண்டாவது கட்டுரை இது.

இதோ நாடகம் ஆரம்பமாகிறது.

திரையும் விலகி விட்டது.

காட்சி 1

மந்திரிகுமாரி

பார்த்திபன் (எஸ். ஏ. நடராஜன்) அவர் பெயர் : நாட்டின் தளபதி பதவி இடைக் காததால் அரண்மனை வாழ்வை வெறுத்து கொள்ளைக்காரனாக மாறுகிறான் அவன்.

அவனைப் பிடிக்கக் கிளம்புகிறான் தள பதியாகிவிட்ட வீரமோகன் (எம். ஜி. ஆர்.)

பார் : பணம்—பாவை—பச்சை ரத்தம்! என்றைக்கு இந்த நாட்டு மக்கள் என்னை அலட்சியப்படுத்தி வீரமோகனை தளபதி யாகத் தேர்ந்தெடுத்தார்களோ அன்று முதல் இவை மூன்றும் என் லட்சியங்களாகி விட் டன. அவர்களுடைய ரத்தத்தால்தான் என் அவமானத்தைக் கழுவிக்கொள்ள முடியும் என்று நினைத்து புரட்சிக்காரனாக மாறினேன். நான்தானே புரட்சி வீரன் இதில்?

வீரமோகன் : சிங்கங்கள் உலவும் காட் டில் திரியும் சிறு நரி. எண்ணிக்கையிலே குறைந்த ஒரு இதயமற்ற கூட்டம் வஞ்சகத் தால் வாழ்கிறது. நிரபராதிகளின் சொத்துக் களை சொந்தமாக்கிக் கொள்ளுகிறது. அநாதை களின் ரத்தத்தை அள்ளிக் குடிக்கிறது. அந்தக் கூட்டத்தின் தலைவன் நீயா புரட்சிக்காரன்?

பார் : புரட்சியில்லையா? நாட்டை விட்டு காட்டை அடைந்து, உங்களைக் கவிழ்க்க நான் செய்தது புரட்சியில்லையா?

அப்போது அங்கே வருகிறாள் அமுதவல்லி. வானத்தை விட்டுப் பிரியாத நீலவர்ணம்போல உள்ளத்தால் பார்த்திபனுடன் அமுதவல்லி இணைந்தவள். அவள் பார்த்திபனிடம் ஆத திரத்துடன் கூறுகிறாள்.

அமு : உங்கள்மேல் குற்றமில்லை. தவறான கருத்துக்களை நம்பிக் கொண்டு நீங்கள் செய் ததை சரியென்று சாதிக்கிறீர்கள். எல்லாம் விதியின் விளையாட்டு பிரபு. ஆனால் உங்கள் செய்கையை உலகம் ஒப்புக் கொள்ளாது!

பார் : உலகம் கிடக்கிறது! அதைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்.

பார்த்திபன் அவள் பேச்சை லக்ஷியமே செய்வதில்லை. மீண்டும் எதையோ பேசவந்த அமுதவல்லி, ஜீவரேகாவைக் கண்டு பேசாமல் நின்றுவிடுகிறாள்.

வீரமோகன் விளக்கம் தரப்போகும் சமயத் தில், அவனது அன்பைக் கவர்ந்த ஜீவரேகா 'கண்ணகி'போலப் பாய்ந்து வருகிறாள்.

ஜீவ : கிட்டியபதவி கிடைக்கவில்லை என் பதற்காக கொள்ளைக்காரனாக மாறி, காட்டிலே ஓடி ஒளிந்து திரிகிறாயே இதற்குப் பெயரா புரட்சி? மாற்றான் நேசித்த பங்கையை மனத் தாலும் நினைக்கக்கூடாது என்ற வழியிலிருந்து பிறழ்வதையா புரட்சி என்கிறாய்?

பார் : ஏன், உன் வீரமோகன்மட்டும் எப்படி புரட்சி வீரனாவான்?

வீரமோகன் : விளக்கம் தருகிறேன் கேள். கொடுங்கோலாட்சியை எதிர்த்து செய்வது தான் புரட்சி! நீ எதிர்த்தது உனக்கு பதவி, கொடுக்காத ஒரு நல்லாட்சியை! அதே பதவி என்னிடமிருந்து நீ செய்த சூழ்ச்சியால் பறிக் கப்பட்டபோது நான் கள்ளனாகவா மாறினேன்? கொள்ளையடிக்கவா புறப்பட்டேன்?

பார்த்திபனின் தந்தை - சூழ்ச்சியே உருவான வரும் அரண்மனை ராஜகுருவுமான அவர் அங்கு வருகிறார். வீரமோகனிடம் கேட்கிறார்.

ராஜ : ஏன், நாட்டை வீட்டு ஒட்டப்பட்ட நீ நள்ளிரவில் அரண்மனையில் வந்து குதிப்பது மட்டும் புரட்சியோ?



"மணிபுரியின் மகுடத்தைக் கைப்பற்ற எண்ணிய என் ஆசைக்கனவை தவிடு பொடியாக்கி விட்டான் பிரதாபன் - (எம். ஜி. ஆர்.) நான் செய்த புரட்சி பலிக்கவில்லை." 'சர்வாதிகாரி' மகாவர்மன் (நம்பியார்).

"கரிகாலன் (எம். ஜி. ஆர்.) இளவரசன் ஆனாலும் புரட்சித் தலைவன்" - மர்மயோகி (சாமா).

நான் நாட்டை அபகரித்தேன் சூழ்ச்சியால். தன் புரட்சியால் அதை அம்பலப்படுத்தி விட்டான் கரிகாலன் (எம். ஜி. ஆர்.) 'மர்மயோகியில் ஊர்வசி (அஞ்சலிதேவி).

உங்கள் சட்ட திட்டங்களின்படி அவர் கள்ளன். ஏழைமக்களுக்கு அவர் கடவுள்.

—'மர்மயோகி' கலா (மாதுரிதேவி)

ராணியின் நீதியும் சட்டமும் பாசி பிடித்த வழுக்கு நிலம் என்று புரட்சி செய்தான் கரிகாலன் - மர்மயோகியில் வீராங்கன் (சஹஸ்ரநாமம்).

வீரன்! திருடர்களைமட்டும் பிடிக்கவில்லை. என் மனதிலேயும் புரட்சி ஏற்படுத்தி விட்டார். - 'மதுரைவீர'னில் வெள்ளையம்மாள் (பத்மினி).

வீர: நீங்கள் மட்டும் நடு நிசியில் அந்தப்புரத்திற்குப் பிரவேசித்தது?

ஜீவரேகா ராஜகுருவிடம் சொல்கிறாள்.

ஜீவ: அவர் காண வந்தது என்னை?

ராஜ: நான் அங்கு சென்றதும் அரசனை........

வீர: கட்டாரியுடன் காணத் தான்! அப்படித்தானே?

ராஜ: கட்டாரி! அதைத்தான் அமுதவல்லியின் மார்பில் பாய்ச்சி விட்டேனே......

இந்த விவாதம் ஒரு முடிவுக்கு வருமுன் அரசர் அங்கு தோன்றுகிறார். அவர் வரவைக் கண்டு எல்லோரும் மௌனமாகின்றனர்.

ஜீவரேகா மட்டும் தங்கள் விவாதத்தைப்பற்றி, அரசர் கேட்டபடியால் சொல்கிறாள். அரசரும் ஒரு புன்னகை செய்துவிட்டு பேசுகிறார்.

அர: உண்மையில் இதில் புரட்சி செய்தவள் நீ தான்! புரட்சி செய்வதாகச் சொன்னபார்த்திபனை அடக்கிக்கொண்டு வந்த வீரமோகனின் மனதிலே 'புரட்சி'யை ஏற்படுத்தி விட்டாய். புரட்சியைத் தாங்கியிருப்பவன் தானே அந்தப் பட்டத்திற்கும் உரியவனாகிறான்!

அரசர் தங்கள் காதலையே குறிப்பிடுகிறார்கள் என்பதைக் கண்டு கொண்ட வீரமோகனும்-ஜீவரேகாவும் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொள்கின்றனர்.

அரசர் சொன்னதில் தவறு ஏதும் இல்லையே!

காட்சி 2

மர்மயோகி

அக்கிரமம் ஆட்சி செலுத்தும் போது, நீதிதேவதை விக் கண்ணீர் வடிப்பவர்களின் பக்க துணையாக நின்று சிரித்த போது, நேர்மை அங்கு தேய்ந்து போனபோது - பாய்ந்து வரும் ஒரு அம்பு அங்கு. அந்த அம்புக்குரியவன தான் - ஆயிரக்கணக்கான நொந்த உள்ளங்களின் இன்பக்கனவின் மூலசிற்பி; கருமேகங்களிடையே புதைந்து கிடக்கும் கீற்றுமின்னல் கரிகாலன் (எம். ஜி. ஆர்.) அவன் பெயர். ஆதாரமின்றி பேசுபவனே, ஆத்திரக்காரனோ அல்ல அவன்.

தன் கொடுங்கோலாட்சிக்கு எதிராக புரட்சி செய்த அவனை, தான் கொடுக்க வந்த பரிசைக்கூட, "மனதிலே ஈரம் கொஞ்சமுமின்றி மக்களைக் கசக்கிப் பிழிபவள் உங்கள் ராணி. கண்ணீரும் கம்பலையுமாக நாடு கதற கொடுங்கோல் செலுத்துபவள் உங்கள் ராணி. இந்தக் கரிகாலன் அவளை வணங்கமாட்டான். அவள் தரும் பரிசை என் கரங்கள் பெறாது" என்று ஏளனப் படுத்தி விட்டுச் சென்ற கரிகாலனை, சிறைபடுத்தச் சொன்னவள் ராணி ஊர்வசி (அஞ்சலிதேவி).

தன் உடல் நெளிவினால்-நடனத்தினால்-நயனங்களின் விஷப்பார்வையினால் மன்னரையே அகற்றி நாட்டை தன் வசமாக்கிக்கொண்ட நயவஞ்சக நாசக்காரி அவள்.

ராணியின் தளபதி வீராங்கன் (சஹஸ்ரநாமம்) ராஜவிசுவாசம் மிக்கவன். நாட்டின் ஊழல்களை விட, அவன் கருத்தைக் கவர்ந்தது ராணியின் கட்டளைகள் தான். கடமை வீரன் அவன்.

தன்னை கைது செய்யவரும் தளபதியிடம் கரிகாலன் பேசுகிறான், தன் கொள்கை விளக்கம் பற்றி.

கரி: தளபதியாரே! உங்கள் நீதியும் சட்டமும் பாசி படிந்த வழுக்கு நிலம். பஞ்சைகள் கதற, அவர்களை வதைக்கும் வஞ்சகக் கூட்டம் வாழ இடம் தரும் வார்த்தை ஜாலங்கள் உங்கள் சட்டம். ஏழை அலறிடும்போது அவர்களை எட்டி உதைக்கவும் தடியால் அடிக்

கவும் மண்டைகளைப் பிளக்கவும் உதவிடும் ஆயுதம் உங்கள் சட்டம். ஒன்று கேட்கிறேன் உங்களை! உழைப்பவன் ஒருவனிருக்க உண்பவன் மற்றொருவன். இதைத் தடுத்ததா உங்கள் சட்டம்?

கிடையாது! பின் நேர்மைக்காகப் போராடும் நாங்கள் ஏன் அதை மதிக்க வேண்டும்?

வீரா : ஆட்சிக்கு எதிராக யார் புரட்சி செய்தாலும் அதை கண்டு நான் சும்மா இருக்க முடியாது. புரட்சி வீரனை நீ நீதியை - சட்டத்தை மதித்து நடக்கக் கற்றுக் கொள்!

வீராங்கன் கரிகாலனைக் கைது செய்ய முயன்று தோல்வியடைய, அந்தப் பணியை ஏற்கிறாள் அவனது சகோதரி கலா (மாதுரிதேவி). கைதாக்கச் சென்ற கலா, ஒரு பெரிய உண்மையைக் கண்டாள். அவள் கரிகாலனைப் பற்றிப் பேசுகிறாள்.

கலா : பணம் படைத்தோரைப் பாதுகாக்கவும், பாமரரை வாட்டி எடுக்கவுமே பயன்படும் உங்கள் சட்டதிட்டங்களின்படி அவர் கள்ளன்! ஏழை மக்களுக்கு அவர் கடவுள்!

கரிகாலனின் ஆருயிர்த்தோழன் நல்லதம்பி (நம்பியார்). அவனும் பேசுகிறான் :

ந. த : அவருக்கு நான் நல்ல தம்பி. எனக்கு அவர் நல்ல அண்ணா! நாட்டுக்கும் ஒரு நல்ல அண்ணா!!

வீரா : ஆட்சியை எதிர்ப்பவனா நல்ல அண்ணா? புரட்சிக்காரன்!

கரி : நல்ல ஆட்சியை எதிர்ப்பவனல்ல! கொடுங்கோல் ஆட்சியை! புரட்சி நான் செய்வதாகச் சொல்லவில்லையே! நான் காட்டிலே வாழ்கிறேன். நாட்டிலே இருப்பதைவிட காட்டில் இருப்பது நல்லது என்று மக்கள்தானே என்னை அண்டுகிறார்கள்? காட்டை விட நாடே நல்லது என்பதை நிலைநிறுத்துவது தானே நீங்கள்?

ராணி : வாயை மூடு!

மர்மயோகியார் (சாமா) வருகிறார். மரணதண்டனை விதிக்கப்பட்டு, தூக்குக் கயிற்றிலே தொங்கத் தயாராக இருக்கும் கரிகாலனையும், அவனைச் சேர்ந்தவர்களையும். குழுமியிருக்கும் மக்களையும் பார்த்து மர்மயோகி பேசுகிறார். அவர்தான் ஊர்வசியால் கொல்லப்பட்ட - மாண்டு விட்டதாகக் கருதப்பட்ட மன்னர்.

மர்மயோகி : இந்தக் கரிகாலன் நாட்டின் இளவரசன். வீராங்கன் அவனது இளைய சகோதரன். நான்தான் மாண்டுபோன மன்னன்.

காட்டிலே ஒளிந்து வாழ்ந்து, மக்களுக்கு நல்லது செய்ய ஒரு நேர்மையான ஆட்சியை ஏற்படுத்த புரட்சி செய்தவன் கரிகாலன்தான். அவன் புரட்சி வீரனே!

குழுமியிருந்த மக்கள் கூட்டம் ஒரே குரலில் சொல்கிறது: 'புரட்சி வீரர்' கரிகாலன் வாழ்க! வாழ்க புரட்சிவீரன்!

காட்சி-3

சர்வாதிகாரி

'மந்திரிகுமாரி' வீரமோகன், 'மர்மயோகி' கரிகாலனாகி, இங்கு சர்வாதிகாரியாகி விடவில்லை. அதற்குப் பதிலாக மணிபுரியைக் கவரும் மந்திரி மஹா வர்மனின் (நம்பியார்) சூழ்ச்சியை எதிர்த்துப் போராடுபவனாக வருகிறான் பிரதாபன் (எம். ஜி. ஆர்).

மர்மயோகியில் நல்லதம்பியாக வந்து, கரிகாலனுக்கு உதவிய நம்பியார்தான் இதில் மந்திரி. அதில் கரிகாலனைத் தூக்குக் கயிற்றிலே தொங்க உத்திரவு போட்ட அஞ்சலிதேவிதான் இதில் பிரதாபனின் ஆசை நாயகி!

மந்திரி : பிரதாபரே! சென்ற சமயம் (மர்மயோகியில்) நான் உங்களுக்கு உதவியதைக்கூட மறந்து, என்னையே ஒழிக்கப் பார்க்கிறீரே!

பிரதாபன் : ஆமாம்! ஆனால் என்னைத் தூக்குக் கயிற்றிலே தொங்க உத்திரவு போட்டவரைத் (மர்மயோகியில்) தானே நான் மணக்கத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். இதைக் கவனித்தீர்களா?

மந்திரி : புரட்சிதான்! ஒரே புரட்சிதான்!

பிரதாபன் : உங்கள் எண்ணத்திலே ஏற்பட்ட விபரீதப் புரட்சியை விடவா?

மீனா (எம். சரோஜா) அவள் பெயர். மந்திரி அவளை வைத்து தன் அரசியல் சதுரங்கத்தில் பகடையாட விரும்பினான். அவள் தன் உயிரை விட உயரிய கொள்கை மேலென்று நினைத்து உயிர் விட்டவள்.

மந்திரியின் கிண்டலான பேச்சு அவளது சிந்தையைக் கவருகிறது. சீறி வருகிறாள்.

மீனா : பிரதாபன் செய்வது நியாயப் புரட்சி. நியாயத்தை ஒழிக்க நீர் செய்வதற்குப் பெயர் புரட்சி அல்ல. சூழ்ச்சி! அநியாயத்தை எதிர்ப்பதெல்லாம் ஏற்கக்கூடிய புரட்சிதானே? பிரதாபன் தான் இதில் உண்மையான புரட்சிக்காரர்!

மீனா போய் விடுகிறாள். மந்திரி மௌனமாகிறான். மௌனம் சம்மதத்தின் சின்னம். மந்திரி உண்மைப் 'புரட்சி வீரனை' ஒப்புக்கொண்டு விட்டார். பிரதாபன் தவிர வேறு யார் இருக்க முடியும்?

காட்சி 4

எல்லோரும் வந்தனர்

'ஜெனோவா' (பி. எஸ். சரோஜா) வந்தாள். ஆர்த்தின நாட்டு அரசனும் தன் ஆசைக் காதலனுமான சிப்ரஸோ (எம். ஜி. ஆர்.), மந்திரி கோலோவின் (வீரப்பா) துர்ப்போதனையால் தளபதி நாட்டைக் கவிழ்க்கச் செய்த சதியை அம்பலப்படுத்தி, அந்த விபரீதப் புரட்சியை ஒடுக்கிய தன் கணவனின் 'வீரப் புரட்சி' பற்றி கூறினாள்.

'சக்ரவர்த்தி திருமக'ளும் (அஞ்சலி தேவி), 'மகாதேவி'யும் (சாவித்திரி) வந்தார்கள். வெள்ளையம்மாளும் ('மதுரை வீரன்' பத்மினி) வந்தாள்.

தெள்ளென அவர்கள் அனைவரும் முறையே உதயசூரியன் - காண்டீபன் - மதுரைவீரன் (மூன்றும் எம். ஜி. ஆர். தான்) ஆகிய மூவுருவில் நீதியை நிலைநாட்டச் செய்த புரட்சியைக் கூறுகின்றனர்.

இவர்களுக்கெல்லாம் சிகரமாக மன்னன் மார்த்தாண்டன் (எம் ஜி.ஆர். 'நாடோடி மன்னன்') வந்தான்.

புரட்சி ஊர்வலமே நடத்தி - ஆட்சியிலே புரட்சியும் - மக்கள் மனதிலே எழுச்சியையும் தன் மனதிலே நிறைவும் ஏற்படுத்திய வீராங்கனே (எம்.ஜி.ஆர்.) புரட்சி வீரன் என்பதை அழுந்தக்கூறினான்.

எல்லோரும் 'புரட்சி வாழ்க' என்று கூறியபோது அந்தப் பாத்திரங்களிலே தோன்றி நடித்த எம். ஜி. ஆர். தான் ரசிகர்களின் முன்பு 'புரட்சி நடிக'ராகத் தோன்றினார். ரஸிகர்கள் கண்ட அக்காட்சி, அவர்கள் மனதிலே இன்ப நிறைவை ஏற்படுத்தியது.

ரஸிகர்கள் பாத்திரதாரியின் பெயரில் அவரை அழைக்கவில்லை.

"புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்' என்றுதான் கூறினார்கள். அதைக் காட்டவே மதுரையிலே கலைப்பெருவிழாவையும் நடத்தினார்கள். ஜனநாயக நாட்டிலே எந்தப் பட்டத்தையும் விட, மக்கள் கொடுக்கும் பட்டம்தான் சிறந்தது. அதைப் 'புரட்சி நடிகர்' என்ற உருவில் பெற்றிருக்கிறார் எம். ஜி. ஆர்.

தவறு—

'புரட்சி நடிகர்' எம். ஜி. ராமச்சந்திரன்! ★



LTS. 567-543 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.

லக்ஷ்மிபிரபா சொல்கிறார்

பஞ்சாபி உடையில், கையில் பாட்மிண்டன் மட்டையுடன் நிற்கும் நான் எப்போதும் இப்படி இருக்க மாட்டேன். பாட்மிண்டன் விளையாடப் போகும்போது மட்டும் தான் பைஜாமையும் கமீஸையும் துப்பாட்டாவையும் அணிந்து 'பஞ்சாபி' கோலம் பூண்டு விடுவேன்.

இம்மாதிரியான உடை கல்லூரி மாணவிகளுக்கும் காரியாலயங்களில் பணி புரியும் மாதர்களுக்கும் மிகப் பொருத்தமாக இருக்கும்.

தலையை நான் பின்னி, வளைத்துக் கட்டி, பூவை ஒரு புறம் தோளில் தொங்கும்படியாக வைத்திருக்கிறேன். இம்மாதிரியான உடைக்கு இரட்டைப் பின்னலும் பின்னி தொங்கவிட்டுக் கொள்ளலாம். அல்லது பின்னலை இரண்டாக மடித்தும் செருகிக் கொள்ளலாம்.

காதில் தங்க வளையங்கள் போட்டுக்கொள்வது இதற்கு எடுப்பாக இருக்கும். கைகளில் அதிகமாக வளையல்கள் அணியாமலிருப்பதும் இத்தகைய உடைக்கு எழிலை மேலும் கூட்டும்.

ஆடை அலங்காரம்

நடுவில் சிகப்பு, இரு ஓரங்களில் பச்சை உடலும், அதன் குறுக்கே சரிகையினுல் இழை ஓட்டப்பட்டு, கட்டங்கள் போடப்பட்டதும், புடவையின் ஓரத்தில் சரிகை பார்டரும் கொண்ட சிப்பான் ஸில்க் புடவையை நான் அணிந்திருக்கிறேன். புடவைக்குப் பொருத்தமாக இருக்க வேண்டி, சரிகைக் கட்டங்கள் கொண்ட சிவப்பு நிற காஞ்சீபுரம் பட்டுச் சோளி அணிந்திருக்கிறேன். காதில் ஜிமிக்கியும் கழுத்தில் தங்க நெக்லேசும் அணிந்துள்ள நான், கல்யாண வைபவங்களுக்கு இம்மாதிரி என்னை அலங்கரித்துக் கொண்டு செல்வதுண்டு

எங்கள் குடும்பத்தில் நடக்கும் சில விசேஷ வைபவங்களுக்கும், ஏதேனும் திருவிழாக்களில் கலந்து கொள்ளும் போதும் நான் இம்மாதிரி உடைகளையும், அணிகளையும்தான் தேர்ந்தெடுப்பது வழக்கம்.

நான் இங்கே அணிந்திருப்பது காஞ்சீபுரம் பட்டுப் புடவை. கெட்டிக் கரை கொண்ட இந்த நீலநிறப் புடவைக்குப் பொருத்தமாக இருப்பதற்காக சிவப்பு நிறத்தில் எனது சோளியைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். சரிகைக் கட்டங்கள் போடப்பட்ட இந்தச் சோளி ஜார்ஜெட் வகையைச் சேர்ந்தது.

இந்த நிற புடவைக்கு, மஞ்சள், ரோஸ் முதலிய வெளிர் நிற சோளிகளும் எடுப்பாக இருக்கும்.

கழுத்தில் சிவப்புக் கற்களைச் சுற்றி வெள்ளைக் கற்கள் பதிக்கப்பட்ட நெக்லேஸ் அணிந்திருக்கிறேன். ஒரு கையில் வளையலும், மற்றொரு கையில் 'பிராஸ்லெட்'டும் போட்டிருக்கிறேன்.

கூந்தலை நேர்வகிடெடுத்து வாரி, கூந்தலை மடித்துக்கட்டி, பூ வைத்துக் கொண்டிருக்கிறேன். இம்மாதிரியான உடைக்கு தலையை ஒத்தைப் பின்னலாகப் பின்னி, குஞ்சம் வைத்தும் தொங்க விட்டுக் கொள்ளலாம்.

சரிகைப் பூ வேலைப் பாடுகள் கொண்ட பச்சை நிற கொள்ளே காலம் புடவையை இங்கே நான் கட்டியிருக்கிறேன்.

பச்சை நிறப் புடவைக்கு சிவப்பு அல்லது மஞ்சள் நிற சோளி எடுப்பாக இருக்கும். நான் இங்கே மஞ்சள் நிறத்தில் மைசூர் ஜார்ஜெட் சோளி அணிந்திருக்கிறேன்

இரண்டு கைகளிலும் நிறைய தங்க வளையல்களை போட்டுக் கொண்டிருக்கிறேன். கழுத்தில் வெள்ளைக் கற்கள் பதிக்கப்பட்ட நெக்லேசும், மெல்லிய தங்கச் சங்கிலியும் அணிந்திருக்கிறேன். காதில் கம்மல் மட்டும் போட்டிருக்கிறேன்.

கூந்தலைப் பற்றிக் கேட்கிறீர்களா? தலையைப் பின்னி, பிச்சோடாவாகப் போட்டு பூ வைத்திருக்கிறேன். சோளியின் நிறம் மஞ்சள் நிறத்தில் அமைந்திருப்பதால், மஞ்சள் நிற கனகாம்பரத்தையே கூந்தலில் வைத்துக் கொள்ள தேர்ந்தெடுத்திருக்கிறேன்.

புதுப்பட ஆரம்ப விழாக்கள், வரவேற்புகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு இம்மாதிரி நான் செல்வதுண்டு. சில சமயங்களில் படங்களுக்கு செல்லும் போதும் என்னை நான் இப்படி அலங்கரித்துக் கொள்வேன்.

சரிகை இழைகள் கொண்டு, பூவேலைகள் செய்யப்பட்டுள்ள - அகலமான கரையைக் கொண்டிருக்கும் கிளாஸ் நைலான் புடவையை இங்கு நான் அணிந்துள்ளேன். சிவப்பு நிறப்புடவைக்கு எடுப்பாக இருப்பதற்காக, ஆகாய வர்ணத்தில் மைசூர் கிரேப் ஸில்க் சோளியை அணிந்திருக்கிறேன்.

கழுத்தில் வெள்ளைக் கற்கள் பதிக்கப்பட்ட தங்க நெக்லேசும், புலி நகம் பதிக்கப்பட்ட தங்கச் சங்கிலியும் போட்டிருக்கிறேன். காதில் ஜிமிக்கி அணிந்திருக்கிறேன். இடது கையில் கடிகாரமும், வலது கையில் தங்க வளையல்களும் போட்டுக் கொண்டிருக்கிறேன்.

தலையை ஒத்தைப் பின்னலாகப் பின்னித் தொங்கவிட்டு, பூவைத்திருக்கிறேன். இரட்டைப் பின்னலாகவோ, அல்லது பிச்சோடாவோகூட இம்மாதிரி உடை, அணிகளுக்குப் போட்டுக் கொள்ளலாம், அது கவர்ச்சிகரமாக இருக்கும்.

சாதாரணமாக என் சிநேகிதனைக் காணப் போகும்போதும், சினிமா, நாடக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போதும் இம்மாதிரி என்னை அலங்கரித்துக் கொள்வதுண்டு.

புதிய வெளியீடுகள்

பெரிய கோயில்

தயாரிப்பு : அருணசலம் பிக்சர்ஸ்
டைரக்ஷன் : ஏ. கே. வேலன்
நீளம் : 13,927 அடி
வெளியிட்ட தேதி : 16 - 9 - 58
கதை, வசனம் : ஏ. கே. வேலன்
நடிகர்கள் : பிரேம் நஸீர், டி. ஆர். நடராஜன், வி. கே. ராமசாமி, கண்ணும்பா, எம். என். ராஜம்.

மோகனசுந்தரம் என்ற ஒரு ரௌடி புலவரின் வீட்டிற்குச் சென்று அவரது இரண்டாவது மகளைப் பெண் கேட்கிறான். அதற்குப் பதிலாக அவனை அவமானப் படுத்தி அனுப்புகிறாள் புலவரின் மூத்த மகள் செல்லம். இதற்குப் பழிக்குப்பழி வாங்குவதற்காக செல்லத்தின் குடும்பத்தையே ஒழித்துக் கட்ட முயற்சிக்கிறான் மோகன். செல்லத்தின் கணவன் முத்தையன் சிறந்த பண்புடையவன்.

மோகன் ஒரு கஞ்சா வியாபாரி. திருட்டுத்தனமாக தான் வாங்கி வந்த கஞ்சாப் பெட்டியை முத்தையனுக்கு மாற்றிவிட்டு, அவனைப் போலீசில் சிக்க வைத்து விடுகிறான். செல்லத்தின் தங்கை குமரியையும், குழந்தையையும் தன் இருப்பிடத்தில் சிறை வைக்கிறான் மோகன்.

பெற்ற குழந்தையைக் காப்பாற்ற சிறையிலிருந்து தப்புகிறான் முத்தையன். ஆனால் அவனும் செல்லமும் கூட மோகனிடம் அகப்பட்டுக் கொள்கின்றனர். கடைசியில் முத்தையனின் தாயார் போலீஸாரின் உதவியால் தன் குடும்பத்தை மோகன் பிடியிலிருந்து விடுவிக்கிறாள். மோகன் கைதாகிறான்.

'நான் யாருன்னு தெரிஞ்சு போச்சா!' ஏஎல்எஸ். 'திருடாதே' படத்தில் எம். சரோஜா, தங்கவேலு.

விமர்சனம்

செல்லத்தின் தங்கையை எப்படியாவது மணந்து கொள்ள வேண்டும் என்று மோகனசுந்தரம் பிடிவாதம் செய்து, மறுக்கப்பட்டதன் காரணமாக அந்தக் குடும்பத்தையே அழிக்க முற்படுவதற்கு ஆதாரமாகக் கதையில் அஸ்திவாரமில்லை. அந்தப் பெண்ணை முன்பே அவன் எங்காவது பார்த்துக் காதலித்து, அவளிடம் அவமானப் பட்டதாகக் காட்டியிருந்தால் இந்த

அடிப்படைக் குறை நிவர்த்திக்கப் பட்டிருக்கும். முத்தையனின் குடும் பத்தினர் ஒரு காரணமுமில்லாமல் மோகனசுந்தரத்தின் சூழ்ச்சிகளால் அவதிப்படுவது கற்பனைக்கேற்ற இயற்கையாக இல்லை. கதையின் எல்லா சம்பவங்களும் தனித்து நிற்கின்றன. டைரக்ஷனிலும் எடிடிங்கிலும் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. கதை, வசனம், பாடல்கள், கலைநுணுக்கம், நடிப்பு முதலிய எல்லாக் கோணங்களிலும் சுமாரான படம் பெரிய கோயில்.

மனமுள்ள மறுதாரம்

தயாரிப்பு : பத்மா பிலிம்ஸ்
டைரக்ஷன் : டபிள்யூ ஆர். சுப்பராவ் - எம். எஸ். ராமனாத்
திரைக்கதை, வசனம் : மாறன் எம். ஏ.
நீளம் : 15,688 அடி.
வெளியிட்டதேதி : 19-9-58.
நடிகர்கள் : பாலாஜி, தங்கவேலு, சரோஜாதேவி, காமினி.

வேற்றூருக்கு மாற்றுதலான சேகருக்கு அவனது நணபர்கள் அளித்த பிரிவுபசாரவிருந்திற்குத் தன்மனைவி கோமதியுடன் போய் விட்டுத் திரும்பிய சேகர், தன் வீடு தீப்பற்றி எரிவதைக்கண்டு திகைக்கிருன். திடீரென்று நெருப்பில் பாய்ந்து உள்ளே தொட்டிலில் படுத்திருந்த குழந்தையைத் தீயிலிருந்து காப்பாற்றிய கோமதி தீப்புணகளால் இறந்து விடுகிருள். குழந்தை வாசுகியை மாமனுர் வீட்டில் விட்டுவிட்டு சென்னைக்குவந்த

G.P.

பொழுது போக்குக்கான

துப்பறியும் நாவல்கள்

	ரூ—காசு
சூரக்கோட்டை மர்மம்	1. 50
மர்ம மனைவி	1. 50
மாயச் சமாதியில் மர்மப் புதையல்	1. 50
கவிழ்ந்த ரயிலில்...	1. 00
திரிசங்கு சொர்க்கம்	1. 50
மங்களவிலாஸ் மர்மம்	1. 25
மலை வீட்டு மங்கை	1. 50
மலையாளச் சீட்டின் மர்மம்	1. 50
துப்பறியும் ராஜு	1. 00
கொலைப்பித்தன்	1. 25
மாய மனிதர்கள்	1. 25
ரகசிய அறை	1. 50
துப்பறியும் காதலி	1. 50
எமகாதகன்	1. 25
பாரிஸ்டர் பரிமேலழகர்	1. 50
புலிப்பாண்டியன்	1. 50
மர்மக் கணவன்	1. 50
மலபார் ஹோட்டல் மர்மப் பெண்மணி	1. 50
இறந்தவளுக்கு விருந்து	1. 50
நடுநிசி நாயகி	1. 50
மர்மமாய் மறைந்த மாப்பிள்ளை	1. 50
அபிராம சுந்தரியின் குடும்ப ரகசியம்	1. 50
நரியம்மா விடுதி நங்கை	1. 50
சவுக்கடி சாந்தப்பா	1. 50
பாதாள பவனம்	1. 50

வியாபாரிகளுக்கு 25 சத விகிதம் கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. இல்லை.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

சேகர், அங்கு அறிமுகமான உஷாவைக் காதலித்து மணக்கிறான். அவன் முன்பே மணமானவன் என்பதையும், அவனுக்கு ஒரு மகள் இருக்கிறாள் என்பதையும் ஒரு கடிதத்தினால் அறிந்த புதுமைப் பெண் உஷா, கணவன் மீது கோபித்துக்கொண்டு தாயார் வீட்டிற்குப் போய் விடுகிறாள். ஆனால் அவள் தாயார் அவளுக்கு நல்ல புத்திசொல்லி மீண்டும் கணவனிடம் திரும்பச் சொல்கிறாள். உஷாவும் கணவன் வீட்டிற்கு வருமுன் ஓர் அனாதைக் குழந்தை அவளிடம் கிடைக்கிறது. அது சேகரின் மகள் தான் என்பதும் உஷாவுக்குத் தெரிகிறது. வாசுகி என்ற அந்தக் குழந்தையுடன் சேகரிடம் வந்த உஷா, அந்தக் குழந்தை தன் முதல் கணவனின் அன்பளிப்பு என்று கூறி அவனைப் பழிவாங்குகிறாள். இந்த மனோவேதனையும் அவமானமும் தாங்காத சேகர் மனைவி உஷாவை வீட்டைவிட்டுத் துரத்துகிறான். குழந்தை வாசுகியையும் அடித்து வெளியே தூக்கி எறிகிறான். ஆனால் அப்போது வாசுகி அணிந்திருந்த டாலரிலிருந்து அவள் கோமதியின் குழந்தை என்று அறிந்துகொண்டு, குழந்தையையும் மனைவியையும் தேடிக்கொண்டு ஓடுகிறான். வழியில் மயக்கமுற்றுக்கிடந்த குழந்தையை சேகரும் உஷாவும் எடுத்து அவள் இறந்துவிட்டதாகக் கதறும்போது வாசுகி விழித்துக் கொள்கிறாள். எல்லாம் சுபமாக முடிகிறது.

விமர்சனம்

வாசுகியை வேலைக்காரியிடம் ஒப்படைத்து விட்டு கோமதி கணவனுடன் செல்வதும், திரும்பும்போது வீடு தீப்பற்றி எரிவதும், கோமதி மட்டும் தீயில் குதிப்பதும் இயற்கையாக இல்லை. இதைப் போலவே கதையின் பல சம்பவங்கள் நிர்ப்பந்தமாகத் திணிக்கப்பட்டவை போலக் காணப்படுகின்றனவேயன்றிக் கதையுடன் ஒட்டவில்லை. தங்கவேலு - முத்துலக்ஷ்மி - சுசிலா

இவர்களின் ஹாஸ்யம் படத்திற்கு நல்ல தெம்பூட்டுகிறது; ஆனல் சற்றே மிகையாக இருக்கிறது. பாலாஜி ஆரம்பத்தில் சில இடங்களில் 'ஒவ'ராக நடித்தாலும் கடைசியில் கச்சிதமாகச் சமாளித்திருக்கிருர். சரோஜாதேவியின் தமிழ் உச்சரிப்புத்தான் சகிக்க முடிவதில்லை. எடிடிங்கிலும் டைரக்ஷனிலும் நிறைய குறைகள் உள்ளன. ஒரே ஷாட்டைப் பாடல்களில் இரண்டு மூன்று முறை உபயோகித்திருக்கின்றனர். மதுரைத் திருவிழாக் காட்சிகள் தத்ரூபமாக இல்லாததுடன் வளையல் கடைக் காட்சி போன்ற அனுவசியக் காட்சிகளும் நீக்கப்பட்டிருக்கலாம்.

நரசுவின் 'ஸ்ரீவள்ளி'யில் பத்மினியுடன் பால வள்ளியாக நடிக்கிருள் பேபி எம். எஸ். மாலதி.

பக்த ராவணு

தயாரிப்பு: ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்
டைரக்ஷன்: கே. சங்கர்
நீளம்: 15,662 அடி
வெளியிட்ட தேதி: 19-9-58
வசனம்: வலம்புரி சோமனுதன்
நடிகர்கள்: என். டி. ராமராவ், ஏ. நாகேஸ்வரராவ், ரங்கராவ், ஜமுனு, சரோஜாதேவி, ஹேமலதா.

தாயாரின் சைகத லிங்க பூஜைக்குச் சமுத்திர ராஜனுல் பங்கம் ஏற்படவே, அன்னையின் ஆவலைப் பூர்த்தி செய்ய ஆத்மலிங்கத்தையே பெற்று வர பரமசிவனைக் குறித்துக் கடுந் தவம் புரிந்த இராவணன், மகாவிஷ்ணுவின் மாயையால் மனம் மாறி, சிவபெருமான் நேரில் தோன்றியதும் அவரிடம் பராசக்தியாம் பார்வதியை யாசிக்கிருன்.

இந்த ஜோடியின் ஆனந்தத்தைக் கவருவது எதுவோ? 'புதுமைப் பெண்'ணில் எஸ். எஸ். ஆர்., ராஜம்.

அன்னை பார்வதியை அவனிடமிருந்து விடுவிக்கச் சூழ்ச்சி செய்த நாரதர், இராவணனிடம் வந்து அவன் பெற்றது மகாகாளியன்றிப் பார்வதியல்ல என்கிருர். அவளைவிட்டு விட்டு

பார்வதியைத் தேடி நாரதருடன் சென்ற இராவணன் மண்டோதரியைக் கண்டு மையல் கொண்டு, அவளே பார்வதியென நினைத்து, அவளையே மணந்து கொண்டு லங்காபுரிக்கு வருகிறான். பார்வதியை இராவணன் மணந்து கொண்டான் என்று நினைத்த அவன் தாய் கைகசி மனங்குமுறும் போது நாரதர் அங்கேவந்து உண்மையைக் கூறுகிறார். மீண்டும் ஆத்மலிங்கத்துக்காகத் தன்னையே பலியிட்டுத் தவம் செய்த இராவணன் அதைப்பெற்று வரும்போது, வழியில் சந்தியாவந்தனம் செய்வதற்காக அதை ஒரு சிறுவனிடம் கொடுக்கிறான். சிறுவனாக வந்த வினாயகர் ஆத்மலிங்கத்தை அங்கேயே பிரதிஷ்டை செய்து விடவே அதைப் பெயர்க்க முடியாமல் இராவணன் ஆத்மபலி கொடுக்க முயற்சிக்கும்போது பரமேஸ்வரன் மீண்டும் தோன்றி அவனைச் சமாதானப்படுத்தி, 'மகாபலேஸ்வரம் என்ற அந்த இடம் பூகைலாசமாகத் திகழட்டும்' என்று கூறி மறைகிறார்.

விமர்சனம்

சம்பூர்ண ராமாயணத்தில் ராமனாக நடித்த ராமராவை இதிலே அசல் இராவணனாகக் காணுகிறோம். ஜாஜ்வல்யமான உடையிலே கவர்ச்சிகரமாகக் காட்சியளிக்கிறார் ஜமுனா. காட்சி ஜோடனைகள் அழகாக உள்ளன. பக்தராவணா ஓட்டு மொழிப் படம். ஒரு தெளிவான புராண சித்திரம். டப்பிங்கில் குறைகள் உள்ளன.

(டீலக்ஸ்) தானாகவே 50 முறை சுடும் பிஸ்டல்

லைசென்ஸ் தேவையில்லை. தானாகவே இயங்கி, 50 முறைகள் சுடக்கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல். இது வெடிக்கும்போது வரும் பயங்கர ஒலியும், தீப்பொறிகளும், திருடர்களையும் வன விலங்குகளையும் பயப்படச் செய்யும். சினிமா நாடக நடிகர்களுக்கு முற்றிலும் பயன்படக்கூடியது. விரோதிகளிடமிருந்து தப்பவும் மற்றும் இதுபோன்ற சந்தர்ப்பங்களுக்கும் உங்களுக்கு சிறந்த துணை இது. விலை ரூ. 10/50. வி. பி. பி. சார்ஜ் ரூ. 2/50. 25 ரவைகள் இலவசம். அதிகப்படி ரவை டஜன் ஒன்றுக்கு விலை ரூ. 1. பிஸ்டல் கேஸ் விலை ரூ. 3. பிஸ்டலை சுத்தம் செய்யும் எண்ணெய் ஒரு சீசா ரூ. 1. (திருப்திக்கு உத்தரவாதம். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்.)

எலக்ட்ரிக் & ரேடியோ கைட்: சிறந்த மெக்கானிக்காக மாற உதவும் புத்தகம். 117 படங்கள் கொண்டது. ரூ. 15. செலவில் வீட்டிலேயே ரேடியோ தயாரிக்கவும், மற்றும் ரேடியோ ரிப்பேர் செய்வது, வயரிங், எலெக்ட்ரிகெல் மெகானிஸம் மற்றும் மின்சார சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள உதவும் புத்தகம். வேறு தொழில்கள் பற்றியும் கற்கலாம். புதுப்பிக்கப்பட்ட பதிப்பு ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1. தையற்கலையும், துணிகள் கத்தரிப்பதும் ரூ. 4. சோப்புகள் தயாரிப்பது ரூ. 3. புகைப்படக்கலை ரூ. 3. வாசனை திரவியம் செய்யும் முறை ரூ. 1-50. ஒரே மாதத்தில் ஹிந்தியைக் கற்க உதவும் புத்தகம் ரூ. 4. திருமண வாழ்க்கையின் நுணுக்கங்கள் 88 படங்களுடன் ரூ. 5. வி. பி. பி. சார்ஜுகள் ரூ. 1-25 ஒன்று முதல் மூன்று புத்தகங்களுக்கு.

TARUN TRADERS. (P.P.) P. B. 19 ALIGARH (INDIA)

"GOKUL"
SANTOL
TOILET POWDER
T.S.R'S
GOKUL
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
Padmini Priyadarsini
டி.எஸ்.ஆர்.& கோ



பார்வதி - கணவனை இழந்த அவளுக்கு ஏராளமான செல்வம் இருந்தது, மக்கட் செல்வம் தவிர. அவளது தணியாத ஆசை தனது சுவீகார புத்திரனுக்கு ஒரு அழகான பெண்ணை - குலம் தழைக்க ஒரு குழந்தையைப் பெற்றுதரும் பெண்ணை, மணம் செய்து கொடுத்து மகிழவேண்டும் என்பது.

கண்ணன் - பார்வதியின் சுவீகார புத்திரன். அவளது அண்ணன் மகன். கல்லூரியில் காதலித்த வசந்தாவை அவன் மணக்க விரும்பினான். வீட்டைவிட்டு வெளியேறினான் - பார்வதி அதற்கு சம்மதியாததால்.

வசந்தா - ஏழைப் பெண். ஆனால் எழிலில் தாமரை மலர்; பண்பில் இமயம்போன்றவள். தான் ஒரு வயோதிகனுக்கு மணமுடிக்கப்படுவதை அறிந்த அவளும் வீட்டை விட்டு வெளியேறினாள். அன்பினால் கட்டுண்ட அவ்விருவரும் வசந்தாவும் - கண்ணனும், பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்.

சென்னையில் அவர்கள் குடியிருந்த வீட்டிலிருந்தவரின் குழந்தை தன் தாயைவிட வசந்தாவிடம் அன்பை அதிகம் சொரிந்தது. குழந்தையை தன் 'பேரன்' என்று எண்ணிய பார்வதி, கோயிலுக்கு எழுத விருந்த சொத்தை கண்ணனுக்கு எழுத முடிவுசெய்துகொண்டாள். ஆனால் ஒருநாள் குழந்தை உண்மைப் பெற்றோர்களிடம் போய்விட்டது

பங்கஜத்திடம் தஞ்சம் புகுந்தான் கண்ணன். அவள் படங்கள், நாடகங்களுக்குத் தன் குழந்தையை இரவல் கொடுப்பவள். அவளது குழந்தை கண்ணனின் குழந்தையாக பார்வதியின் முன் கொண்டு வரப்பட்டது. போலி நாடகமான இது ஒரு நாள் அம்பல



மாயிற்று. அன்று மற்ெருரு உண்மையும் வெளியாயிற்று. பாருவின் சிந்தை குளிர வைக்க — வசந்தா கர்ப்பமுற்றிருக்கும் செய்தி கிடைத்தது. "மாமியார் மெச்சும் மருமக"ளாளுள் வசந்தா.

ஏவி. எம்.முக்காக கிருஷ்ணன் — பஞ்சு தயாரித்திருக்கும் 'மாமியார் மெச்சின மருமகள்' படக் கதையின் சாராம்சம் இது. இதன் டைரக்ஷனும் 'இரட்டையர்' களுடையதுதான். எம். என். ராஜம் (வசந்தா), பார்வதி (ஜி. வரலக்ஷ்மி), பங்கஜம் (தாம்பரம் லலிதா), கண்ணன் (ராஜேந்திரன்), பக்கிரிசாமி, ராமராவ் முதலியோர் நடிக்கும் இது இம்மாதம் வெளிவருகிறது.

பாத்திரம் பிறந்தது



'ரத்த பாசம்' என்ற அற்புதமான—உணர்ச்சி வசப்படுத்தக் கூடிய—கதையை எழுதி 'ரத்தபாசம்' ஸ்ரீதர் என்று ரசிகப் பெருமக்களால் பாராட்டப்பட்ட இளைஞர் ஸ்ரீதர், கதாசிரியர்—வசனகர்த்தாவாக இருந்து, தயாரிப்பாளர்களில் ஒருவராகி, இன்று டைரக்டர் ஸ்தானத்தையும் எட்டிப் பிடித்திருக்கிறார். படிப்படியாக உயர்ந்திருக்கும் இந்த இளைஞரின் டைரக்ஷனில், அவர் தயாரிப்பிலும் பங்கு கொண்டுள்ள வீனஸ் பிக்சர்ஸின் "கல்யாணப் பரிசு" தமிழ்ப்படம் தயாராகி வருகிறது. இதுவரை ஸ்ரீதர் எழுதிய கதைகளில் வரும் பாத்திரங்கள், அவைகளின் குண விசேஷத்தால் நம் உள்ளத்தைப் பிழிந்தெடுத்திருக்கின்றன. அவர் அமைக்கும் பாத்திரங்களின் மனோபாவத்தை அளவிடவே முடியாது. இந்தப் படத்திலும் ஒவ்வொரு பாத்திரமும் நம்மை

பரணிகுமார்



இவர்தான் கதை-வசனகர்த்தா, தயாரிப்பாளர், டைரக்டர் ஸ்ரீதர்.

உணர்ச்சிவசப் படுத்தும் என்பதோடு, இந்தக் கதையின் தலைப்பு சம்பவம் இருக்கிறதே. அந்தக் கட்டத்திலேயே - தலைப்பிலேயே ஒரு புதுமையைக் காணப் போகிறார்கள் ரசிகர்கள் என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

''எதிர்பாராதது கதைக்குப் பிறகு யாருமே என்றுமே மறக்க முடியாத ஒரு பாத்திரத்தை அமைத்து, எளிதில் புரிந்து கொள்ள முடியாத சம்பவத் திருப்பங்களால் ஒரு சிறந்த கதையை அமைக்க முடிவு செய்தேன். இன்று என் சிந்தனைக்கு முடிவு கண்டு விட்டேன். நான் தேடிய ஒரு பாத்திரம் - என்னை ரொம்பவும் கொடுமைப்படுத்திய பிறகு - கடைசியில் கிடைத்து விட்டது'' என்று மகிழ்ச்சியோடு நண்பர் ஸ்ரீதர் கூறினார். அவர் விரும்பிய பாத்திரம் பிறந்த விதத்தில் ஒரு சில பகுதிகளை மட்டும் தான் நீங்கள் இங்கே படங்களாகப் பார்க்கிறீர்கள்.

நான் தேடும் 'அவள்' எங்கே இருக்கிறாள்?

ஸ்ரீதர் 'கல்யாணப் பரிசு' கதையைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பித்த போது. மற்ற அலுவல்களிலிருந்து பூரண ஓய்வெடுத்துக் கொண்டார். சிந்தனை உருவாக 'தனிமை' அவசியமல்லவா? பெங்களூர் சென்று சிந்திக்க ஆரம்பித் தார். கதையை நண்பர் ஸ்ரீதர் என்னிடம் சொன்னார். ஆனால் - நமது மந்திரிகள் பொது மக்களின் நலனைக்கருதி சில விஷயங்களை வெளிப்படுத்துவதில்லையல்லவா அதேபோல-ரசிகர்களுக்கு நல்ல கதை கொண்ட படம் வரவேண்டும் என்பதற்காக அதை நான் இங்கே சொல்லாமல் நிறுத்திக் கொள்ளுகிறேன். ஆனால் ரசிகர்களின் அமோகமான பாராட்டுக்கு ஏற்ற கதை. படம் கல்யாணப் பரிசு என்று மட்டும் நிச்சயமாகக் கூறுகிறேன்.

காரில் போய்த் தேடினாலும் காணவில்லையே,

படகுக்கு அடியில் பார்த்தாலும் அவளைக் காணோம்!



கை கிறுக்குகிறது அவளை. மனம்...?

ஆமாம், உதவியாளர் சடகோபன், கூடவும் அவளைப் பிடித்து...

கதாநாயகியின் உருவகம் அமைவதுதானே படக்கதைகளில் சிறப்பான அம்சம்! ஸ்ரீதரின் கதாநாயகி இலகுவில் கிடைக்கவில்லை. அவர் சென்னையிலிருக்கும்போது, சம்பவக் கோர்வைகளுடன் இப்படி கதையின் ஏதாவதொரு பகுதியை அமைக்கத் தீர்மானித்தால், அடையாறு எல்லியட்ஸ் கடற்கரைக்குப் போய் விடுவார், தன் சிந்தனை தடைப்படாமலிருக்க. தூக்கத்தில் நடப்பவரைப்போல இடம் மாறிக் கொண்டேயிருப்பார் அவர்.

இங்கே படங்களைப் பாருங்கள். ஸ்ரீதர் படகின் அடியிலே முழங்கால்களைக் கட்டியபடி சிந்திக்கிறார். மீண்டும் அங்குள்ள குடிசைக்கு வருகிறார். கைகள் அங்கு கிடக்கும் சுண்ணாம்புக் கட்டியினால், அவரது கற்பனைப் பெண்ணை படம் வரைய ஆரம்பிக்கின்றன.

கற்பனை கலையாமலிருக்க, ஸ்ரீதர் பாத்திரத்தைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போகும்போது. அவரது உதவியாளர் சடகோபன் குறிப்பெடுத்துக் கொண்டே வருகிறார். குறிப்புடன் வீடு திரும்பிய ஸ்ரீதர் உடைகளைக் களைந்துவிட்டு லுங்கி, பனியனுடன் பாத்திரத்தை எழுத்தால் சிறைப்படுத்துகிறார். அவர் மனதில் பிறந்த பாத்திரம் எழுத்துருவம் கொண்டு விட்டது இப்போது.

எழுத்தில் சிறைப் படுத்தியாகிவிட்டது

1.

4.

3.

2.

கதாசிரியர் ஸ்ரீதரின் கற்பனைக் காரிகை டைரக்டர் ஸ்ரீதரிடம் வருகிருள். கதையில் இடம் பெற்றுள்ள பாவையைப்பற்றி அவர் சிந்திக்கிருர். அழகு, இளமை, குறும்பு ஆகிய குணங்கள் கொண்ட இந்தப் பாத்திரத்திற்கு அவரது கூட்டுத் தயாரிப்பாளர்களுடன் விவாதித்து முடிவு செய்த பி. சரோஜா தேவி அவர் நினைவில் தோன்றுகிருர். டைரக்டர் ஸ்ரீதர் விஜயகுமாரியை கதாநாயகியின் சகோதரி பாத்திரத்திற்குத் தேர்ந்தெடுக்கிருர். முதல தடவையாக தான் டைரக்ட் செய்யும் படம் முதல்தரமாக அமைய வேண்டுமானல் – தன் பாத்திரத்திற்கு உயிர் வரவேண்டுமானல் – புகழ் பெற்ற நக்ஷத்திரங்களைவிட ஆர்வமிக்க புதுமுகம் தேவை என்பதால இப்படி யோசிக்கிருர். தயாரிப்பு டைரக்டர், கதை– வசனகர்த்தா, நடிக, நடிகையர், சங்கீத டைரக்டர் எல்லாருமே இப்படத்தில் இளம் வயதினர்தானே!



படத் தயாரிப்பில் 'செட்' போடுவது முதலிய விஷயங்களை தன் நண்பர்களிடம் விவாதிக்கிறார் டைரக்டர், தயாரிப்பாளர் ஸ்ரீதர். மூவரும் எல்லா விஷயத்தையும் நன்கு விவாதித்து ஒரு முடிவுக்கு வருவார்கள். மூவரும் மனம் விட்டுப் பழகும் நண்பர்களாதலால் அபிப்பிராய பேதத்துக்கு இடமிருப்பதேயில்லை. இந்த மும்மணிகளும் தீர்மானித்து, ஒப்பந்தமான பாத்திரத்தைப்பற்றி, டைரக்டர் ஸ்ரீதர் செட்டிலே சரோஜா தேவியிடம் விளக்க, விஜயகுமாரியும் மகிழ்ச்சியோடு கவனிக்கிறார்.



கற்பனையிலுதித்த பாத்திரத்தின் குணவிசேஷத்தையும் நடிகைபற்றியும் தயாரிப்பில் தன் கூட்டாளிகளான கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தராஜன் இருவரிடமும் விளக்குகிறார் ஸ்ரீதர். அவர்கள் மூவருக்கும் அதே யோசனைதான். அவர்கள் மூவரையும் போல் பரஸ்பரம் ஒற்றுமை மனோபாவம் கொண்டவர்களைப் பார்ப்பது அரிது.

இந்தக் கதையின் பிரதம பாத்திரம் வசந்தி. இளமையும் அழகும் கொண்ட இந்தக் கல்லூரி மாணவி குறும்புத்தனம் மிக்கவள். ஸ்ரீதரைப் பொறுத்த வரையில் இவள் கொடுமைக் காரியும் கூட. ''இந்த வசந்தியை நான் உருவாக்கப் பட்டபாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும்'' என்று படைப்பாளர் ஸ்ரீதரே வசந்தியைப் பற்றிப் பெருமைப் படுகிறாரென்றால் அவளது சிறப்புபற்றி நான் வேறு தனியாகக் குறிப்பிட வேண்டுமா? வசந்தி என்ற தனது உருவகப் பாத்திரத்திற்கு அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் சரோஜாதேவி ஒப்பந்தமானவுடன் ஸ்ரீதர் 'அப்பாடா' என்று ஓய்வெடுத்துக் கொண்டார், சில தினங்கள்.



வசந்தி கல்லூரியில் படிக்கும் குறும்புக்காரி. அவளது மூத்த சகோதரி கீதா. இவர்களிருவரும் தம் தாயாருடன் வசித்து வருகிறார்கள்.

கீதா தையல் வேலை செய்து தங் கையைப் படிக்க வைக்கிறாள். துள்ளி ஓடும் புள்ளிமான் குட்டி யாக - கவலை ஏதுமின்றி வளரு கிறாள் வசந்தி. அவளுக்குக் காத லிக்கவும் தெரிந்திருக்கிறது! கல் லூரி மாணவியல்லவா! தன் காதல் வெற்றி பெற்றுக் கல்யா ணத்தில் வந்து முடியவேண்டும் என்பதற்காக, தன் அக்காளின் கல்யாணத்தை முடிக்கத் திட்ட மிடுகிறாள் இந்தப் பெரிய மனுஷி! வீட்டிலே எல்லோருக்கும் செல் லக்குட்டி, இந்தத் தங்கக்கட்டி. பிறகு இவள் மனதிலே வைராக் கியம் பிறக்கிறது. படித்தவ ளல்லவா? பைத்தியக்காரத் தனத்தை விட்டொழித்து வாழ் வைப் பதனிட்டுக் கொள்ளுகி றாள். ஆனால் படிப்பை பெண்மை அடிமைகொள்ள, அவள் வைராக் கியம் தேய்ந்து சோகப் பதுமை யாகிறாள். ஆனால் கடைசியில் அவள் உள்ளம் மீண்டும் வைராக் கியம் பெறுகிறது.

வசந்தியைபற்றி முழு விவர மும் கேட்ட நான் ஸ்ரீதரிடம், ''என்னைக் கொடுமைப்படுத்திய பிறகு நான் விரும்பிய பாத்திரம் கிடைத்தது என்று வசந்தியைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். ஆனால் கொடுமைப்படுத்தியது நீங்கள் தானே. வசந்தியை ஏன் இப்படிச் சித்திரவதை செய்திருக்கிறீர் கள்?'' என்று கேட்டேன்.

ஆமாம், ஸ்ரீதர் வசந்தியை ரொம்பவும் கொடுமைப்படுத்தி விட்டார். ஒரு அசல் மாமியாரி டம்கூட அவள் இவ்வளவு கொடு மைப்பட்டிருக்க மாட்டாள்! ''வாழ்விலே நடைபெறும்சம்பவங் களை அப்படியே கதையில் இடம் பெறச் செய்தால் அதில் சுவாரஸ் யம் எதுவும் இருப்பதில்லை. ஆகவே படம் பார்ப்பவரின் உள் ளத்தின் ஆழத்தை அடையும்படி இரண்டொரு அதீத நிகழ்ச்சிக ளைச் சிருஷ்டித்தால்தான் ரசிகர் களின் உள்ளங்களை விம்மும்படிச் செய்யலாம்.'' (இது ஸ்ரீதரின் தத்துவம். பாத்திரத்தைக் கொண்டு தனக்குப் புகழ் தேடிக் கொள்ளும் தந்திரத்தைப் பார்த் தீர்களா!) ஆனால், கடைசியில் அவளைச் சாகடிக்காமல் வாழ்வு தருகிறார் கதாசிரியர் ஸ்ரீதர். முன்பு ஸ்ரீதரின் சுமதி நம்மை அழவைத்தாள். நாளை அவரது வசந்தி நம்மை அழவைக்கப் போகிறாள். சுமதியை தாயாகவே ஆக்கிய கொடுமைக்குப் பிராயச் சித்தமாக வசந்திக்கு (இவளுக்கு இதுவரையில் மணமாகவில்லை என்பதையும் குறிப்பிட்டு விடுகி றேன்) கடைசியில் திருமணம் செய்து வைக்கிறார் ஸ்ரீதர். என்ன இருந்தாலும் இளரத்த வேகம் காரணமாக ஸ்ரீதர் வசந்தியை கொடுமைப்படுத்தி யிருக்கிறார் என்ற என் அபிப்பிராயம் படம் பார்த்துத் திரும்பும் ஒவ்வொரு ரசிகருக்கும் ஏற்படும்என்பது நிச் சயம்! கதாசிரியர், வசனகர்த்தா, தயாரிப்பாளர், டைரக்டர்ஸ்ரீதரின் 'கல்யாணப் பரிசு' வரட்டுமே, பார்த்து விடலாம்.

ஸ்டுடியோ விஜயம்

வி. எஸ். பி. பிக்சர்ஸ் படப்பிடிப்பின்போது எடுத்தது. வலது கோடியில் உட்கார்ந்திருப்பவர் டைரக்டர் ஜம்பனு.

எட்டயபுரம் பாரதி விழாவும் கச்சா பிலிம் நெருக்கடியுமாகச் சேர்ந்து சென்ற மாதத்தில் ஸ்டுடியோக்களின் படப்பிடிப்புகளை ஓரளவு மந்தமுறச் செய்தன.

சென்ற மாதம் நான் வாஹினி ஸ்டுடியோவில் இவன் அவனே தான் என்ற படத்தின் ஷூடிங்கைப் பார்த்தேன். கலைப்பித்தன் இப்படத்திற்குக் கதை, வசனம் எழுதியிருக்கிறார். பி. ஸ்ரீதர் இப்படத்தை டைரக்ட் செய்து வருகிறார். டி. ஜி. ஆர். பிக்சர்ஸ் தயாரிக்கும் இதன் அன்றைய படப்

'இவன் அவனே தான்' செட்டில். வலது கோடியிலிருப்பவர் பி. ஸ்ரீதர்.



நாகய்யாவுடன் உரையாடும் ஜெமினி கணேசனின் உடையை சரி செய்கிருர் டைரக்டர் வேதாந்தம் ராகவய்யா. 'அமரதேவி' ஸெட்டில் எடுத்த படம்.

பிடிப்பில் எஸ். வி. சகஸ்ரநாமம் முதலியோர் நடித்தனர்.

ஒரு பெரிய ஹாலின் மத்தியிலுள்ள சோபாவில் அந்த வீட்டின் தலைவி அமர்ந்திருந்தாள். கணவனை இழந்த அவளுக்கு நிறைய பணம் மட்டும் இருந்தது என்பதை அந்த வீடும் வேலைக்காரர்களும் அவளது தோற்றமும் நிரூபித்தன.

அப்போது யாரோ ஒரு வாலிபரை அழைத்து வந்தான் வேலைக்கார சிதம்பரம்.

''இந்தாங்கம்மா, சுந்தரய்யா வந்திருக்காரு'' என்ருன் அவன்.

''உட்காரு தம்பி'' என்ருர் அம்மையார்.

''ஏதோ அவசரமாக வரச் சொன்னீர்களாம்'' என்ருர் வந்தவர், சோபாவில் அமர்ந்தபடி. பிறகு சுற்று முற்றும் ஒரு பார்வை பார்த்தார்.

''சிதம்பரம்! தம்பிக்குக் காபி கொண்டு வந்து கொடு''

''வேண்டாம்மா! ஒன்றும் வேண்டாம்'' என்ற சுந்தர் மெதுவாக, ''எங்கே மாலினியைக் காணும்? ரிஹர்ஸலுக்குக் கூட வரவில்லையே. வீட்டிலேயே இல்லையா?'' என்று கேட்டான்.

''அவள் கல்யாண விஷயமாகப் பேசலாம் என்றுதான் உங்களை வரச் சொன்னது. மோகனுக்கும் மாலினிக்கும் இந்த மாசத்திலேயே கல்யாணத்தை நடத்திடலாம்னு முடிவு பண்ணி, இதோ பத்திரிகை கூட அடிச்சாயிடுச்சு'' என்று சுந்தரிடம் திருமண அழைப்பிதழைக் கொடுத்தார் அம்மையார்.

இதைப் பார்த்து சுந்தர் திகைத்தான். ஏனெனில் அவன் இதை எதிர்பார்க்கவில்லை. உள்ளூற அவன் மாலினியைக் காதலித்தான்.

நாடகம், ஒத்திகை என்றெல்லாம் சொல்லிக் கொண்டு அவன் அவளுடன் நெருங்கிப் பழகினன்.

இதற்கிடையில் அவன் அந்தக் குடும்பத்தின் நிலத்தை அடமானம் வைத்து பத்தாயிரம் ரூபாய் பணத்தையும் கையாடியிருந்தான். இதைப் பற்றி விசாரிக்கத்தான் அன்று அவனை அம்மையார் வரச் சொன்னர். அன்று படமாக்கப்பட்ட இக்காட்சியில் எஸ். வி. சகஸ்ரநாமம் சுந்தராக நடித்தார்.

* * *

சின்னஞ்சிறு குடும்பம் ஒன்று. இளம் தம்பதிகள்; அவர்களின் அவர்களின் அருமைப் புதல்வன் - ஆக மூன்றே உயிர்கள்! இவர்களிடம் உண்மையான அன்பு நிறைந்த ஓர் ஊழியன்-

தேவராஜ் ஒரு கம்பெனியில் சாதாரண குமாஸ்தா. அவன் மனைவி கமலா மிகவும் செட்டும் சிக்கனமுமாகக் குடும்பம் நடத்துபவள். பையன் ஜில்லு படுசுட்டி. இந்த ஆதர்ஸ குடும்பத்துக்கு விதி ஒரு சாபம் விடுத்திருந்தது. தேவராஜுக்கு ஏதோ ஒரு நோய். சாதாரணமான வியாதியல்ல; சற்று ஏமாந்தால் உயிரையே குடித்து விடும். தேவராஜிடம் பற்றுதலுள்ள ஒரு டாக்டர் அவனுக்காக எவ்வளவோ சிரமப்பட்டு ஓர் அரும் பெரும் மாத்திரையைக் கண்டுபிடித்திருந்தார். மணிக்கொரு மாத்திரையாக தேவராஜ் அம்மருந்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் வரையில் எமன் அவனை அணுக முடியாது. சில மணி நேரங்கள் தவறி விட்டாலோ? இதற்காக வென்றே அவனை விசேஷமாகக் கண்காணித்து வந்தார் டாக்டர். தினமும் காலையிலும் மாலையிலும் அவன் வீட்டிற்குச் சென்று நேரிலே அவன் நிலையறிந்து, புத்திமதி சொல்லிவிட்டு

அசோகா பிக்சர்ஸின் 'பெண் குலத்தின் பொன் விளக்கு' படப்பிடிப்பின்போது எடுத்த படம். ஸ்ரீரஞ்சனிக்கும் நரசிம்மபாரதிக்கும் இடையே இருப்பவர் வசனகர்த்தா முகவை ராஜமாணிக்கம், வலது கோடியிலிருக்கிறர் டைரக்டர் பி. வி. ஆச்சார்யா.

ஸ்ரீ கஜலக்ஷ்மி பிக்சர்ஸின் 'புதுமைப் பெண்'ணில் 'லட்சிய நடிகர்' ராஜேந்திரன் சொந்தக் குரலில் பாடுகிறார். படத்தின் இடது கோடியிலிருப்பவர் சங்கீத டைரக்டர் லிங்கப்பா.

ஆறுதலுடன் திரும்புவார். அவன் உயிர் வாழ்வதிலே அவருக்கொரு தனிப்பெருமை!

வழக்கம்போல அன்றும் காலையில் அவர் வந்து அவன் குடும்பத்தினரைப் பெரிதும் பாராட்டி விட்டு, தேவராஜையும் பார்த்து விட்டுப் போனார். சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குக் கிளம்பிய தேவராஜ், மாலை ஆறு மணி வரை தேவையான மாத்திரைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அன்பு நிறைந்த மனைவியும் ஆசைமிகுந்த புதல்வனும் அவனை வாசல் வரை வந்து வழியனுப்பினர்.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததைப்போல அவன் மாலையில் நல்லபடியாக வீடு திரும்பப் போகிறானா? யாரோ செய்த கொலைக் குற்றமும், திருட்டுக் குற்றமும், அவன் தலைமேல் வலிய வந்து விழப்போகிறது. அவன் படாத பாடு படப்போகிறான் என்பதெல்லாம் அப்போது யாருக்குமே தெரியாது.

எஸ். பாலசந்தர் டைரக்ஷனில் கோபி பிரதர்ஸ் தயாரிக்கும் "ஓடாதே நில்" என்ற படத்திற்கான ஒரு காட்சிதான் மேலே கண்டது. தேவராஜின் வீட்டிலே நடக்கும் இந்தக் காட்சி சென்ற மாதம் பாரமவுண்ட் ஸ்டூடியோவிலே படமாக்கப்பட்டது. கோபி சகோதரர்களின் மின்னல் தயாரிப்பான இதில் எஸ். பாலசந்தர், ஜி. பட்டு அய்யர், கொட்டாப்புளி ஜெயராமன் ஆகியவர்களைத் தவிர, மற்றபடி கதாநாயகன், கதாநாயகி ஆகிய எல்லாப் பாத்திரங்களுக்குமே புதுமுகங்களைப் புகுத்தி

பூவைப் போல...
உங்கள்
மேனியை
மலரச் செய்வது
ரெக்ஸோனு
ஆம், நாள்தோறும் தவருமல் ரெக்ஸோனு உபயோகித்தால், உங்கள்
மேனி அதிக சோபையும், புதுமலர்ச்சியும் பெற்றுவரும்!
ஏனெனில், நறுமணமுள்ள ரெக்ஸோனு ஒன்றுதான் கேடில் கலந்த
சோப். சரும எழிலுக்கான பற்பல எண்ணெய்களின்
விசேஷக் கலவையே கேடில். ரெக்ஸோனுவின்
இணைபிரியா நறுமணமும், செழிப்புமிக்க,
மென்மையான நுரையும் உங்களுக்கு
இன்பமூட்டுபவை; அழகு தரும் இந்த
சோப்பை தினந்தோறும் உபயோகியுங்கள்.
ரெக்ஸோனு உங்கள் இயற்கை அழகை
வெளிக்கொணரத் துணைபுரியும்!
Rexona
BLENDED WITH CADYL
-கேடில் கலந்துள்ள சோப் இது ஒன்றே



'அன்பு எங்கே?' படத்திற்காக வெளிப்புறக் காட்சி சுடப்படுகிறது. பாலாஜிக்கும் சூர்யகலாவுக்கும் இடையில் யோகானந்தும், வலது கோடியில் தயாரிப்பாளர் வி. கோவிந்தராஜனும் இருக்கின்றனர்.

யிருக்கிறார்கள். இதன் மூலக் கதையை எஸ். பாலசந்தரும், திரைக்கதை, வசனங்களை கோபி சகோதரர்களும் எழுதி யிருக்கிறார்கள். கோபாலகிருஷ்ணன் என்பவர் தேவராஜாகவும், சாந்தினி என்ற புதுமுகம் கமலாவாகவும் நடிக்கின்றனர். மேலும் இப்படத்தில் யாருக்குமே 'மேக் அப்' செய்யாமல் படம் பிடிப்பது ஒரு புதுமை.

* * *

பாரமவுண்ட் ஸ்டூடியோவின் மற்றொரு தளத்தில் குலதெய்வம் ராஜகோபால், டி. ஆர். நடராஜனை கலாட்டா செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கே ராகினியும் சுகுமாரியும் வந்து சேரவே நடராஜனுக்கு மேலும் உதறல் அதிகரித்தது.

ஜமீன்தார் ரகுநாதனின் மகள் கலா பி. ஏ. தேறியவள். பெயரைப் போலவே அவள் உள்ளத்திலும் கலையார்வம் நிரம்பி யிருந்தது. அவளைப்பற்றித் தெரிந்தவர்களின் அழைப்பின் பேரில் அவள் ஆங்காங்கே சென்று கலைநிகழ்ச்சிகள் நடத்தி வந்தாள். அன்றொருநாள் ஏககாலத்தில் இரண்டு இடங்களிலிருந்து அழைப்பு வந்திருந்தது. இதை அவளிடம் தெரிவிப்பதற்காக ஜமீன் மானேஜர் அவளைத் தேடி வந்தார். கலாவின் அறையிலே வேறு யாருமில்லை. அவள் மட்டும் படுக்கையில் தனித்துப் படுத்தபடி ஒருபத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள்.

அவள்மீது நப்பாசை வைத்திருந்த மானேஜருக்கு இது அரிய சந்தர்ப்பமாகப் படவே அவளிடம் தனது காதலை வெளிக்காட்ட வேண்டி உளற ஆரம்பித்தான். ஆனால்...அங்கே படுத்திருந்தது கலா அல்ல; வேலைக்காரன் மணி தான் ஜாலியாகப் படுத்திருந்தான். அதே சமயத்தில் கலாவும் அவள் தோழி கண்ணம்மாவும் அங்கு வந்து விடவே மணியின் முன்னால் மானேஜரின் நிலை தர்மசங்கடமாகி விட்டது.

இந்த ரசமான காட்சிதான் சென்ற மாதம் வி. எஸ். பி. பிக்சர்ஸாரின் இரண்டாவது தயாரிப்புக்காக பாராமவுண்டில் படமாக்கப் பட்டது. இதில் மணியாக ராஜ கோபாலும், மானேஜராக டி. ஆர். நடராஜனும், கண்ணம்மாவாக சுகுமாரியும், கலாவாக ராகினியும், ஜமீன்தராக ஸி. எஸ். பாண்டியனும் நடித்தனர். ஏ. எல். நாராயணன் கதை, வசனம் எழுதியுள்ள இப்படத்தை ஜம்பனு டைரக்ட் செய்து வருகிறார்.

அறிமுகம்

எம். கருப்பையா

அன்றொரு நாள், 1943-ம் ஆண்டின் ஒரு தினம், மதுரை வீதி ஒன்றின் வழியாக டி. கே. ஷண்முகம் போய்க் கொண்டிருந்தார். டி. கே. எஸ். சகோதரர்களின் கம்பெனி அப்போது ஈரோடில் முகாமிட்டிருந்தது. ஷண்முகத்தின் முன் நின்றான் சுமார் பதினாறு வயதான சிறுவன் ஒருவன். அன்புள்ளம் படைத்த ஷண்முகம் அச்சிறுவனைப்பற்றி விசாரித்தார். முத்துப் பிள்ளைகள் என்பவர் மூலம் தன்னை சந்தித்த அச்சிறுவனுக்கு ஷண்முகம் கம்பெனியில் நடிகனாகச் சேரும் விருப்பம் இருந்ததாகத் தெரிந்தது. சிறுவனிடம் ஒரு பாடத்தைக் கொடுத்து பேசச் சொன்னார். வசனத்துக்கேற்ற முக பாவத்துடன் நன்றாகப் பேசிய இளைஞனின் திறமையில் ஷண்முகத்திற்கு நம்பிக்கை ஏற்படவே, அன்றிரவே தன்னுடன் ஈரோடுக்கு அழைத்துச் சென்றார் ஷண்முகம். அந்தச் சிறுவன்தான் இங்கு ரசிகர்களுக்கு அறிமுகமாகும் எம். கருப்பையா.

முதன் முதலாக 'ஔவையார்' நாடகத்தில் கோவலூர் மன்னன் தெய்விகன் வேஷம் கொடுக்கப்பட்டது கருப்பையாவுக்கு. அடுத்து 'கந்தலீலா'வில் - அதுவரை ஷண்முகமே ஏற்று நடித்துவந்த - நாரதர் வேஷம் கிடைத்தது. ராமாயணம், சிவலீலா முதலிய டி.கே.எஸ். சகோதரர்களின் எல்லா நாடகங்களிலும் அவர் நடித்து வந்தார்.

'வித்தியாசாகரர்' நாடகத்தில்தான் முதன் முதலாக கருப்பையாவுக்குப் பெண் வேஷம் போடப்பட்டது. அதை ஏற்று நடிக்க அவருக்கு விருப்பமே இல்லை. ஓவென்று அழுதார். ஆனால் ஷண்முகம் அவரைத் தேற்றி பெண் வேஷத்தில் நடிக்கச் செய்தார். அதிலிருந்து கம்பெனியின் அயன் ஸ்திரீ பார்ட்டாகவும் மற்ற வேடங்களிலும் நடித்து வந்தார் கருப்பையா.

கருப்பையா முதன் முதலாக நடித்தது 'பில்ஹணன்' தமிழ்ப் படத்தில். டி. கே. எஸ். சகோதரர்களின் கம்பெனி நடிகர்கள் நடித்த படம் அது. அதற்குப் பிறகு பெண் மனம், மனோகரா, ரத்த பாசம், மனிதன், வாழ்விலே ஒரு நாள், பணம், சமயசஞ்சீவி, அன்னையின் ஆணை முதலிய படங்களில் சிறு வேஷங்களில் நடித்தார்.

கருப்பையா தற்போது பிரண்ட் பிக்சர்ஸ் 'தங்கம் மனசு தங்கம்', ஜூபிலி பிலிம்ஸ் 'அன்பு எங்கே?' வாசு பிலிம்ஸ் 'ஒரே வழி', ரங்கா பிக்சர்ஸ் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு', மொராக் - ஸ்ரீநிவாஸ் பிலிம்ஸ் 'பாண்டித்தேவன்' முதலிய படங்களில் நடித்து வருகிறார்.

மருங்காபுரியில் 1929-ம் ஆண்டில் சின்னையா சேர்வை மூக்காயி தம்பதிகளுக்குப் பிறந்த கருப்பையாவை அவரது மூத்த சகோதரி பழனி அம்மாள் வளர்த்து வந்தார். நான்காவது வகுப்புவரை படித்த கருப்பையாவின் நாடக வாத்தியார் முத்தையா சேர்வை என்பவர். பல ஸ்பெஷல் நாடகங்களில் அவருடன் நடித்திருக்கிறார். கருப்பையா 1951-ல் தனது உறவுப் பெண்ணான ஜெகதாம்பாளை மணந்து கொண்டார். இவர்கட்கு இரண்டு பெண்களும் ஒரு பிள்ளையும் இருக்கின்றனர்.

சுமதி

தங்கம் (பத்மினி) பெயரில் மட்டுமல்ல. குணத்திலும் அழகிலும் கூடத்தான் அவள் தங்கம்.

மாதவன் (சிவாஜி கணேசன்) அவள் கரம் பிடித்தவன்; சிந்தை கவர்ந்தவன்.

மாதவனின் சகோதரன் மனோகர் (டி. ஆர். நடராஜன்). தங்கத்தின் இளைய சகோதரன் ராமு (ராஜேந்திரன்).

எழில் வடிவாகி - பருவத்தின் ஆரம்பப்படியில் நின்றுகொண்டிருந்தாள் திலகம் (எம். என். ராஜம்). ராமுவும் திலகமும் கண்ணால் சந்தித்து இதயத்தால் இணைந்தவர்கள். மனோகர் கன்னி திலகத்தை தன் சொந்தக் கனியாக்கிக் கொள்ள விரும்பினான். மனோகருக்காக ராமுவின் மீது கொண்ட காதலை தியாகம் செய்து விடும்படி திலகத்திடம் மன்றாடினாள் தங்கம். ராமுவை மறந்தாலும் மனோகரை மணக்க மாட்டேன் என்றாள் தங்கம்.

முடிவு? - ஒரு புதிர்! இதை விடுவிப்பதுதான் கமால் புரொடக்ஷன்ஸ் 'சுமதி'. கிருஷ்ணன்-பஞ்சு டைரக்ஷனின் ஏவி. எம். மில் தயாராகிறது இது.



செய்திச் சுருள்

வாசுவின் 'ஒரே வழி'

வாசு பிலிம்ஸ் தயாரித்து வரும் 'ஒரே வழி' தமிழ்ப்படம் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது. 'பக்த ராவண' புகழ் கே. சங்கர் டைரக்ட் செய்து வரும் இப்படம் ஒரு அழகான குடும்பக் கதையைச் சித்தரிக்கிறது. இக்கதையில் வரும் பாத்திரங்களுக்கு ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம், தாம்பரம் லலிதா, கே. ஆர். செல்லம், பிரேம்நஸீர் முதலியோர் தங்கள் சிறந்த நடிப்பின் மூலம் உயிரூட்டியிருக்கின்றனர். ஜாவர் சீதாராமன் கதை, வசனம் எழுதியிருக்கும் இப்படம் ஜெமினி ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது.

ஜூபிலியின் 'அன்பு எங்கே?'

மர்மவீரனை அடுத்து ஜூபிலி பிலிம்ஸார் அடுத்து வெளியிடப் போகும் படம் 'அன்பு எங்கே?'. ஆசை நாயகிக்காக கட்டிய மனைவியைக்கூட விவாகரத்து செய்ய முனையும் வாலிபன், உண்மையான அன்பை மனைவியிடம்தான் காண முடிகிறது. இதைத்தான் இப்படக் கதை சித்தரிக்கிறது. பாலாஜியும் பண்டரிபாயும் இதில் ஆசைத் தம்பதிகளாக நடிக்கின்றனர், மற்றும் தேவிகா, சூர்யகலா, மைனவதி, எஸ். எஸ். ராஜேந்திரன், ரங்கராவ் முதலியோர் நடிக்கும் இப்படத்தின் திரைக்கதை வசனங்களை மாறன் எழுதியிருக்கிறார். டைரக்ட் செய்பவர் யோகானந்த்.

ஜெமினியின் புதுப்படம்'

ஜெமினியில் அவர்களது புதிய படம் சென்ற மாதம் ஆரம்பமாகியிருக்கிறது. தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் வளரும் இப்படத்தை எஸ். எஸ். வாஸன் டைரக்ட் செய்கிறார். தமிழ்ப் பதிப்பில் முதன் முறையாக வைஜயந்தி மலாவும் அவரது தாயார் வசுந்தரா தேவியும் ஒன்று சேர்ந்து நடிக்கிறார்கள். மற்றும் சிவாஜி கணேசன் டி. எஸ். துரைராஜ், எஸ். வி. ரங்கராவ், பி. சரோஜா தேவி முதலியோர் இதில் நடித்து வருகின்றனர். ஹிந்திப் பதிப்பில் வைஜயந்தியுடன் திலீப்குமார் நடிக்கிறார். ஜெமினியின் மின்னல் தயாரிப்பான இது ஒரு சமூகப்படமாகும்.



சங்கீத டைரக்டர் கே. வி. மகாதேவன் ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதியன்று தன் புது மனைக்கு கிரகப்பிரவேசம் செய்தார்.

பொன்னியின் செல்வன்

பேராசிரியர் 'கல்கி'யின் மாபெரும் சரித்திர நாவலான 'பொன்னியின் செல்வ'னை நடிகர் எம். ஜி. ஆர். அடுத்து தயாரிக்கப் போவதாக

அறிவித்திருக்கிறார். இந்தப் படத்தையும் அவரே டைரக்ட் செய்வார்.

வாழ வைத்த தெய்வம்

பி. சரோஜாதேவி, ஜி. சகுந்தலா கண்ணாம்பா, முத்துலக்ஷ்மி, வி. கே. ராமசாமி, டி. எஸ். பாலய்யா, எஸ். வி. சுப்பய்யா முதலியோர் நடிக்கும் தேவர் பிலிம்ஸாரின் நான்காவது தயாரிப்பான 'வாழவைத்த தெய்வம்' சென்றமாதம் விஜயா ஸ்டுடியோவில் ஆரம்பமாகி யிருக்கிறது. எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்யும் இப்படத்தின் கதை, வசனங்களை ஆரூர்தாஸ். எழுதியிருக்கிறார்.



'சிவகெங்கை சீமை' ஆரம்ப விழா வாஹினியில் நடந்தது.

ஏவி. எம்.மின் 'திலகம்'

பிரேம்நஸீர் - எம். என். ராஜம் இருவரும் பிரதம பாகத்தில் நடித்து வரும் ஏவி. எம். மின் சொந்தப் படமான 'திலகம்' படப்பிடிப்பு சென்றமாதம் முதல் நடைபெற்று வருகிறது. லக்ஷ்மிநாராயணன் - வெங்கடராமன் கூட்டு டைரக்ஷனில் தயாராகும் இப்படம் நடிகை எம். எஸ். திரௌபதி நடித்து வரும் 'திலகம்' நாடகக் கதையாகும். இதன் வசனங்களை கே. என்.

ஹாஸ்ய நடிகை டி. பி. முத்துலக்ஷ்மிக்கும், கே. முத்துராமலிங்கத்திற்கும் சென்றமாதம் 15-ம் தேதி அதி சிறப்பாக திருமணம் நடந்தேறியது. தம்பதிகளுக்கு நமது நல்வாழ்த்துக்கள்!

நாராயணசாமியும் சங்கீதத்தை சுதர்சனமும் அமைத்துவருகிறார்கள்.



அருணாசலம் ஸ்டூடியோ ஆரம்பவிழாவில் எடுத்தது. ஏவி. எம் முக்கும், ஏ. கே. வேலனுக்கும் மத்தியிலிருக்கிறார் மந்திரி.

பார்வதியின் பிரார்த்தனை

கதாசிரியர், வசன கர்த்தா எஸ். டி. சுந்தரம் எஸ். டி. எஸ். புரொடக்ஷன்ஸ் என்ற படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார். இதன் சார்பில் 'பார்வதியின் பிரார்த்தனை' என்ற படத்தை அவர் தயாரித்து வருகிறார். மகாலிங்கம், அசோகன், பிரேம்நஸீர், எம். என். ராஜம் முதலியோர் இதுவரை ஒப்பந்தமாகியிருக்கின்றனர். படத்தின் கதை, வசன அமைப்புடன் இதன் டைரக்ஷன் பொறுப்பையும் எஸ். டி. சுந்தரமே ஏற்றிருக்கிறார். பிலிம் சென்டரில் இது தயாராகி வருகிறது.

தயாரிப்பாளர், டைரக்டர் ப. நீலகண்டனின் குமாரத்தி இந்திராணிக்கும், சிவகுருநாதனுக்கும் சென்றமாதம் 1-ம் தேதியன்று சென்னையில் அதி சிறப்பாக திருமணம் நடந்தேறியது.

அருணாசலம் ஸ்டூடியோ

கதாசிரியர், டைரக்டர் ஏ. கே. வேலன், சென்னை கோடம்பாக்கத்தில் கட்டியிருக்கும் 'அருணாசலம் ஸ்டூடியோ'வின் திறப்புவிழா, ஆகஸ்ட் மாத இறுதியில் அதிவிமரிசையாக நடைபெற்றது. சென்னை போலீஸ் மந்திரி பக்தவத்ஸலம் இதைத் திறந்து வைத்தார். ஏவி. எம். அதிபர் மேனு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

அருணாசலம் பிக்சர்ஸின் தயாரிப்புகள் அனைத்தும் இனி இங்கேயே உருவாகும்.

வி. எஸ். பி.யின் புதுப்படம்

டி. ஆர். மகாலிங்கம் - ராகினி இருவரும் முக்கிய பாகத்தில் நடிக்கும் படமொன்றை வி. எஸ். பி. பிலிம்ஸார் தயாரித்து வருகின்றனர். பாரமவுண்ட் ஸ்டூடியோவில் தயாராகும் இதை ஜம்பனு டைரக்ட் செய்து வருகிறார்.



எட்டயபுரம் பாரதி விழா

புரவிகள் பூட்டிய பொற்றேரிலே பவனி கிளம்பிய கதிரவன் சென்ற செப்டம்பர் மாதம் ஒன்பதாம் தேதி காலை சற்றே ஸ்தம்பித்து நின்று விட்டாள், காணற்கரிய காட்சியொன்றினைக் கண்டு.

முப்பது கார்கள் பளபளவென்று ஜொலிக்க, முதலாவதிலே மகாகவி பாரதியின் வண்ணச் சித்திரம் முகப்பாக அமைய, சிவாஜி கணேசன் உள்ளிட்ட தமிழ்க் கலைஞர்கள் பலரைத் தாங்கி, தேசிய கீதங்களை முழக்கியபடி சென்னையிலிருந்து புறப்பட்டது சிங்கார ஊர்வலம்.

ஒன்றல்ல இரண்டல்ல; நானூறு மைல்கள்! ஆங்காங்கே தங்கி, விருந்துண்டு, ஓய்வு பெற்று, உவகையுடன் கோவில்பட்டியை அடைந்தது ஊர்வலம்-இரவு சுமார் ஒரு மணிக்கு. மறுநாள் முழுவதும் ஆக்கவேலைகள். மூன்றும் நாள் காலை சிற்றுண்டி முடித்து, சென்னை அமைச்சர்கள் தலைமை தாங்க மீண்டும் அத்தனை கார்களும் எட்டயபுரத்தை நோக்கிச் சென்றன. வழிநெடுகிலும் திரள்திரளாக மக்கள் கூட்டம் வாழ்த்தி வரவேற்றது.

செப்டம்பர் 11-ம் தேதி மகாகவியின் ஸ்ராத்த தினம். அவர் பிறந்த ஊரான எட்டயபுரத்திலே அவரது நினை

விழாவின் முதல் கட்டமாக
கடவுள் வணக்கம் நடக்கிறது.

வாக 'கல்கி' அவருக்கு ஒரு மணி மண்டபம் எழுப்பியிருக்கிறார் அல்லவா? அதன் காரணமாக ஆண்டுதோறும் எட்டயபுரத்திலே பாரதி விழாவினைக் கொண்டாட வேண்டுமென்பது தமிழ்ப் பேரறிஞர்களின் முடிவு. அதன்படி இவ்வாண்டு பாரதி விழாவினை நடத்தும் பெரும்பணியை சிவாஜி கணேசன் ஏற்றுக் கொண்டார்.

சென்னை முதலமைச்சர் காமராஜ் விழாவினைத் துவக்கி வைத்தார்.

"தேசிய கீதங்கள் மூலமாகத் தமிழர்களின் உணர்ச்சியைத் தட்டி யெழுப்பியவர் பாரதி. அரசியல் வேற்றுமைகளிலே அவர் ஈடுபடவில்லை. எளிய மொழியிலே நமது மக்களைப் பற்றி அவர் பாடினார். நம்மவர்களின் சிறப்பைப் பாராட்டினார்; பலஹீனத்தைக் குறைகூறினார். அவரது பாடல்களை நாட்டினர் பாடிக் கொண்டேயிருப்பதுதான் அவருக்குச் சிறந்த நினைவுச் சின்னம்'' என்று குறிப்பிட்டார் காமராஜ்.

தனது வரவேற்புரையிலே அன்பு நிறைந்த உளத்தோடு அனைவரையும் வரவேற்றார் சிவாஜி கணேசன். தன்னைப்போலவே பிற கலைஞர்களும் ஆண்டுக்கொருவராக விழாவினுக்குப் பொறுப்பேற்று நடத்த முன் வரவேண்டும் என்பதே தனது ஆவல் என்றும் தெரிவித்துக் கொண்டார் சிவாஜி.

தேசியக்கொடியை ஏற்றி கல்வியமைச்சர் சி. சுப்ரமணியம் பேசுகையில், "தமிழ் மொழியிலேயே தமிழ்நாட்டின் அரசியல் முழுக்க முழுக்க நடக்கும் நாள்தான் பாரதியின் கனவு நனவாகும் நாள்'' என்றார். 'அவ்வை' டி. கே. ஷண்முகம் முதல் நாள் விழாவினுக்குத் தலைமை வகித்து அருமையானதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

"நவயுகச் சிற்பியான பாரதி கடந்த கால நாகரீகத்தின் கடைந்தெடுத்த சின்னமாகவும் இருந்தார்'' என்று குறிப்பிட்டார் தலைவர். "பாரதிக்கு முன்னும்

மேடையில் தலைவர்களுடன் திரைப் படக் கலைஞர்களும் அமர்ந்திருக்கிறார்கள்.

பின்னும் அவரைப்போல ஒரு கவிஞர் பிறக்கவில்லை. கம்பன், வள்ளுவன், இளங்கோ இவர்களின் வழியிலே இவர்களுக்குப் பிறகு தோன்றிய முதற் கவிஞன் பாரதிதான். இறந்த காலத்தின் சிறப்பு, நிகழ்கால அனுபவம், எதிர்காலச் சிந்தனை இவைகள்தான் அவரது கவிதா விலாசத்திலே பிரதிபலிக்கின்றன'' என்றார் டி. கே. எஸ்.

மகாகவிக்கு அவர் பிறந்த இடத்திலே மணிமண்டபம் எழுப்பிய பேராசிரியர் 'கல்கி'யின் உருவப் படத்தை ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸன் திறந்து வைத்தார். ''பாரதியாரைப் போலவே 'கல்கி'யும் ஒரு புரட்சி மேதை. கவிதையிலே எளிய சொற்களைப் புகுத்தி எழுதிய பாரதியைப்போல, வசனத்திலே பேச்சுத் தமிழைப் புகுத்தினார் கல்கி'' என்று குறிப்பிட்டார் வாஸன்.

அதற்கு அடுத்தபடியாக என். எஸ். கிருஷ்ணனின் படத்தைத் திறந்து வைத்தார் சிவாஜிகணேசன். ''இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் பெருமகிழ்ச்சி யடைகிறேன். கலைஞர்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வு கூடாது. அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதற்காக உயிருள்ளவரை உழைத்து வந்தார் கலைவாணர்'' என்று குறிப்பிட்டார் சிவாஜி கணேசன்.

முதல்நாள் முற்பகல் நிகழ்ச்சிகள் தொடங்குமுன் எட்டயபுரம் தெருக்களில் பாரதிபட ஊர்வலம் வந்தது. காருகுறிச்சி அருணாசலம் நாதஸ்வரம் இசைத்தார். அன்று பிற்பகல் நிகழ்ச்சியில் சொற்பொழிவுகளுக்குப் பின் ஜி. ராமநாதனின் இன்னிசைக் கச்சேரியும், கே. பி. சுந்தராம்பாளின் இன்னிசைக் கச்சேரியும் நடந்தன. எம். ஏ. வி. பிக்சர்ஸ் அதிபர் எம். ஏ. வேணு பாரதி விழா சார்பாக பிரசுரிக்கப்பட்டிருந்த ''மகாகவி மல''ரை அன்று வெளியிட்டார்.

மறுநாள் காலையில் ம. பொ. சிவஞான கிராமணியார் தலைமையில் இலக்கிய விழா ஆரம்பமாயிற்று. அமைச்சர் எம். பக்தவத்சலம் ஆரம்பஉரை நிகழ்த்தினார். ''பணம் மட்டும் இருந்துவிட்டால் ஒரு நாட்டில் எல்லா நலன்களும் இருப்பதாகக் கருதக் கூடாது. பண்பு வேண்டும். நல்ல கலாச்சாரம் வேண்டும். ஏழையாக இருந்தால்கூட குணமும் பண்பும் எல்லா நலன்களையும் தரும். இவைகள்தான் நமது ஆஸ்தி. மகாகவியின் கவிதைகளிலே காணும் புதையல்'' என்று குறிப்பிட்டார் பக்தவத்சலம்.

அன்றைய பிற்பகலில் சொற்பொழிவுகளுக்குப்பின் ஹரிராம்சேட் என்னும் இளைஞரின் இன்னிசைக் கச்சேரி நடந்தது.

இரண்டு நாள் நிகழ்ச்சிகளில் எஸ். வி. சகஸ்ரநாமம், ஏ. பி. நாகராஜன், கே. டி. கோசல்ராம்

கலைஞர்களின் கதம்ப நிகழ்ச்சி பாரதி விழாவின் சிறப்பான அம்சமாக விளங்கியது.



மேடையில் மற்ருெரு காட்சி

சின்ன அண்ணமலை, கு. சா. கிருஷ்ணமூர்த்தி, பி. டி. சம்பந்தம், டி. பி. பொன்னுசாமி பிள்ளை. கே. சாரங்கபாணி, பகீரதன், அ. ஸ்ரீனிவாஸராகவன், ம. ரா. பொ. குருசாமி, கருமுத்து மாணிக்க வாசகஞ் செட்டியார், டி. ஐயம் பெருமாள் கோனர், ப. ஜீவானந்தம் முதலியோர் கருத்துமிக்க சொற்பொழிவுகளை நிகழ்த்தினர்.

இரண்டாம் நாள் இறுதியில் கலைஞர்களின் கதம்ப நிகழ்ச்சி விழாவினுக்குச் சிகரமாக நின்று சிறப்பளித்தது. கே. சாரங்கபாணி, டி. கே. பகவதி, சகஸ்ரநாமம், பி. டி. சம்பந்தம், ஏழுமலை, வி. கே. ராமசாமி, சாயிராம், ஸ்ரீராம், சிவாஜி கணேசன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். பாரதியின் படைப்புகளிலிருந்து இந்தக் கதம்ப நிகழ்ச்சியினைத் தயாரித்திருந்தார் எஸ். டி. சுந்தரம். மகாகவியின் உடையிலே தோன்றினர் சிவாஜி கணேசன்.

இவ்வாண்டு பாரதி விழாவினை சிவாஜி கணேசன் எட்டயபுரத்தில் நடத்தியதன் நினைவாக ஆங்கே மணிமண்டபத்தின் முன்புமின் விளக்கு ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டு, விழாவன்று ஏற்றி வைக்கப்பட்டது. அன்றியும் மணிபண்டபத்தின் மாதிரிச் சின்னமொன்றை வெள்ளியால் செய்து, சிவாஜி கணேசனைப் பாராட்டித் தங்களின் நன்றியைத் தெரிவிப்பதற்காக எட்டயபுரம் மணி மண்டபக் கமிட்டியார் சிவாஜி கணேசனுக்கு அளித்தனர்.

நூற்றுக்கணக்கான கலைஞர்கள் கலந்து கொண்ட இவ்விழாவிலே பதினுயிரக் கணக்கான பொது மக்கள் கூடியிருந்து இவ்வாண்டு பாரதி விழாவினை மிகமிகச் சிறப்பாகக் கொண்டாடிப் பெருமகிழ் வெய்தினர்.

முந்தைய ஆண்டுகளைவிட இவ்வாண்டு பல விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பாரதி விழாவுக்கு வருபவர் அனைவரும் யாதொரு அசௌகர்யமுமின்றி விழாவைக் கண்டு களிக்க மகத்தான ஏற்பாடுகளை விழாக் கமிட்டியினர் செய்திருந்தனர்.

சிவாஜியாக நாடகங்களிலே நடித்து, சிவாஜி கணேசனுகவும் பிறகு கட்டபொம்மன் நாடகத்தால் கட்டபொம்மன் கணேசனுகவும் ஆன சிவாஜி கணேசன், இன்று எட்டயபுரம் பாரதி விழாவை நடத்தியதால் ‘பாரதி கணேசன்’ என்ற பட்டப்பெயரும் பெற்றுவிட்டார். “வாழ்க பாரதி கணேசன்!” என்று நாமும் ரசிகர்கள் சார்பில் வாயார வாழ்த்துகிருேம்.

விழாக் கமிட்டியினர் ‘நடிகர் திலக’த்திற்கு அளித்த வெள்ளிப் பிரதிமை.

ஜுபிலி
பிலிம்ஸ்
அன்பு எங்கே?







ஜுபிலி பிலிம்ஸ் தயாரித்து வரும் 'அன்பு எங்கே?' படத்தில் பண்டரி பாய், தேவிகா, மைனாவதி, சூர்ய கலா, அம்பிகா, எஸ். எஸ். ராஜேந்திரன், பாலாஜி, ரங்கராவ், டி. ஆர். ராமச்சந்திரன் முதலிய நக்ஷத்திரங்கள் நடித்து வருகிறார்கள். மனைவியின் உண்மை அன்பை விளக்கும் அருமையான இக் குடும்பக் கதைக்கு மாறன், எம். ஏ. வசனங்களை எழுதியிருக்கிறார். யோகானந்த் டைரக்ட் செய்கிறார். தயாரிப்பாளர் வி. கோவிந்தராஜன். படத்தின் ஒளிப்பதிவை செல்வராஜும், இசை அமைப்பின் பொறுப்பை வேதாவும் ஏற்றிருக்கின்றனர்.

உங்கள் கேசத்திற்கு உரிய

பராமரிப்பை அளிக்கிறீர்களா ?

இராஸ்மிக் பர்ப்யூம்ட் கோகனட் ஹேர் ஆயில் உபயோகித்து அன்ருடம் பராமரித்துவந்தால் உங்கள் கேசம் அடர்த்தியாகவும், பளபளப்புடனும் மிளிரும். சுத்தமான தேங்காயெண் ணெயான இராஸ்மிக், கேசத்திற்கு போஷாக்களித்து சம்ரட்சிக்கும். உங்களுக்குப் பிடித்தமான—ரோஜா அல்லது மல்லிகை—நறு மணத் துடன் கிடைக்கும் சீசா ஒன்றை இன்றே வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

இராஸ்மிக்

பர்ப்யூம்ட்

கோகனட் ஹேர் ஆயில்

ECH. 3-50 TM

கேள்வி ? பதில்

சீ. வீரபாண்டியன், தேவூர்

நீங்கள் மறக்க முடியாத முகம் எது?

வறுமையின் முகம்.

முகம் என்பது என்ன?

மூடப்பட்டிருக்கும் பொருளின் விளக்கம் தரும் 'லேபிள்'.

கண்ணன், விநயகபுரம்

படமுதலாளி வெறுப்படைவது எப்போது?

அவரது செக்குகள் செல்லுவதில்லை என்று தெரிவிக்கும்போது!



''ஒருபெண்ணைநம்பித்தானம்மா இந்தக் கதிக்கு வந்தேன்!'' எஸ். பி. எஸ் பிக்சர்ஸ் 'தெய்வமே துணை' படத்தில் காமெடியன் ராஜகோபால், நம்பியார், இ. வி. சரோஜா.

நமது தலைநகரமான டில்லியில் ஏன் ஒரு ஸ்டூடியோகூட கட்டப்படவில்லை?

நவரசங்களையும் பிரதிபலிக்கும் 'பார்லிமெண்ட்' அங்கு இருப்பதால்!

'நிஷான்' படத்தில் பானுமதி தன் சொந்தக் குரலிலேயே ஹிந்தி பேசியிருக்கிறாரா?

இல்லை. இந்திரா என்பவர் அவருக்கு 'குரல் தானம்' செய்திருக்கிறார்.

கறுப்பும் வெள்ளையுமான தமிழ்ப் படங்களைப் பார்த்து என் கண்கள் சலித்து விட்டன. வர்ணப்படங்களை உடனடியாக பார்க்க வழி?

கலர் மூக்குக் கண்ணாடியை அணிந்து செல்லுங்கள்!

லூர்து ராஜா, மலாயா

இங்குள்ள சில பத்திரிகைகள் உங்கள் பதிலை அப்படியே காப்பி யடித்து விடுகின்றன. என்ன சொல்லுகிறீர்கள்?

நல்ல விஷயங்களுக்கு விளம்பரம் தேவைதான். அவை எந்தவகையில் செய்யப்பட்டாலும் பாதகமில்லை.

நடிகையின் கணவர் - நடிகனின் மனைவி இருவருக்கும் உள்ள பொருத்தம் என்ன?

இருவரும் சந்தர்ப்பத்திற்காகக்காத்துக் கிடப்பவர்களே!

எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஹைதராபாத்

இங்குள்ள ஸாரதி ஸ்டூடியோவில் என்ன படங்கள் தயாராகி வருகின்றன?

ஸாரதி ஸ்டூடியோவின் சொந்த தமிழ், தெலுங்கு தயாரிப்புகளுடன், மற்றொரு தெலுங்குப் படமும் இங்கு தயாராகி வருகிறது.

வெங்கடேசன், திருச்சி

தமிழ் நடிகைகளில் புகை பிடிப்பவர்கள் யாராவது இருக்கிறார்களா?

வித்தியாவதி இருக்கிறார்.

டி. பி. செல்லப்பன், விருதை

'பிறந்த தின பரிசுகள்' எதைக் குறிக்கின்றன?

இறுதி யாத்திரை நெருங்குவதன் ஞாபகத்தை!

ஆண்களைவிட பெண்கள் பல சாலிகள் என்று சொல்கிறார்களே, எப்படி?

வெளியில் புறப்படும் போது, ஒரு ஆணை விட, பெண்தான் அதிக பொருள்களை எடுத்துச் செல்கிறாள். இது போதாதா?

உமாமகேஸ்வரன், திண்டுக்கல்

மார்வாடிகளிடம் கலைகள் விற்கப்பட்டால்?

அவர்கள் அதை வாங்குவதில்லை. அடமானப் பொருளாகத்தான் ஏற்கிறார்கள்!

புகழின் உச்சியில் இருக்கும் ஒரு நடிகை மிக ஜாக்கிரதையாக காப்பாற்றிக் கொள்ள வேண்டியது எது - அவரது தேக நலமா-செல்வமா?

இரண்டுமல்ல. அவரது 'தலை'யை! கனம் ஏறவிடக் கூடாது அதில்.

சந்தானம், திருநெல்வேலி

படவுலகில் அனுமான் பிரபலமான கடவுளா?

வைஜயந்திமாலாவிடம் மட்டும்!

சில பெண்கள் பணத்தை எடுத்து வராமல் வெளியே புறப்பட்டு விடுகிறார்களே எப்படி?

கணவன் உருவில் அது பக்கத்தில் வரும்!

நடிகை தனம்(சுசீலா) திருமணமானவரா?

அடுத்தமாதம் அவருக்கு திருமணம் நடைபெறப் போகிறது.

தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும்கூட அபாயமின்றி கொடுக்கலாம்.

பிராங்கைடிஸ், தொண்டைப் புண், மண்டை நீர், அடைப்பு, ஜலதோஷம் மற்றும் இருமலுக்கு உடனேயே நிவாரணமளிக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-54-TAM

சோல் ஏஜெண்டுகள்:

தாதா & கோ.,

86, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!



மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலைதூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1,94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

***Principal,* BENGAL MESMERISM HOUSE**

(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

ஞானப்பிரகாசம், வழுத்தூர்

திரையுலகுக்கு வருவதற்கு முன்னால் நடிகை சந்தியா என்ன செய்து கொண்டிருந்தார்?

திரையுலகுக்கு வருவதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தார்!

சினிமா நடிகைகள் தினசரி ஏதேனும் தேகப்பயிற்சிகள் செய்வதுண்டா?

ஓ! கண்ணாடி முன் நிற்கிறார்கள்!

அப்துல், சென்னை

எட்டையபுரம் பாரதி விழாவின் முழுச் செலவும் 'நடிகர் திலகம்' கணேசனுடையதா?

ஆமாம்.

ஜெமினியின் அடுத்த தமிழ்ப் படம் எது?

"?"!

கே. ஏ. ராம்னாத், ஈரோடு

வெளிப்புறக் காட்சிகளைப் படமெடுத்து முடிந்த பின், எடுத்த பகுதிகளை அங்கேயே சரிபார்ப்பார்களா, அல்லது ஸ்டூடியோவிலா?

ஸ்டூடியோவில்தான் சரிபார்ப்பார்கள்.

சி. என். நாகமாணிக்கம், வேட்டைக்காரன்புதூர்

'நாடோடி மன்னன்' படத்தில் பி. சரோஜாதேவி பேசும் வசனங்கள் அவரது சொந்தக்குரலா அல்லது பின்னணியா?

'வண்ணுமில்லே' (ஒண்ணுமில்லை), 'கலுகு குகை' என்றெல்லாம் தமிழ்க் கொலை செய்யப்படுவதைக் கண்டு இதைக் தெரிந்து கொள்ளலாமே!

கு. சோலை ஆழ்வார், மதுரை

கலைஞர் எம். ஜி. ஆரின் அரசியல் தலையீடு பற்றி தங்கள் எண்ணம் என்ன?

அது அவரது சொந்த விஷயம்.

எம். கே. ராதா நடித்த 'அபூர்வ சகோதரர்கள்,' ஜெமினி கணேசன் நடித்த 'மனம்போல மாங்கல்யம்', சிவாஜி நடித்த 'உத்தமபுத்திரன்' எம். ஜி. ஆர். நடித்த 'நாடோடி மன்னன்' இவைகளில் படப்பிடிப்பு, நடிப்பு, டைரக்ஷன் திறமை, அதிக வசூல் இவற்றில் சிறந்த படம் எது?

நடிப்பில் 'உத்தமபுத்திரன்', டைரக்ஷன் திறமையில் 'அபூர்வ சகோதரர்கள்', வசூலிலும், படப்பிடிப்பிலும் 'நாடோடி மன்னன்'.

க. சி. முத்துக்குமாரன், தாம்பரம்

'நாடோடி மன்னன்'னில் சந்திரபாபு வாயிலிருந்து ஒரு கோழிக் குஞ்சு வருகிறது. உண்மையிலேயே அதை அவர் வாயில் அடக்கி வைத்திருந்தாரா?

காமிராகூடவா பொய் சொல்லும் என்று நினைக்கிறீர்கள்?

எம். ஜி. ஆர். தி. மு. க. உடை அணிந்து காணப்படுவதேன்?

தி. மு. க.வுக்கென்று தனியாக உடை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையே!

ஜெகதாஸ், மரக்காணம்

திரையுலகிலே 'மறுமலர்ச்சி' என்றால் என்ன?

மக்கள் எண்ணத்திலே ஒரு 'புரட்சி' என்று அர்த்தம்!

பி. எஸ். ஆர். திலகவதி, பனங்காட்டூர்

சகாப்தம் என்றால் என்ன?

'சந்திரலேகா' போன்றதொரு படம் வருகிறது என்று அர்த்தம் படவுலகில்.

'மதர் இந்தியா'வில் நர்கிஸின் மருமகளாக நடிப்பவர் யார்?

கும் கும் என்ற இளம் நடிகை.

கே. எம். எம். யூசப், கொழும்பு

செந்தமிழ்-கொடுந்தமிழ் இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

சிவாஜி கணேசன் படங்களில் பேசும் வசனம் செந்தமிழ்; அதை சரோஜாதேவி பேசுவது 'கொடுந் தமிழ்.'

ஆர். ஜி. ராஜி, ஈப்போ

சந்திரபாபுவைப்பற்றி தங்கள் கருத்து என்ன?

சிறந்த ஹாஸ்ய நடிகர்.

சென்ற வருடம் தென் இந்தியாவில் அதிக நாள் ஓடிய தமிழ்ப் படம் எது?

பிரேமபாசம்.

இதோ ஒரு சஞ்சீவி!

காலாணிக்கு

மேல் பூச்சு மருந்து

குதிகாலிலும், பாதத்திலும் பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணிகளைப்போல் ஏற்பட்டு, நடக்கும்போது பாதத்தைத் தரையில் வைக்க முடியாமல் துடிதுடிக்கும் நிலையை இம்மருந்து ஆச்சரியகரமாய் கண்டித்து, ஆணிகளை அறவே நீக்குகிறது. ஆணிகளுக்குமேல் இம்மருந்தைப் பூச வேண்டும்.

புட்டி விலை
(தபால் செலவுடன்) ரூ. 4.25

ஜகன்னாத் அண்டு கோ

தபால் பெட்டி எண் 1859
சென்னை - 1

டி. சீனிவாசராகவன்,
பெங்களூர்-2

செப்டம்பர் 'பேசும்-படம்' இதழில், 'இவர்தான் மேனா' கட்டுரையில், அந்நாள் ஹிந்தியில் தயாரிப்பது பற்றிய செய்தியில் ''கணேசனைப் போல் நடிக்க அங்கு யார் இருக்கிறார்கள்?'' என மேனா குறிப்பிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. ராஜ்கபூர் அங்கு இருக்கும்போதா மேனா இப்படிக் கூறினார்?

தன்னுடைய 'சோரிசோரி' படத்தில் ராஜ்கபூரை நடிக்க வைத்திருக்கும் செட்டியார், அவரை எப்படி மறந்திருப்பார்?

கா. அருணாசலம், அமராவதி

ஜூலை மாத, 'பேசும் படம்' இதழில், 'செங்கோட்டை சிங்கம்' படக்காட்சிகளின் கடைசி பக்கத்தில் வீரப்பாவுடன் நிற்பது யார்?

வி. ஆர். ராஜகோபால்.

முல்லை. நாதன்,
திருநெல்வேலி

ஜெமினியில் ஆரம்பித்திருக்கும் வர்ணப்பட லாபரடரிபோல் இந்தியாவில் வேறு ஏதும் இருக்கிறதா?

இல்லை. தூரக்கிழக்கிலேயே இம்மாதிரி வசதி மிக்க லாபரடரி வேறு எங்கும் இல்லை.

எல். ரிச்சர்ட், நாங்குநேரி

நான் ஒரு விளையாட்டு வீரன். என்னை சினிமாவில் சேர்த்துக்கொள்வார்களா?

சினிமா ஒரு விளையாட்டு மைதானமல்ல.

சரோஜா, காஞ்சீபுரம்

நாற்பது வயதான வி. கே. சீனிவாசன் 'இளைஞ'ரா?

அவருக்கு முப்பது வயதுதானாகிறது. நாற்பது என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டது.

இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.
3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி வாட்சும், மோதிரமும் (நியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

AMRIT PHARMACY (P. P. M.)
Jullundur City.

எஸ். தவமணி,
பூண்டுலோயா

எம். ஜி. ராமச்சந்திரனும் பானுமதியும் சேர்ந்து ஜோடியாக நடித்த முதல் படம் எது?

பக்ஷிராஜாவின் 'மலைக்கள்ளன்'.

க. ரத்தினசிங்கம்,
கிளிநொச்சி

'பொருமை' என்ற சொல் திரையுலகில் எதைக் குறிக்கிறது?

புதுப்படத் தயாரிப்பாளர்களுக்கு 'கச்சா பிலிம் கிடையாது' என்பதை.

படத்தைப் பார்க்காமல் இருப்பதற்கு வழியென்ன?

சேர்ந்தார்ப்போல் ஒரு தமிழ்ப் படத்தின் மூன்று காட்சிகளையும் பார்த்து விடுங்கள். தமிழ்ப்படங்களின் மீதுள்ள ஆசையே போய் விடும்.

விஜயபாஸ்கரன், வந்தவாசி

ஜெமினியில் தற்போது ஏதேனும் வர்ணப்படங்கள் தயாராகின்றனவா?

அடுத்துவரும் ஒரு வர்ணப் படத்தை ஜெமினி தயாரிக்கும் என்று அதன் அதிபர் எஸ். எஸ். வாஸன் கூறியிருக்கிறார்.

நா. நாகராசன், சென்னை

'நாடோடி மன்னன்' திரைக்கதை ஒரு ஆங்கிலக் கதையின் தழுவல் என்பது உண்மையா?

'ஒரு' என்பதை 'சில' என்று திருத்திக் கொள்ளுங்கள்!

ந. கிருஷ்ணன்,
நாவலபிட்டியா

இப்போது வெளிவரும் படங்களில் கதா பாத்திரத்திற்கு ஏற்ற நடிகர்களை ஒப்பந்தம் செய்வதில்லை. புகழ்பெற்ற நடிகர்கள் என்ற காரணத்துக்காகவே ஒப்பந்தம் செய்கிறார்கள் என்பது என் அபிப்பிராயம். உங்கள் முடிவு என்ன?

அதுதான் இப்போதைய படவுலகின் 'சட்டம்'!

நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து, இளம் பிறை வடிவாகக் கட்டினாலும் சரி — கூந்தலை எவ்வகையில் ஜோடித்தாலும் சரி – இவைகளுக்கு தலை நிறைந்த கூந்தல் இல்லாவிட்டால் சோபிக்க மாட்டா. கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும், கூந்தலழகையும் பெருக்கி, தலையை விதவிதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது கடவுளால் அளிக்கப்பட்டது. ஆனால் கூந்தலழகை தற்பொழுது கேசவர்த்தினியினால் அடையலாம்.

சிறுவயது முதல் கேசவர்த்தினியின் உதவியினால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் பெறுங்கள். கவனக்குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்கு கேசவர்த்தினி நிச்சயம் பரிகாரமளிக்கும்.

தயாரிப்பவர்கள் :

கேசவர்த்தினி

பிராடக்ட்ஸ்

கிராஸ்கட் ரோட்,
கோயமுத்தூர்.

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரத்தினுல் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்ருகவும் தெளிவாகவும் விஷயங்களைப்புரிந்து கொள்வார்கள். பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை ரூ. 4

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ.வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

சா. ரா. ரத்தினம், சென்னை

'வீரபாண்டியன்' படம் திரையிடப்பட்டு விட்டால் 'கட்டபொம்மன்' நாடகத்திற்கு வசூல் குறைந்து விடாதா?

'மனிதன்' படம் திரையிடப்பட்ட பின், அந்த நாடகத்திற்கு மேலும் வரவேற்பு கிடைத்திருக்கிறது.

சகாதேவன் 'புலித்தேவன்' நாடகத்தை நடிக்கப் போகிருராமே?

முயற்சி வெற்றி பெறட்டும்!

எஸ். பி. ஜோன் ஜோஸெப், பருத்தித்துறை

தமிழ்ப்படவுலகில் சங்கீத டைரக்டர்களாக இருந்து வருபவர்களுள் காலஞ்சென்ற சி. ஆர். சுப்பராமனிடம் பணியாற்றியவர்கள் யார்?

விஸ்வநாதன்-ராமமூர்த்தி.

அ. மாணிக்கம், திருச்சி

நடிகை ஜி. வரலக்ஷ்மி கிறிஸ்துவரா அல்லது ஹிந்துவா?

ஹிந்துதான்.

சில நடிக, நடிகைகள் ஏன் அடிக்கடி விலாசம் மாறுகிருர்கள்?

விலாச மாறுதல் பத்திரிகைகளில் இடம் பெறுவதால் சிறிது விளம்பரம் கிடைக்கிறதல்லவா, அதனுல் இருக்கலாம்.

விஜயா, நீலகிரி

சில 'பாட்டி' நடிகைகள் திரையுலகில் இன்னும் கதாநாயகிகளாகக் காணப்படுவதேன்?

புதிய முகங்கள் தங்களைப் பார்த்து 'கதாநாயகியாக நடிப்பது எப்படி?' என்பதைக் கற்றுக்கொள்வதற்காக இருக்கலாம்!

பின்னணியில் பாடுபவர்களுக்கு, குரல் இரவல் வாங்கும் நடிகர்கள் பணம் கொடுப்பார்களா, அல்லது தயாரிப்பாளர்களே கொடுப்பார்களா?

படத்தொழில் சம்பந்தபபட்டவரை 'செலவு' என்ற சொல், பட முதலாளியின் 'அகராதி'யில் மட்டும்தான் காணப்படும்.

நான் ரசித்த காட்சி

நாடோடி மன்னன்

நடந்தவற்றை விளக்கி, மனோகரியின் கணவன் தான் இல்லை என்று கூறுகிறான் வீராங்கன். ''அண்ணா!'' என்று கூவியபடி அவன் கால்களில் விழுந்து மன்னிப்பு கோருகிறாள் மனோகரி. ''இப்போதாவது என்னை நம்புகிறாயா சகோதரி?'' என்கிறான் வீராங்கன். ''....அண்ணா! நான் மட்டுமென்ன, இந்த நாடே உங்களை நம்பித்தானே ஆகவேண்டும்!'' என்கிறாள் மனோகரி. நாட்டுக்கு நல்லது செய்யும் அண்ணா என்றால் தங்கைக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்? சகோதர பாசத்தை விளக்கும் இந்தக் காட்சி, ஒரு உத்தம தேசபக்தனின் மனோபாவத்தையும் நன்றாக விளக்கிக் காட்டுகிறது.

வீராசாமி,
காஞ்சீபுரம்.

மதனாவை காண விரைகிறான் வீராங்கன். அவள் மாண்டு போகிறாள். நாம் நினைக்கிறோம், வழக்கம் போல ஓவென்ற அலறல் பாட்டு, ஒரு விளக்கு அணைதல், பக்கத்தில் விளக்கு இருத்தல் நிகழும் என்று. ஆனால் ஒரு படத்தில் அம்பால் அடிபட்டுக் கிடக்கும் பெண்மான் அருகே ஆண்மான் நிற்பதைக் காட்டுகிறார்கள். டைரக்டரின் திறமையை வெளிப்படுத்தும் இக்காட்சி நன்றாக இருந்தது.

சந்தானம்,
சீர்காழி.

வீராங்கன் என்று தவறாக எண்ணி பிங்களனுடன் கிளம்பி விட்ட மதனா அவன் யார் என்பதை அறிந்ததும் விடுமாறு அலறுகிறாள். அவன் இழுத்துப் போகும்போது வீராங்கன் எதிர்ப்பட்டு பிங்களன் செய்த தவறை திருத்திக்கொண்டு மதனாவை விட்டு விடும்படிக் கூறுகிறான். அவன் மறுக்கவே அவனுடன் போரிட்டுக் கொல்கிறான். தவறு செய்பவரை தண்டிக்க சாம தான பேத தண்ட முறைகளைக் கையாளுவதே சிறந்த வழி என்பதை விளக்குகிறது இக்காட்சி. வீரமும் விவேகமும் விளக்கம் தருகின்றன இக்காட்சியிலே.

எஸ். மகாதேவன்,
மதுரை.

மன்னன் மார்த்தாண்டனை ராஜகுரு கடத்தி விட்டதை யறிந்த மந்திரியும் தளபதியும், அரசரைப் போலவே சாயலுள்ள வீராங்கனை மன்னனாக்கி விடுகிறார்கள். அப்போது அரசரும் அரசியும் கைகோத்துக் கொண்டு போக நேரிடுகிறது. வீராங்கன் விழிக்கிறான்; கைகள் நடுங்குகின்றன- மாற்றான் மனைவியை சகோதரியெனப் பாவிக்கும் உத்தமப் பண்பாளனின் மனோநிலையை விளக்கும் இந்தக் காட்சி மிகச் சிறந்ததாகும்.

கே. எஸ். சுப்பிரமணியன்,
சென்னை.

மன்னன் மார்த்தாண்டனை வீராங்கன் காப்பாற்ற முயற்சிக்கையில், மதனாவை கன்னித்தீவு தலைவரின் சிஷ்யர்கள் இழுத்துப் போய் விடுகிறார்கள். அப்போது மன்னன் மயக்கமாகிக் கிடக்கவே, ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படிக் கூறிக் கிளம்புகிறான். அப்போது மார்த்தாண்டனுக்கு நினைவு வருகிறது. உடனே மன்னனிடம், ரத்னாவைக் காப்பாற்ற தான் கிளம்புவதாகவும் திரும்புவது நிச்சயமில்லை என்றும் கூறுகிறான். அப்போது கார்

1958-59 உங்கள் எதிரில்



ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு மலரின் பெயரையும் உங்கள் பெயர்விலாசத்தையும் எழுதி அனுப்புங்கள். நாங்கள் உங்களுக்கு ரூ. 1.25க்கு தனித் தபால் செலவுடன், உங்களுக்கு வரும் 12 மாதங்களில் ஏற்படும் பலன்களையும் வியாபாரத்தில் லாப நஷ்டம், பதவி உயர்வு, உத்தியோக மாற்றம், குழந்தைப் பேறு, சந்துஷ்டி மற்றும் தேக அசௌகரியங்களையும் அவைகளினின்றும் பாதுகாக்கும் குறிப்புகளையும் அனுப்புகிறோம்.

SHREE SWAMI SATNARAIN JOTISH ASHRAM

(P.P.M.) Jullundur City. (Pb.)

மேகத்தின் கண்களில் நீர் வடிகிறது. கடமை, கண்ணியம் கட்டுப்பாடு கொண்ட ஒரு தேசபக்தன், உயிருக்குத் துணிந்து செயலில் இறங்கும்போது, துரோகியின் மனம்கூட வேதனைப்படும் என்பதைத் தெளிவாக விளக்குகிறது இக்காட்சி.

கீழையூர் சீனு,
சென்னை.

மதனுவிடம் வந்து, மனமுருகி கண்களில் நீர்வழிய நிற்கிறான் வீராங்கன். அவள் அவனைத்தேற்றி அரண்மனைக்குப் போகுமாறு கூறுகிறாள். அவன் மேற்கொண்ட பணியில் வெற்றி வெறும்போது தன் உயிர் அதைக்கண்டு மகிழும் எனக் கூறுகிறாள். அவள் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு அப்படிக் கூறுகையில் வீராங்கனுடன் நம் கண்களிலும் தாரை தரையாக நீர் வழிகிறது. தேசத்திற்காக தன் உயிரைக்கூட பணயம் வைக்கும் வீரப் பெண்மணியின் மனநிலையை விளக்கும் இக்காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

பி. எஸ். கிருஷ்ணசாமி,
சென்னை.

வீராங்கன் மனோகரியின் அறைக்குள் சொல்லும்படி நேரிடுகிறது. மனோகரி மார்த்தாண்டன் என்று தன்னை நினைத்துப் பேசும்போது வெளியே வந்து மந்திரி, தளபதியிடம் கோபிக்கிறான். மீண்டும் ராஜா வேஷம்போட நேரும்போது, மகாராணியாரை தான் சந்திக்கும் நிலையை ஏற்படுத்தக் கூடாதென்ற நிபந்தனையுடன்தான் ஒப்புக்கொள்ளுகிறான். ஒரு நேர்மையான மனிதனின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் சிறந்தகாட்சி இது.

ஜேசுதாசன்,
காரைக்குடி.

மதனுவை கட்டிவைத்து விடுகிறான் பிங்களன். அப்போது வீராங்கன் வந்து, அவனைக் காப்பாற்றி பிங்களனை கட்டிப் போடுகிறான். அவனிடம் வருகிறாள் மதனு, கோபத்தோடு. பிங்களனை அடிக்கப் போகிறாள் என்று நினைக்கிறோம் நாம். ஆனால் 'சீ' என்று அலட்சியமாகப் போய் விடுகிறாள். பழிவாங்கும் மனோபாவத்தை விட்டொழித்து, மன்னிக்கும் மனோபாவம் வளர வேண்டுமென்பதை விளக்கும் இக்காட்சியை நான் ரொம்பவும் ரசித்தேன்.

சம்பத் ரங்காச்சாரி,
ராயபுரம்.

தேடி வந்த செல்வம்

பணக்கார வீட்டு மாப்பிள்ளையாகிவிட்ட கர்வத்தினால் திமிரோடு பேசும் அம்பலத்தின் மார்சட்டையைப் பிடித்து நிறுத்தி, "நீ இதுவரை பிளாட்பாரத்தில் நடை

பாதையில் நடந்துகிட்டு இருந்தே. இப்போ ரோட்டுலே இறங்கிட்டே. ஜாக்கிரதையா பாத்து நட'' என்று எச்சரிக்கிருன் அவன் நண்பன் பிளாட்பாரம். இது அம்பலத்துக்கு மட்டும் படத்தில் எச்சரிக்கை செய்யப்படவில்லை. பணம் கிடைப்பதால் பண்பை இழந்து விடுபவர்களுக்கு விடுக்கும் எச்சரிக்கையாகும் இது.

வீ. பாலசுப்ரமணியம்,
செங்கற்பட்டு.

சிதம்பரம் உழைத்துச் சம்பாதிக்கிருர். அம்பலம் அநியாயமான வழிகளில் சம்பாதிக்கிருன். கடைசியில் அவன், தனது தகப்பனுரையே கொல்ல முயற்சிக்கும்போது, சிதம்பரம் தடுத்து 'அடி அடி'யென்று அடித்து விடுகிருன். அத்துடன், ''கேவலம் பணத்திற்காகத் தானே இப்படி யெல்லாம் செய்கிருய்? இந்தா நான் உழைத்துச் சம்பாதித்து அப்பாவுக்காகக் கொண்டு வந்த பணம். இதை நீயே தின்னு'' என்று கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுக்களை அம்பலத்தின் மீது வீசியெறிகிருன். வளர்ப்புத் தத்தைக்காகப் பாடுபட்டுச் சம்பாதித்து, அதை அவர் மகனுக்காகவே கொடுத்து விடுகிருன். ஒருவனின் நல்ல செயல் தான் அவனுடைய குணத்தைப் பிரதிபலிக்கும் என்பதை விளக்கும் சிறந்த காட்சி இது.

சம்பத்,
சென்னை.

அமிர்தலிங்கம் கால் ஊனமாகியதும் தன் மனைவியிடம் புலம்புகிருன். ''நான் செய்த கொடுமைகளுக்காக இப்படியெல்லாம் கஷ்டப்படுகிறேன். ஆனல் உத்தமியான நீ, எனக்குப் புத்தி கூறிய நீ அனுவசியமாகக் கொடுமைப் படு

இனும் ரூ. 1000

ஜலந்தரில் ஒரு தோலா தங்கம் விலை ரூ. 2-50 தான்

இந்த அமெரிக்கன் நியூ கோல்ட் அசல் தங்கத்தைப் போன்றது. நீண்ட கம்பிகளாக்கவும், எல்லாவிதமான ஆபரணங்கள் செய்வதற்கும் ஏற்றது. மிக்க அனுபவசாலிகளான வியாபாரிகள்கூட, அசல் தங்கத்திற்கும் இந்த அமெரிக்கன் நியூகோல்டுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கத் திணறுவார்கள்.

விலைவாசி உயர்ந்துள்ள இந்நாளில் கல்யாணம், மற்றும் இதர விசேஷங்களில் பணத்தைச் சேமிக்க இன்றே உங்கள் தேவையைக் குறித்து அனுப்புங்கள். இந்த அமெரிக்கன் நியூ கோல்ட் பொய்யானது என்பதை நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஒரு தோலா ரூ. 2-50; மூன்று தோலா ரூ. 7. ஆறு தோலா ரூ. 13. பத்து தோலா ரூ. 20. தபால் செலவு தனி. இன்றே எழுதுங்கள். **நீங்கள் அங்கீகரிக்கா விட்டால் உங்கள் பணத்தை வாபஸ் செய்ய நாங்கள் உத்திரவாதம் தருகிருேம்.**

IMPERIAL COMMERCIAL COMPANY
(PM) JULLUNDUR CITY.

வதை என்னால் சகிக்கமுடியவில்லை'' என்று பலப்பல கூறி வேதனைப் படுகிறான். அவள் பதிலுக்கு, ''கணவனின் சுகதுக்கங்களில் பங்கெடுத்துக்கொள்வதுதானே மனைவியின் கடமை'' என்று கூறுகிறாள். தவறுக்கு வருந்துபவனுக்கு மன்னிப்பு கிடைக்கும் என்பதையும் ஒரு உத்தம மனைவியின் மனதையும் விளக்கும் சிறந்த காட்சி இது.

எஸ். பி. பொன்னுசாமி,
திருச்சி.

அமிர்தலிங்கம் தன் மகன் செய்த கொடுமைகளைப் பற்றி மனைவியிடம் கூறி வருந்துகிறான். ''என்ன செய்வது? வினை விதைத்தோம். வினை அறுக்கிறோம்'' என்று கூறி வருந்துகிறாள். ஆரம்ப முதல் குடும்பத்தின் தலைவனான தன் கணவனின் கொடும் புத்தியைக் கண்டித்து வந்த அவள், இப்போது இப்படிச் கூறினாலும் கணவனிடம் மிகவும் பக்தியுடனும் அன்புடனும் நடந்து கொள்ளுகிறாள். ஒரு உத்தமியின் பெருமையை உணர்த்தும் இக்காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

வேதாசலம்,
சென்னை.

முருகேசம் மிகவும் பெருந்தன்மை வாய்ந்த சீமான். அவரது வீட்டுக்கு அவர்காரில் அவர் அறியாமல் வரும் சண்பகத்தைப்பற்றி விசாரிக்கிறார். அப்போது அவள் தன் அத்தானை மணப்பதற்காக அப்பாவுக்குத் தெரியாமல் ஓடி வந்து விட்டதாகக் கூறுகிறாள். ''பெண்கள் வீட்டில் இருக்கும் வரையில்தான் தெய்வங்கள்!'' என்று கூறி, இந்தக்காலத்துப் பெண்கள் எடுத்ததற்கெல்லாம் வீட்டை விட்டுக் கிளம்பி விடுவது தவறு என்று சுட்டிக் காட்டுகிறார். அவசரம், முன்கோபம் காரணமாக வீட்டை விட்டு வெளியேறிப் பல விதங்களிலும் கஷ்டப்படும் பெண்களுக்குப் புத்திபோதிக்கும் இக்காட்சியை நான் நன்கு ரசித்தேன்.

சுந்தரவரதன்,
திருவள்ளூர்.

பெரியகோயில்

வீட்டுக்கருகில் வெய்யில் நேரத்தில் விறகு பிளக்கும் முத்துவை சாப்பாட்டுக் கழைக்கிறாள் அவன் அன்பு மனைவி செல்லம். விறகு வெட்டி முடிந்ததும்தான் வருவேன் என்கிறான் அவன். அப்போது அவன் தாயார் வந்து முத்துவின் குழந்தையை வெய்யிலில் கிடத்துகிறாள். அவன் புத்திர பாசத்துடன் வாரியணைக்கிறான் தன் குழந்தையை. அப்போது அவன் தாயார் தாய்ப்பாசம் பற்றிக் கூறுகிறாள். ரசமான காட்சி இது.

மை. ஆ. அருணாசலம்,
சென்னை.

காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!

ரூ. 2/50 - க்கு, 96" × 54" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரண திருப்திக்கும் உத்திரவாதம். இல்லையேல்பணம்வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR
SHAWL HOUSE (PM)
AMRITSAR.



லக்மே

டால்கம் பௌடர்

லக்மே டால்கம்
பௌடரினுடைய பட்டுப்
போன்ற மிருதுத்தன்மையை
உணருங்கள் . . . அவ்வளவு
இன்பகரமானது, அவ்வளவு
மணமுள்ளது ! லக்மே
உங்களுக்காக பாரீஸ் நாகரீக
முறையில் நேர்த்தியாக
தயாரிக்கப்பட்டு, வாசனை
கலக்கப்பட்டிருக்கிறது . . .
பெண்மணிகளாகிய
உங்களுக்காகவே!
லக்மேயுடன் அலங்காரம்
ஆரம்பம் ஆகிறது.

Lakmé லக்மே – ஒரு டாடா தயாரிப்பு

வெட்டுங்கள்! வெட்டுங்கள்!

நாடோடி மன்னன்

கன்னித்தீவின் ஆட்களால் துரத்தப்பட்டு வரும் வீராங்கன் ரத்னுவின் அந்தப்புறத்திற்கு வருகிறுன். அவள் உடைகளைக் களையும் போது எட்டிப் பார்க்கிறுன். அவள் தான் ரத்ன என்பதை அவன் கண்டு பிடிக்க அக்காட்சி உதவினுலும் இது வீராங்கனின் நேர்மைக்குக் களங்கம் கற்பிக்கிறது. தோழிகள் இதைப் பற்றிப் பேசும்போது கேட்டு, பிறகு அவன் அதைக் கவனிக்க முயற்சிப்பதுபோல் காட்டியிருக்கலாம். இந்தக் காட்சி வெட்டப்படவேண்டும்.

மணியம்,
சென்னை.

சாரங்கதரா

மகாராஜா காட்டுக்குச் சென்றதும் சாரங்கதரன் தன் காதலி கனகாவை நந்தவனத்தில் சந்திக்கிருன். இந்தக் கட்டத்தில் அவள் மடிமேல் சாரங்கதரன் படுத்திருக்கிருன். இதை ரொம்ப நேரம் காட்டுகிருர்கள். இந்தக் காட்சி காதல் காட்சியாகப் படவில்லை. இளம் உள்ளங்களைக் கெடுக்கும் ஆபாசமான காட்சியாகவே படுகிறது. ஆகவே இதைக் கூசாமல் வெட்டிவிடவேண்டும்.

எஸ். ஏ. டி. அண்ணுமலை,
பாண்டிச்சேரி,

நாடோடி மன்னன்

மன்னன் என்று நினைப்பதால் வீராங்கனை மரியாதைப்டன் அழைக்கிருர்கள், மந்திரியும் தளபதியும். உடனே, ''இனியும் இந்த வேஷம் எதற்கு?'' என்று கூறி அவன் தாடியைப் பிடித்திழுக்கிருர்கள். மன்னனிடம் பக்தி கொண்டவர்கள் எனக்கருதப்படும் மந்திரியும் தளபதியும் தாடியைப் பிடித்திழுக்கும் அளவுக்கு மட்டமாக நடந்து கொள்ள மாட்டார்கள். ஆகவே தாடியைப் பிடித்திழுக்கும் கட்டத்தை வெட்டிவிட வேண்டும். மார்த்தாண்டன்வந்ததும், வீராங்கன் வேறு என்பது புரிந்து விடுமே.

சந்திரமௌலி
கும்பகோணம்.

'ஜிம்போ' வர்ணப் படத்தில் நடிகை சித்ரா.


நாம்
ஒன்றுகூடி இன்றிரவு
நமக்குப் பிடித்தமான
நூலாசிரியர்களைப் பற்றி
விவாதிப்போம்
......தேநீர்
பரிமாற
மறந்து
விடாதீர்கள்
நான்தான் டீ
2737 கி. மு. முதல் பிரசித்திப்பெற்றது
TEA BOARD
INDIA
PST 209

தேடி வந்த செல்வம்

வளர்ப்புத்தாயிடம், "நீங்கள் ஆசையோடு வளர்த்த உடல் இருக்கிறது. கற்றுக்கொடுத்த பண்பு இருக்கிறது. உழைத்துச் சம்பாதிக்கும் திறமை இருக்கிறது" என்று கூறி வீட்டைவிட்டு வெளியேறுகிறான் சிதம்பரம். பிறகு ஒருவனை அடித்துப் போட்டுவிட்டு, குத்துச் சண்டை நடத்துபவர்களிடம் பேசும்போது, "ஒரு ஆளை அடிக்க பத்து ரூபாய் கொடுத்தால் போதும்" என்கிறான். இந்தக் கட்டம் அவன் பண்புக்கே இழுக்கு தருவதால் இதை வெட்டிவிட வேண்டும். குத்துச்சண்டை போடுவதற்கென்று பணம் கேட்டிருக்கலாம்.

ஆறுமுகம் சிகாமணி,
சென்னை.

ரூபாய் 6/-க்கு ஒரு கடிகாரம்



சங்கிலித் தொடர்பு முறையில் ரூ. 6/-க்கு ஒரு கடிகாரத்தைப் பெறுங்கள். 15 ஜுவெல்கள் கொண்ட இக்கடிகாரம் 5 வருஷ உத்திரவாதமுள்ளது. தபால் செலவு ரூ. 1-25 நயா பைசே தனி. எங்களுடைய பாரடைஸ் சென்டைப் பிரபலப்படுத்தவே இதை ஆரம்பித்திருக்கிறோம். நீங்கள் விரும்பாவிட்டால் பணம் வாபஸ்.

American Trading Company,
(Watch Suppliers)
(PPM) JULLUNDER CITY.

நாடோடி மன்னன்

ரத்னாவை பிங்களனிடமிருந்து மீட்டு அழைத்துச் செல்கிறான் வீராங்கன். கன்னித்தீவுக் கன்னி களைத்துப் போகிறாள் போலும். சிற்றோடை வருகிறது குறுக்கே. மலர்க் கொடியாளை உடனே அப்படியே அலாக்காகத் தூக்கிச் சென்று ஓடையைக் கடக்கிறான். அவளும் அதைத்தான் எதிர்பார்த்தாள் போலும்! பெண்ணினத்தின் பெருமையைக் காக்க வேண்டியவள் அதுவும் நாட்டின் இளவரசியை மீட்டு வருபவன் இந்தக் காரியம் செய்யலாமா? ஆபத்துக்குப் பாபமில்லை என்று சொல்லக் கூடிய செயலா இது? காமக்களியாட்டக் காட்சியான இதை வெட்டி விட்டால் வீராங்கனின் கௌரவம் நிலைக்கும்.

எம். எஸ். பாலகிருஷ்ணன்,
சென்னை.

தேடிவந்த செல்வம்

தகப்பனார் அமிர்தலிங்கம் ஊரிலிருந்தால் ஆபத்து என்று நினைக்கும் அம்பலம், ஒரு காரில் நூறு மைல் தொலைவில் கொண்டு போய் விட்டுவிட்டு, அவரது ஊன்றுகோலையும் பறித்துக் கொண்டு வரும்படிச் செய்வதாகக் காட்டப்படுகிறது இப்படத்தில். உணர்ச்சிவசப்பட்டு, பேச்சு வார்த்தை வளர்ந்து, முன்கோபத்தால் பெற்ற தகப்பனையும் கூடப்பிறந்தவர்களையும் மனைவி மக்களையும் குத்திக் கொன்று விடும் மனிதரின் செயல் பற்றிப் படித்திருக்கிறோம்; சிலர் பார்த்திருக்கலாம். ஆனால் பெற்ற தகப்பனைத் திட்டமிட்டு நூறு மைலுக்கு அப்பால் கொண்டுவிட்டு, நொண்டியான அவரது ஊன்றுகோலைப்பறித்து வரும்செயல் கற்பனைக்கு எட்டாதது. இது முக்கியமுமல்ல. ஆகவே இக்காட்சியை வெட்டிவிட வேண்டும்.

எம். கே. ஆர்., செங்கற்பட்டு.

வாசு
பிலிம்ஸ்
ஒரே வழி

சகஸ்ரநாமம், பாலய்யா, எஸ்.
வி. சுப்பய்யா, பிரேம்நசீர்,
ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம்,
தாம்பரம் லலிதா, கே. ஆர்.
செல்லம் முதலியோர் நடிக்
கிறார்கள். ஜாவர் சீதாராமன்
இதன் கதை - வசனகர்த்தா.



அருணாசலம்
பிக்சர்ஸ்
பெரிய கோயில்

ஏ. கே. வேலனின் அருணுசலம் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தை வேலனே டைரக்ட் செய்துள்ளார். பிரேம்நசீர், எம். என். ராஜம் ஜோடி பிரதம பாகங்களில் நடித்துள்ள இப்படத்தில் வி. கே. ராமசாமி, கள்ள பார்ட் நடராஜன், கண்ணும்பா ஆகியோரும் நடித்திருக்கின்றனர். இப்படத்தின் சென்னை விநியோக உரிமையை பிரிலியண்ட் பிக்சர்ஸார் பெற்றிருக்கிருர்கள்.

மெட்ரிக் முறை என்பது என்ன ?



மீட்டர்

கெஜம்

மெட்ரிக் முறையில் மீட்டர் என்பது அடிப்படை நீட்டல் அளவு. இந்த மீட்டரிலிருந்து உண்டான அளவுகளைக் குறிக்கும் முறை மெட்ரிக் முறை என்று பெயர் பெற்றது. எல்லா தசாம்ச முறைகளிலும் 10 ஆல் பெருக்கி அல்லது வகுத்து மற்ற அளவுகளைக் கணக்கிடுகிறோம். மெட்ரிக் முறையிலும் இப்படியே.

மெட்ரிக் முறையில் *டெகா* (பத்து தடவை), *ஹெக்டா* (10 x 10 = 100 தடவை), *கிலோ* (10x10x10 = 1000 தடவை) என்னும் சொற்களை முன்னால் இணைத்து அடிப்படை இலக்கத்தின் பெருக்கங்களைக் குறிப்பிடுகிறோம். அது போலவே. *டெசி* (1/10), *சென்டி* (1/100), *மில்லி* (1/1000) என்னும் சொற்களை முன்னால் இணைத்து கீழ்வாய் இலக்கங்களைக் குறிப்பிடுகிறோம்.

மெட்ரிக் முறை எடைகளும் அளவுகளும் 1958 அக்டோபரிலிருந்து அமுலுக்கு வருகின்றன

மெட்ரிக் நீட்டல் அளவுகள்

நீளக்கணக்கில் அடிப்படை அளவை
மீட்டர்
= சுமார் 40 அங்குலம்
1 கிலோ மீட்டர் = 5 பர்லாங் தூரம்

கீழ்வாய் இலக்கங்கள்

10 மில்லிமீட்டர்	= 1 சென்டிமீட்டர்
10 சென்டிமீட்டர்	= 1 டெசிமீட்டர்
10 டெசிமீட்டர்	= 1 மீட்டர்

பெருக்கங்கள்

10 மீட்டர்	= 1 டெகாமீட்டர்
10 டெகாமீட்டர்	= 1 ஹெக்டாமீட்டர்
10 ஹெக்டாமீட்டர்	= 1 கிலோமீட்டர்

OA 58/109

2

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

தபால் பெட்டி

* தவறு எங்கே?

இந்தியாவில் தயாராகும் எந்தத் திரைப்படமும் சர்க்கார் அதிகாரி, தேர்ந்தெடுக்கப்படும் தணிக்கைக் குழு இவர்களின் தணிக்கையின்றி திரையிடப்பட முடியாது. ஆக ஒரு திரைப்படம் திரையில் காட்டப்படுவதாக இருந்தால், 'அது திரையிடப்பட சகல தகுதிகளும் வாய்ந்தது' என்ற அத்தாட்சியுடன்தான் வெளியிடப்பட முடியும். இது சர்க்காரின் ஒரு பொறுப்புள்ள மந்திரி காரியாலயத்தின் பகுதியாகும். ஆனல் அந்தத் தணிக்கையில் சிலசமயம் சில தவறுகள் நேர்ந்து விடுகின்றன, இருபொருட் சொற்கள் —காரணமாக. மக்கள் எடுத்துக் கூறுகிருர்கள் பிறகு. பொறுப்புள்ள மந்திரிகளும் தலைவர்களும் சினிமாவை ஒருபுறம் குறைகூறிக் கொண்டேயிருக்கிருர்கள். ''ஆபாசம் — பெண்கள் கெட்டு விடுகிருர்கள் — பணம் வீணுகிறது'' என்றெல்லாம் கூச்சல் கிளம்புகிறது. இது பொறுப்புள்ளவர்கள் பேசும் பேச்சல்ல. தவறு எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடித்துப் பரிகாரம் காண முயலுவதே சாலச் சிறந்தது. நாட்டுக்கும் நன்மை. பிடிக்காததை ஒழித்து விடுவதானல் அது எதேச்சாதிகார—சர்வாதிகார மனப்பான்மையாகும்.

ராகவன்,
குரோம்பேட்டை.

''ஆட்டுக்குட்டி வாங்கலியா ஆட்டுக்குட்டி''-கல்யாணி பிக்சர்ஸின் ''தாமரைக் குளம்'' படத்தில் வி. கோபாலகிருஷ்ணன்

* ஒரு மாறுதல்

நம் தமிழ்ப் படங்களில் ஒரு தவருன கருத்து நிலவி வருகிறது. கொடுமைகள் புரிபவன், சட்டத்தைத் தன் கையில் ஏந்தும் கதாநாயகனல் கொல்லப்பட்டு விடுவான். அதாவது அந்தக் கொடியவன், கொடியவனகவே வாழ்ந்து மடிந்தும் போகவேண்டும். சமீபமாக வரும் படங்களில் ஒரு திருப்பம் —புது மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. கொடுமையாளன் திருந்தி நல்லபடியாக வாழமுடியும் என்றநிலை ஏற்படும் சூழ்நிலை வளர்க்கப்படுகிறது. பிள்ளைக் கனியமுது படத்திலே சச்சி

* இக்குறியிட்ட இரண்டு கடிதங்களுக்கு தலா ஐந்து ரூபாய் பரிசளிக்கப் பட்டிருக்கிறது.

தானந்தம் தன் தவறுக்கு வருந்தி மன்னிப்பும் பெற்றுப் புது வாழ்வு வாழ ஆரம்பிக்கிருன். இந்த மாறுதல் வர வேற்கப் படுவதாகும். மனிதனுகப் பிறப்பவன் தவறுகள் செய்வது இயற்கை. அதிலிருந்து அவனுக்கு ஒருபாடம் கற்பிக்கப்பட்டு அவன் திருந்தி நல்வாழ்வு வாழ முடியும் என்ற ஒரு வளர்ச்சியை நாம் நிச்சயம் விரும்புகிருேம். இனி வரும் படங்களிலும் - (அது 'சபதம்' படமாக இல்லாதிருக்க வேண்டும்!) வில்லன்களில் ஓரிருவராவது தவறுணர்ந்து மன்னிப்பு பெற்று வாழ்வதாகக் காட்டப்பட வேண்டும்.

அ. ஜெயமணி,
ஈரோடு.

சபாஷ் ஜெமினி கணேசன்

ஜெமினி கணேசன் தனக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களில் சிலவற்றை இளம் நடிகர் பாலாஜிக்கு சிபார்சு செய்கிருர் என்ற செய்தியறிந்தேன். என் உள்ளம் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. இப்போது தமிழ்ப் படவுலகில் கதாநாயகர்கள் குறைவாக — மூன்று நான்கு பேர் மட்டும் இருப்பதால், பல படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியும் சரிவர அந்த நடிகர்கள் ஒத்துழைப்பதில்லை என்ற குற்றச்சாட்டுகள் இருப்பதையும் அறிந்தேன். பல படங்களில் கையெழுத்திட்டு விட்டுத் திண்டாடாமலும் தொழிலில் மதிப்பு குறைந்து விடுமே என்று பயப்படாமலும், தனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை, இளம் கலைஞர்கள் முன்னுக்கு வரவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு — பாலாஜி போன்ற கலைஞர்களுக்குச் சிபார்சு செய்கிருரென்ருல் அந்தப் பெரும் மனப்பண்பைப் பாராட்டாமலிருக்க முடியாது. ஏராளமானவர்கள் தொழில் திறமையிருந்தும் கை தூக்கி விட ஆளின்றி புதைந்து கிடக்கிருர்கள். ஜெமினி கணேசனைப் போல் மற்றவர்களும் துணிந்து இதைப்போன்ற நற்பணியைச் செய்ய முன்வருவார்களா?

பி. எஸ். எம்.,
பெங்களூர்.

பாராட்டுகிறேன்

சென்ற மாதம் 'பேசும் படம்' இதழில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனைபற்றி எழுதியிருந்த நினைவுநாள் குறிப்பைப் படித்ததும் என் கண்களில் நீர்வழிந்தது. எவ்வளவு ரத்னச் சுருக்கமாக அவரைப்பற்றி அழகாகக் குறிப்பிட்டு விட்டீர்கள்! இந்தச் சமயத்தில் சென்னை வானொலி

கே. எம். டி. வி. என்.னின் 'மனைவியே மனிதனின் மாணிக்கம்' தமிழ்ப் படத்தில் பாலாஜி.

நிலையம் சென்ற மாதம் 29-ம் தேதி நடத்திய கலைவாணர் நினைவுநாள் இசைத்தட்டு நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப் பிடாமலிருக்க முடியவில்லை. மனோன்மணி, நல்லதம்பி, சந்திரலேகா போன்ற படங் களில் அவர் பாடல்களைக் கேட்க நேர்ந்தது. கலைவாண ரைப் போன்ற ஒரு மனிதன் கலையுலகில் பிறந்ததில்லை; பிறக்கவில்லை; பிறக்கப் போவதுமில்லை. அவரது திறமை தனிச்சிறப்பு பெற்றது. இந்த 'அசல்' தன்மை பெற்ற கலைஞரை நல்ல முறையிலே நினைவுபடுத்திய 'பேசும் படம்', சென்னை வானொலி நிலையம் இரண்டையும் பாராட்டு கிறேன்.

எம். ஓய். ராமசாமி,
செங்கற்பட்டு.

'ஒலகத்தை புரிஞ்சு நடக்கணும் மா!' - லலிதகலாவின் 'உழவுக் கும் தொழிலுக்கும் வந்தனை செய் வோம்' படத்தில் வி. ஆர். ராஜ கோபாலும் ராஜேஸ்வரியும்.

உண்மை உழைப்பு

சமீபத்தில் வெளிவந்து மகத் தான வெற்றியுடன் ஓடிக் கொண்டிருக்கும் 'நாடோடி மன்னன்' தமிழ்ப் படத்தைத் தயாரித்த எம். ஜி. ராமச்சந்தி ரன் நமது பாராட்டுக்குள்ளா கிறார். தயாரிப்பு, டைரக்‌ஷன், இரட்டைவேட நடிப்பு மூன்றி லும் அவருக்கு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. ஒரு நடிகர், சொந்த ஸ்டுடியோ வசதிகள் இல்லாதவர், ஒரு பிரம்மாண்டமான படத்தை (அதுவும் பாதி வர்ணத்தில்) தயாரித்திருக்கிறார். டைரக்‌ஷ னிலும் குறைபாடுகள் அதிகம் இல்லை. இரண்டு மாறுபட்ட வேஷங்களில் தோன்றிச் சிறப் பாக நடித்துமிருக்கிறார். இதற்கு முன் பல நடிகர்கள் தயாரிப்பிலீடுபட்டார்கள். சிலர் இருக்குமிடம் தெரிய வில்லை. சிலர் இரண்டுங் கெட் டானாக இருக்கிறார்கள். ஆனால் முதல் முயற்சியிலேயே வெற்றி கண்ட எம். ஜி. ஆர்., தனது உண்மை உழைப்பின் மூலமே இப்படி வெற்றி பெற்றார் என் பதை மற்றவர்களும் புரிந்து பின்பற்றினால் தோல்வி ஏற்பட நியாயமில்லை.

வீராசாமி,
காஞ்சீபுரம்.

தவறல்லவே!

'சமீபத்தில் திரையிடப்பட்ட 'நாடோடி மன்னன்' தமிழ்ப் படத்தில் தி. மு. க.வின் கொள்கை விளக்கம் தரப்படு கிறது. கட்சிக் கொடியையும் காட்டுகிறார்கள். இது தவறு' என்கிறார்கள் சிலர். இவர்கள் மாற்றுக் கட்சித் தோழர் களோ, அனுதாபிகளோ தெரி யாது. சில பத்திரிகைகளும் கட்சிக் கொள்கையைப்பற்றி

இப்படம் பிரசாரம் செய்வதாகக் குற்றம் சாட்டியிருப்பது வருந்தத்தக்கது. சென்ற தேர்தலின்போது காங்கிரஸ் கட்சி ஒரு தனிப்பிரசாரப் படத்தையே தயாரித்து மற்ற கட்சிகளைக் கிண்டல் செய்ததை இவர்கள் மறந்து விட்டாலும் மக்கள் மறக்கவில்லை. எல்லாக் கட்சியினரும்தான் படத்தயாரிப்பில் ஈடுபடுகிறார்கள். சிலர் நல்லபடியாகச் செய்தால் அதை மற்றவர்கள் கண்டிப்பது முறையா? மக்களுக்குப் பல கட்சிகளிருப்பது தெரியும்; அவர்களிடம் பலர் ஓட்டு கேட்க வருகிறார்கள், பிரசாரமும் செய்கிறார்கள். படத்திலும் ஜாடையாகச் செருகுகிறார்கள். அந்தச் செருகல் பொருத்தமாக இருந்தால் அவர்களுக்கு வெற்றியே. ஆனால் மக்கள் படம் பார்க்கும்போது — இதையெல்லாம் அறிந்திருந்தாலும்கூட — படத்தின் தரத்தை மட்டுமே மதிப்பிடுகிறார்கள். படம் எப்படி என்பதுதான் இனிப் பிரதானமானது. கட்சி அடிப்படையில் எதையும் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ் கட்சி, கட்சிப் பிரசாரத்திற்குச் சினிமாவை கருவியாக்கும் போது, சிறு கட்சிகளைப் பற்றி குற்றம் சாட்டுவது நியாயமா?

சம்பத்,
சென்னை.

ஸ்ரீமதியின் 'மாலா ஒரு மங்கல விளக்கு' படத்தில் மாதுரிதேவி, சாரதாம்பாள்.

நல்ல தணிக்கை!

கேரளத்தில் 24-8-58-ல் 'இரண்டிடங்களி' என்னும் மலையாள சமூகப்படம் திரையிடப் பட்டிருக்கிறது. அது சமூகப்படமா?....அல்ல...கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசார மேடையாக அதை ஆக்கியிருக்கிறார்கள். இந்தப் படத்தில் கம்யூனிஸ்ட் கொடியே காட்டப்படுகிறது. அதன் கீழ் "யூனியன்" என்னும் கூட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு, க்ருஷி நிலம் க்ருஷிகாரருக்கு (விவசாயம் செய்யப்படும் நிலம் விவசாயிகளுக்கே சொந்தம்) என்றும் — முதலாளித்துவத்தைத் தொலைக்க நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வோம் என்ற ஒரே நோக்கோடும் கோஷமிட்டு யாத்திரை செய்வதாகப் படம் முழுவதும் காட்டப்படுகிறது. தணிக்கைக் குழு என்ன செய்து கொண்டிருந்தது?

ஆர். ஸ்ரீதரன் சீமாட்டி,
கோட்டயம்.

மறந்தோமே

நாம் கொஞ்சங் கொஞ்சமாகப் பழைய நடிகர்களை

மறந்து வருகிறோம். பழைய நடிகர்களில் கதா நாயகர்களாக நடித்துப் புகழ் பெற்றவர்களும் உண்டு. வேறு முக்கிய பாத்திரங்களில் நடித்துப் புகழ்பெற்றவர்களும் உண்டு. பழைய திறமைமிக்க நடிகர்கள் இன்று திறமை குன்றிப்போய் விட்டார்களா? பி. பி. ரங்காச்சாரி ஒரு திறமைமிக்க நடிகர் என்பதை யாரும் மறுக்க முடியாது. 'புதுவாழ்வு' படத்தில் கூட அவர் சிறப்பாகவே நடித்திருக்கிறார். இவரைப் போன்ற பல நடிகர்களை இன்றைய முதலாளிகள் மறந்துவிடக் காரணம் என்ன?

வி. ஆர். பாலன்,
சென்னை.

தவறான பிரசாரம்

சமீபமாக ஓரிரு பத்திரிகைகள் எம். ஜி. ராமச்சந்திரனை பற்றிக் கண்டபடி எழுதி வருவதைக் கண்டு மிகமிக வருந்துகிறேன். அவரைப் பற்றிய அவதூறுகளில் 'சுரண்டும் சிலந்தி' என்பது ஒன்று. இதைக் கண்டு யாரும் வருந்தாமலிருக்க முடியாது. வெட்கப்படுவார்கள். எம். ஜி. ராமச்சந்திரன், என். எஸ். கிருஷ்ணனைப் போல தன் வருமானத்திலிருந்து அடிக்கடி பல நல்ல காரியங்களுக்கு — தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு— பெரும் தொகைகளை நன்கொடை அளித்து வருகிறார். தமிழுக்குத் தொண்டு செய்யும் நற்பண்புள்ள பெருங்கலைஞரான எம். ஜி. ராமச்சந்திரனை சுரண்டுபவர் என்று கூறுவது பைத்தியக்காரத்தனம்; நம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்ளுவதாகும். இப்படிப்பட்ட தவறான பிரசாரம் விரும்பத் தக்கதல்ல.

எஸ். ராமச்சந்திரன்,
சென்னை.

'சிரஞ்சீவி'யின்

அற்புதமான மர்ம நாவல்

நள்ளிரவில் நடந்தது

பிரபல நடிகை சுகந்தியின் அறையில் மாண்டவனின் சவம் மறைந்த மாயம். அதைத் தொடர்ந்து பல மர்மங்கள். படித்து முடிக்கும் வரை புஸ்தகத்தை கீழே வைக்க மனம் வராது.

விலை ரூ. 1. 25

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை-2.

எம்ஜியார் பிக்சர்ஸ்

காட்சி 9

'நாடோடி' மன்னன் ஆனான்

மன்னன் மார்த்தாண்டன் மிகமிக நல்லவன் என்பதை புரிந்து கொண்டிருந்தான் நாடோடி வீராங்கன். இப்போது மகுடாபிஷேகத்திற்குப் போகமுடியாத நிலையில் மயக்கமாகிக் கிடக்கிறான் மார்த்தாண்டன். என்ன செய்வதென்று புரியாமல் தவிக்கிறான் வீராங்கன். மந்திரியும் தளபதியும் அவனுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கின்றனர். "குருநாதர் பிங்களனை அரசனுக்கு வதன் மூலம்

நாடோடி மன்னன்

நாட்டைக் கைப்பற்றவும் திட்டமிட்டிருக்கிறார். ஆகவே மார்த்தாண்டனைப் போலவே சாயலுள்ள வீராங்கன் முடிசூட்டிக் கொண்டு விட வேண்டும்; மன்னனுக்கு மயக்கந் தெளிந்ததும் வீராங்கன் போய்விடலாம்" என்பதுதான் அது. முதலில் மறுத்தாலும் நிலைமையை உணர்ந்து, நாட்டின் நலனுக்காக ராஜா வேஷம்

திரைக்கதை வசனம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

போட ஒப்புக்கொள்ளுகிறுன் வீராங்கன். மகுடாபிஷேக வைபவத்தில் மன்னன் மார்த்தாண்டன் மது வருந்தி மயக்கமாகக் கி'-ப்பதால், குடிகாரனை மன்னன் நாட்டுக்குத் தேவையில்லை என்ற வாதத்தைக் கிளப்பி பிங்கஎன் தலையில் கிரீடத்தை வைக்கப் போகிருர் ராஜகுரு. அப்போது திடீரென்று மந்திரி, தளபதி இருவருடனும் அங்கு தோன்றிய வீராங்

கன், முடியை ராஜகுருவிடமிருந்து லாகவமாகப் பெற்று தன் தலையிலணிந்து கொள்ளுகிருன். பிறகு முன்பே தீர்மானித்தபடி பேச ஆரம்பிக்கிருன்.

வீரா : மாட்சிமை தங்கிய குருநாதர் அவர்களே! எனக்கு மன்னராட்சி என்ருலே பிடிப்பதில்லை. இருந்தாலும் குருநாதரின் தயவால் இன்று நான் மன்னனுகி விட்டேன். ஆகவே எனக்குப் பிறகு மன்னராட்சி இருக்காது. இனி யாரும் பரம்பரை பாத்தியதை கொண்டாடக் கூடாது; கொண்டாட முடியாது. இனி யாரும் மக்களை அடிமையாக நடத்தவே முடியாது; நடத்தக் கூடாது. இனிமேல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவன்தான் தலைவன். என்ன குருநாதரே! இனிக்க இனிக்கப் பேசி விட்டால் மாத்திரம்போதாது. காரியத்திலும் இறங்க வேண்டும். மற்றவர் பின்பற்றுவதற்காக நானே முதலில் செய்து காட்ட விரும்புகிறேன். வேலை செய்ய முடியாத வயோதிகர்களுக்காகவும், கூன், குருடு, முடம் போன்றவர்களின் வாழ்வுக்காகவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க தொழில் நிலையங்கள் அமைப்பதற்காகவும், பள்ளிகள் கட்டுவதற்காகவும் என்னுடைய சொந்த சொத்தில் பாதியை அளிக்கிறேன்.

மனோகரி மகிழ்ச்சியுடன் பேசுகிருள்.

மனோ : மன்னர் அளிக்கும் மான்யத்தில்

நானும் பங்கு கொள்ளுகிறேன். வாழ்வு இழந்த பெண்களுக்காகவும் மருத்துவ மனைக்காகவும் எனக்கு உரிய சொத்துக்களில் நானும் பாதியை அளிக்கிறேன்.

ராஜகுரு : இருப்பதையெல்லாம் எடுத்து வழங்க இருவரும் முடிவு கட்டிவிட்டார்கள்.

வீரா : முன்பு இருந்தவர் நேற்று இல்லை. நேற்று இருந்தவர் இன்று இல்லை. இன்று இருப்பவர் நாளை இல்லை. குருநாதரே! இருக்கும் நேரம் கொஞ்சமாக இருந்தாலும் ஏழைகளுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அதைச் செய்வதுதான் எனது முதல் வேலை.

'மார்த்தாண்ட மன்னர் வாழ்க' என்று. மக்கள் பாராட்டுமுகமாகக் கூவுகிறார்கள்.

காட்சி 10

வீராங்கனின் கண்ணியம்

நாட்டைக் காக்கும் கடமை உணர்ச்சியில் மன்னனாக நடித்த வீராங்கனை, ராஜகுரு சந்தேகிக்கிறார். வேட்டை விடுதிக்குச் செல்கிறார் கோஷ்டிகளோடு. மனோகரி

யின் அறைக்குச் செல்லும் வீராங்கன் அவள் தனக்குப் பாத பூஜை செய்ய, கண்ணைமூடியபடி மலரை எடுக்கும்போது கண்ணியமாக வெளியே வந்து மந்திரி தளபதி இருவரையும் ரொம்பவும் கோபிக்கிறான்.

வீரா : ராஜா...ராஜா .... என்றீர்கள். ஒரு ராணியையும்கூட வைத்திருக்கிறீர்கள். நாட்டுக்காக நடிக்கலாம். ஒருவரைக் காக்க வேஷம் போடலாம். வீட்டிலே நடிப்பது எப்படி? சிங்காசனம், முடிசூட்டு விழா, சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும், எல்லாம் சரிதான். ஆனால் தன் கணவன்தான் நான், என்று நம்புகிறார்கள் மகாராணியார். அட பாவிகளே! நீங்கள் நன்றாக இருப்பீர்களா?

மந் : இது நடிப்புத்தான் வீராங்கா.

வீரா : நடிப்பா? இன்னொருவன் மனைவியோடு கொஞ்சிக்குலாவுவது நடிப்பா? அமைச்சரே! நான் ஏழை, எளியவன். எனக்குக் கத்தி பிடித்துச் சண்டை போடவும் தெரியும். கலப்பை பிடித்து உழவும் தெரியும். இருந்தாலும் எங்கள் சமுதாயத்தில் பிறமாதர்களை ஏறிட்டுப் பார்ப்பதுகூட வழக்கமில்லை. ஆனால் உங்கள் ஆண்மை அதற்கு நேர் எதிராக இருக்கிறது.

மந் : பதறாதே வீராங்கா!

வீரா : பதறாமல் என்ன செய்வது? தன் கணவனை தெய்வமாகக் கருதுகிறார்கள் மகாராணியார். ஐயோ, நினைத்தாலே உடல் நடுங்குகிறது. காணவே கண் கூசுகிறது. இதில் கையை வேறு பிடிக்க வேண்டுமாம். நல்ல நாகரீகமய்யா உங்கள் நாகரீகம்.

மந்திரியும் தளபதியும் எடுத்துக் கூறிய பின் மன்னரைக் காணச் சம்மதித்துப் போகிறான் வீராங்கன்.


காட்சி 11
மன்னனின் பிரகடனம்
வீராங்கன், மந்திரி, தளபதி மூவரும் மன்னன்
வீராங்கன் : ...நான் சாதாரண குடியில் பிறந்தவன்.
அமைச்சரே! உங்கள் கட்டாயத்திற்காக நான் மன்னனாக இருக்கச் சம்மதிக்கிறேன். ஆனால் சட்டமியற்றும் அதிகாரம் அத்தனையும் என் கையில்தான் இருக்க வேண்டும்.
மந் : மக்களின் நிலையறியாத புதியவனைப் பதவியில் அமர்த்தி அதிகாரத்தை அவன் கையில் கொடுப்பது ஆபத்து வீராங்கா.
வீரா : மக்களின் நிலை அறியாதவன் நானா, அமைச்சரே? நீங்கள் மாளிகையிலே இருந்து பார்க்கிறீர்கள். நான் மக்களோடு இருந்து மாளிகைகளைக் கவனிக்கிறேன்.
இங்கிருந்து போக விரும்புவதெல்லாம் வெளியே
அமைச்சரே!
அதிகாரத்தை என் கையில் ஒப்படைப்பதாயிருந்தால் சொல்லுங்கள். அடுத்த காரியத்தைக் கவனிக்கிறேன். இல்லையாயின் ... யோசித்துப் பதில் சொல்லுங்கள்.
மந் : (முடிவாக) அதிகாரத்தை உன் கையில் தருகிறோம்.
வீராங்கா! நம்பிக்கைக்குத் துரோகம் உன்னால் ஏற்படாது என்று நம்புகிறோம்.

வீரா : (சிரித்து) அமைச்சரே! என்னை நம்பாமல் கெட்டவர்கள் நிறைய உண்டு. நம்பிக்கெட்டவர்கள் இன்றுவரை இல்லை...ஆனால் ஒன்று. எந்தக் காரணத்தைக் கொண்டும் மகாராணியிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பைமட்டும் எனக்குக் கொடுத்து விடாதீர்கள். தாயை காதலோடு பார்க்க என்னால் ஆகாது.

அரியாசனத்தில் அமர்ந்திருக்கிறான் வீராங்கன், மார்த்தாண்டன் வேஷத்தில். அருகே இருக்கிறான் அரிமஞ்சரி. வீராங்கன் மக்கள் சபையில் பேசுகிறான்.

வீரா : மாட்சிமை தங்கிய குருநாதர் அவர்களே, பெரியோர்களே, பொதுமக்களே! நமது நாட்டில் சில புதிய சட்டங்களை நிறைவேற்றி உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் புதிய சட்டங்களை நமது அமைச்சரும் சேனாதிபதியும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டனர். அவைகளைப் படிக்கச் சொல்கிறேன். உங்கள் விருப்பையோ, வெறுப்பையோ பயமின்றித் தெரிவிக்கலாம்...(மந்திரியிடம்)...ம் படியுங்கள்.

மந்திரி : (படிக்கிறார்) உழுபவருக்கே நிலம் உரிமையாக்கப்படுகிறது. உரிமைக்காரருக்கு [illegible] நிலத்தின் வருமானத்தில் கால் பங்கு.

பிங் : என்ன அநியாயம்?

மந் : விளைச்சல் காலத்தில் நிலவரி ஆறில் ஒரு பங்கு. இரண்டாண்டுகள் தொடர்ந்து விளையாமல் போனால் குடும்பத்திற்கு தேவைக்கு ஏற்ற மானியம் வழங்கப்படும்.

மக்களில் ஒருவன் : அப்பா, கேட்க நன்றாயிருக்கும்.

மந் : பெரிய மாளிகைகளில் சிறிய எண்ணிக்கை யுள்ள குடும்பங்கள் வாழ்வது கூடாது. அவர்களுக்குப் போக மீதிப்பகுதியில் குடிசை வாழ்பவரைக்கொண்டு வந்து வைக்கப்படும்.

கார்மேகம் : (கிண்டலாக) குடிசைகளை என்ன செய்வது?

வீரா : தேவை இல்லாததினால் குடிசைகள் கொளுத்தப்படும்.

மந் : தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு லாபத்தில் பத்து சதவீதமும் மற்றுள்ளவை தொழிலாளர்களுக்கும் பிரித்துத் தரப்படவேண்டும்.


ராஜு: அப்படியென்றால் பணக்காரர்களே இருக்க மாட்டார்கள்..!
வீரா: இல்லை, தவறு. பணக்காரர்கள் இருப்பார்கள். ஏழைகள் இருக்கமாட்டார்கள்.
மங்: ஐந்து வயது ஆன உடனேயே குழந்தைகளைக் கட்டாயமாகப் பள்ளியில் சேர்த்துவிட வேண்டும். தவறினால் பெற்றோர்களுக்குத் தண்டனை உண்டு.
கார்: வசதி இல்லாத பெற்றோர்கள் என்ன செய்வது?
வீரா: அவசரப்படாதீர்கள்.
மங்: பள்ளிப்படிப்பு முடிக்கும் தொழிலில் ஈடுபடும்வரை மாணவர்களின் பராமரிப்புப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது.
பிங்: (கிண்டலாக) பொக்கிஷம் காலி!
வீரா: மக்களிடமிருந்து வரும் வரிப்பணத்தை மக்களுக்காகச் செலவழிக்கிறோம்...ம்..படியுங்கள்.
மங்: கலப்பு மணம் செய்பவருக்கு அரசாங்கச் செலவில் திருமணம் செய்து வைக்கப்படும். கலப்பு மணத்தால் பிறக்கும் குழந்தைகளுக்கு அரசாங்க உத்தியோகத்தில் முதல் சலுகை அளிக்கப்படும்...
பிச்சையெடுப்பதும் குற்றம். பிச்சையிடுவதும் குற்றம்.
விவசாயிகள் குடும்பம்..
மங்: ...ஒவ்வொன்றுக்கும் ஒரு வீடு, ஐந்து காணி நிலம், இரண்டு காளை, நாலுகோட்டை விதைகள், ஒரு கலப்பை தரப்படும்.
ராஜகுரு: விவசாயிகளையே பார்க்கிறார் மன்னர். நகரத்தைப்பற்றிக் கவலையே படவில்லையே!
எதிர்க்கட்சியிலொரு சிஷ்யன்: நகரத்தில் இருப்பவர்களுக்கு ஒரு உதவியும் இல்லையா?
மற்றொரு சிஷ்யன்: அவர்களைப்பற்றி எங்கே கவலைப்படப் போகிறார்கள்?
வீரா: முழுவதையும் கேளுங்கள்.
மங்: ...அதைப்போல்... நகரத்தில் வாழ்பவருக்கு திறமைக்கு ஏற்ற தொழில் கொடுக்கப்படும். ஒவ்வொருவருக்கும் தேவைக்கு ஏற்ற ஊதியம் கொடுக்கப்படும்.
மக்களில் ஒருவன்: இதல்லவா சட்டம்?

மங் : ஆண்டான், அடிமை, தாழ்ந்தவன்; உயர்ந்தவன், தொட்டால் தீட்டு, கைபட்டால் பாவம், வீதியில் நடக்கக்கூடாது, கோயிலில் நுழையக்கூடாது. பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று யார் சொன்னாலும் இரண்டாண்டுகளுக்குக் குறையாமல் கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும்.

மக்கள் ரொம்பவும் மகிழ்ச்சியடைகின்றனர்.

மங் : கற்பழித்தால் தூக்குத் தண்டனை. எல்லாக் குற்றவாளிகளும் கருணை மனு சமர்ப்பிக்கலாம். ஆனால் கற்பழித்தவர்களுக்குமட்டும் அந்த உரிமை கிடையாது.

பிங்களன் : இந்த சட்டங்களை நாங்கள் எதிர்க்கிறோம்.

அவன் கோஷ்டியினரும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

வீரா : தேவை இல்லையா? இந்தச் சட்டங்கள் உங்களுக்காக மட்டும் இல்லை. (மக்களைப் பார்த்து) உங்கள் அபிப்பிராயம் என்ன?

மக்கள் : எங்களுக்கு இந்தச் சட்டங்கள்தான் தேவை.

வீரா : (பிங்களன் கோஷ்டியினரைப் பார்த்து) பார்த்தீர்களா? உட்காருங்கள்!

மக்கள் 'மார்த்தாண்ட மன்னர் வாழ்க' என்று வானளாவ கோஷமெழுப்பிப் போற்றிப் பாராட்டுகிறார்கள்.

காட்சி 12

ராஜகுருவின் சதித்திட்டம்

வீராங்கன் - மனோகரி இருவரையும் ஒன்றாக்கி அதை மார்த்தாண்டன் பார்க்கும்படியாகச் செய்தால், இருவர் நிலையையும் மாற்றி விடலாம் என்று ஒரு திட்டம் தீட்டுகிறான் ராஜகுரு. ஒரு மலரை

நினைக்கிறான். கார்கேம் பக்தியோடு நிற்கிறான்.

குரு: மனோகரியின் நிலையே மாறப்போகிறது. (பூவைக்காட்டி) இதைக் கொண்டு. இன்று இரவு இரண்டாம் ஜாமத்தில் நம் வசம் இருக்கும் மார்த்தாண்டனை ரகசியமாகக் கல்லறைக்குக் கொண்டு வரச் சொல்.

கார்: ஏன், மன்னனை அங்கேயே கொன்று...

குரு: மன்னனைக் கொல்வதா? இன்னொரு மன்னன் உயிர் வாழ்ந்திருக்கும் வரை மார்த்தாண்டன் உயிர் வாழ்ந்து தீரவேண்டும்...... இது மன்னனைக் கொல்ல அல்ல. அவன் தன் மனைவிமேல் கொண்ட மாசில்லா காதலைக் கொல்ல.

கார்: ஒன்றுமே புரியவில்லையே!

குரு: சொன்னாலும் புரியாது, மண்ணாளும் வித்தகரே! அந்த நாடோடியை நாட்டுக்குத் தான் மன்னனாக்க முடிந்தது, அந்த மதிகெட்ட மந்திரியால்; மனோகரிக்கு மணாளனாக்க முடியவில்லை. இருவரையும் பிரித்தே வைத்திருக்கிறான். கல்லறைக்கு இருவரையும் அனுப்பினால் தனிமை ராணியின் தாபத்தைத் தூண்டும். தன் இதயத்தின் கதையெல்லாம் எடுத்துரைப்பாள். மன்னனை இதைக்காணச் செய்தால் மனம் குமுறுவான். 'தன் உருவத்தைக்கொண்டு மந்திரி அரசியல் சூதாட்டம் நடத்துகிறான்; மனைவி காதல் களியாட்டம் நடத்துகிறாள்' என்று நம்புவான். நாம் நீட்டுவோம் பத்திரத்தை. ஆத்திரத்தில் இட்டு விடுவான் கையெழுத்தை. அதன்பின் நாம் மாற்றி விடுவோம் இந்நாட்டின் தலையெழுத்தை...

கார்மேகம் அந்தப் புஷ்பத்துடன் மனோகரியிடம் செல்கிறான். குருநாதரின் திட்டப்படிக் குழைந்து பேசுகிறான்.

கார்: இந்த மலர் தங்கள் மண வாழ்க்கையில் பெரிய மாற்றத்தைக் கொடுக்கும்.

மனோ: இது எப்படி அவர் மனதை மாற்றும்?

கார்: தாங்கள் தங்கள் தந்தையாரின் கல்லறைக்குப் போகும் போது சமயம் பார்த்து மன்னரிடம் இதைக் கொடுத்து முகரச் செய்யுங்கள். அதன் பின் மன்னர் மூவுலகையும் மறந்து விடுவார். கடைசியில் மிஞ்சுவது தங்கள் எண்ணம் ஒன்றுதான்.

மார்த்தாண்டன் படத்தருகில் செல்கிறாள்.

மனோ: ஒரு பெண்ணுக்கு அன்பும் பண்பும்தான் தேவை. இதைப் போன்ற அறிவுக்குப் பொருத்தமற்ற வசிகரம் தேவையில்லை.

கார்: மகாராணி! சற்று சிந்தியுங்கள். மன்னர் தங்கள் மீது

எவ்வளவு பற்றும் பாசமும் வைத்திருந்தார். அதெல்லாம் எப்படி மாறிற்று? தங்கள் நடத்தையாலா? எல்லாம் அந்த சூன்யக்காரியின் மந்திர வேலை.

மனோ: மனதையே குழப்புகிறீர்களே?

கார்: மன்னரின் மூளை குழம்பி பைத்தியமாகி விடக் கூடாது என்பதற்குத்தான் குருநாதர் கவலைப்படுகிறார். குருநாதர் மீது நம்பிக்கை இருந்தால் அவர் இஷ்டப்படி நடவுங்கள். இல்லையாயின் ... **(போவதற்குக் கிளம்புகிறன். தோழி நவமணி தடுக்கிறள்)**

நவ: அய்யா .... அய்யா.... இப்படிக் கொடுங்கள் ... வாங்கிக் கொள்ளுங்கள் அம்மா.

மனோகரி புஷ்பத்தை வாங்கிக் கொள்ளுகிறள். கார்மேகம் வெற்றிப் புன்னகையுடன் போகிறன்.

காட்சி 13

சகாயத்தின் சகாயம்

சகாயம் ஆனந்தமாகச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது 'சகாயம்...சகாயம்...' என்று அழைத்தபடி அங்கே வருகிறன் வீராங்கன்.

சகா: நீ என்னை பேரைச் சொல்லி கூப்பிட்டியோ இல்லையோ ... நீ என்னிடத்திலேருந்து ஏதோ சகாயத்தை எதிர்பார்க்கிறேன்னு தெரியும்.

வீரா: ஊருக்கு வெளியே இருக்கிறதே அரண்மனைத் தோட்டம், அங்கே நான்கு விளக்கு கம்பத்துக்கு அருகில் மதனவை நான் சந்திப்பதாகச் சொல்லியிருந்தேன்...

சகா: சீ...சீ ... எடுப்பே சரியாயில்லையே...நம்ம கௌரவத்துக்குச் சம்பந்தமில்லாத

ஒரு காரியத்துக்கு அனுப்பறதா இருந்தா சொல்லு.

வீரா : இல்லே சகாயம். இந்த மாதிரி நண்பர்கள் செய்யும் காரியத்தைத்தான் கவிஞர்கள்ளாம் புகழ்ந்திருக்காங்க.

சகா : புகழ் ... இந்தமாதிரி காரியத்திலே கூடவா புகழிருக்கு?

வீரா : ஆமா!

சகா : அப்படின்னு சொல்லு.

வீரா : இன்று நான் அவளைச் சந்திக்க முடியாது என்று நினைக்கிறேன்.

சகா : ஏன், வேறே ஏதாவது...?

வீரா : விளையாடாமல் நான் சொல்வதைக் கேள். காலையில் நீ பார்த்த சுரங்கப் பாதை வழியாக மதனாவை யாருக்கும் தெரியாமல் இங்கு அழைத்து வரவேண்டும்.

சகா : ம்...இவ்வளவுதானா? நான் என்னமோன்னு நினைச்சேன். தெரிஞ்சவங்களை அழைச்சிட்டு வர்றதிலே தப்பு ஒண்ணும் இல்லே. நான் இப்பவே போறேன்.

கிளம்பி இரண்டடி நகருகிறான் வீராங்கன். சகாயம் திரும்புகிறான்.

சகா : ஏய்...

வீரா : என்ன?

சகா: நான் போறேன். அங்கே ஏதானும் நடந்துதுன்னா அப்புறம் முண்டம் தான் வரும். கவனிச்சுக்கோ.

வீரா : பயப்படாதே.

சகாயம் சென்றதும் வீராங்கன் அறைக்கு ராஜகுருவும் கார்மேகமும் வந்து அவனையும் மனோகரியையும் கல்லறைக்குச் செல்லப் பணிக்கிறார்கள்.

காட்சி 14

மதனுவின் கோபம்

மதனு தோட்டத்துப்பக்கம் வீராங்கனே எதிர்பார்த்து உலவிக்கொண்டிருக்கும்போது, நடுங்கியபடி வருகிருன் சகாயம். ஜாடையாகக் கனேக்கிருன்.

மதனு : யாரது?

சகா : நான்தான், தெரியலே?

மத : (கிண்டலாக) தெரியலியே! எதுக்கு வந்தே?

ச . . : என்னம்மா இது, புதுப் பணக்காரன் பழைய சிநேகிதனேப் பார்த்துக் கேக்கறமாதிரி இருக்கு?

மத : ம்...நான் புதுப் பணக்காரியுமில்லே. எனக்கு ஒண்ணும் திடீர் அதிர்ஷ்டமும் வரல்லே... நீதான் குரங்கு ஆந்தையான மாதிரி காட்சி அளிக்கிறே...

சகா : சே...நான் அப்பவே சொன்னேன் அவங்கிட்டே. ஏம்மா...?

மத : ஏன், என்ன?

சகா : கோவிச்சுக்காதீங்க. வீராங்கன் உங்களேக் கையோடே கூட்டிக்கிட்டு வரச்சொன்ஞன்.

மத : ஏன்? அவர் இங்கே வரக்கூடாதா?

சகா : வரக் கூடாது.

மத : அப்ப நானும் அங்கே வரக்கூடாதுங்க.

சகா : சரி...

அவன் திரும்பிச்சென்று மீண்டும் வந்து அவளை வழி மறைக்கிறான்.

சகா : அம்மா...உன்னைக் கும்பிடுறேம்மா. கோவிச்சுக்காதிங்க.

மத : சரி, நட...

இருவரும் வீராங்கன் அறையை அடைகிறார்கள். அங்கே வீராங்கன் இல்லை. அவன் ராணியின் தகப்பனாரின் சமாதிக்கு வணக்கம் செலுத்தப் போயிருக்கிறானல்லவா? மதனாவுக்கு கோபம் பொங்கி வருகிறது,

மத : எங்கே ... எங்கே அவர்?

சகா : அ...அவர் இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்திடுவார். சின்னவிஷயமா போயிருக்

அவன் உங்களுக்காகக் காத்துக்கிட்டிருக்கான். போனவுடனே திரும்பிடலாம்.

மத : இப்ப அவர் எங்கே இருக்கிறார்?

சகா : ஐயோ.. போறவழியிலே சொல்லிகிட்டே வர்றேன்.

தயாரிப்பு, டைரக்ஷன் இரு வேட நடிப்பு இவற்றில் வெற்றி கண்டுள்ள 'புரட்சி நடிகர்' எம். ஜி. ராமச்சந்திரன்.

காரு. சீக்கிரமா திரும்பிடுவாரு.

மத: எனக்காகக் காத்திருக் காருன்னு சொன்னியே?

சகா: ஆமா...கொஞ்சம் ஒக் காந்திங்கன்னு ... தேவலே ... உக் காருங்க.

சிறிது நேரம் சென்றும் வீராங்கன் வரவில்லை.

மத: ...ஏய்...! எங்கே இன்னும் அவரைக் காணோம்?

சகா: அவருபோன விஷயத்தை முடிப்பாரு ... முடிஞ்சவுடனே புறப்படுவாரு ... புறப் பட்டவுடனே வந்துடுவாரு.

மத: சின்ன விஷயம். சீக்கிரம் வருவாருன்னு சொன்னியே.

சகா: அரசாங்கத்திலே சின்ன விஷயம் திடீர்னு பெரிய விஷயமா மாறிடும். பெரிய விஷயம் சின்னதா மாறிடும்.

மத: இனிமே என்னாலே சும்மா இருக்க முடியாது.

சகா: அப்போ ஒண்ணு செய்யுங்கம்மா. முன்னுக்கும் பின்னுக் கும் நடந்துகிட்டு இருங்களேன்.

மத: ஏய்! என்ன சொன்னே?

அவள் கோபித்துப் புறப்படும் போது மறித்து கெஞ்சுகிறான் சகாயம். அதே சமயம் கல்லறையிலிருந்து தனி அறைக்கு வீராங்கனுடன் செல்லும் மனோகரி, அவனை மயக்க மலரை உபயோகிக்க முயற்சிக்கிறாள். அவள் அவனுடன் அன்புமொழி பேசுவதை, வாயில் துணியடைக்கப்பட்டு கை, கால்கள் கட்டப்பட்ட மார்த்தாண்டன் கண்டு பொருமுகிறான். அவனை அங்கிருந்து கார்மேகம் முதலியோர் அகற்றுகின்றனர். மனோகரி அந்த மலரை நுகரும் நிலை ஏற்பட, அவள் மயங்கி விழுந்து விடுகிறாள். அவளை ராணியின் விடுதிக்குத் தூக்கிச் செல்கிறான் வீராங்கன். சாளரத்தின் வழியாக வீராங்கன் மனோகரியை தூக்கிச் செல்வதைக் கண்டு தவறாக நினைத்துக் கோபம் கொள்ளுகிறாள் மதனா. சகாயத்தை கோபத்தோடு அழைக்கிறாள்.

மத: ஏய், சகாயம்!...பாத்தியா அந்தக் காட்சியை? பாத்தியா அவர் அவசரமான வேலையை? என்னை இங்கே இருக்கச் சொல்லி, உன்னையும் இருக்கச் சொல்லி வேறொரு பெண்ணைத் தூக்கிண்டு.

மதனா சகாயத்தின் கழுத்தை அழுத்த கையை நீட்டுகிறாள்.

சகா: கொலை...கொலை...

மதனா போக முயற்சிக்கும்போது, அவன் முன்னால் ஓடி தடுக்கிறான்.

சகா: அம்மா...அம்மா! ஆத்திரப்படாதிங்க. வேறே ஒண்ணுமில்லே. ஏதோ ஒரு பொண்ணு. அதுக்குச் சகாயம்...

மத: சகாயம்!

சகா: ஆ...

மத: இதனாலே அவருக்கென்ன ஆதாயம்?

சகா: இந்த ராஜாங்க சம்பிரதாயம்...

மத: ஓகோ...இதுக்கு நீயும் உடந்தையா?...

சகா : ஹா...! என்ன வார்தை சொல்லிட்டிங்க நீங்க? இந்தா பாருங்கம்மா. ஒங்க விஷயத்திலே மட்டும்தான் உடந்தை. அது நமக்குத் தெரியாமெ ஏதோ தனியா நடக்குது.

மத : நடக்கும் நடக்கும். ஏன் நடக்காது? இந்த மதன ஏமாந்தா எல்லாம் நடக்கும்...கண்ணுக்கு முன்னடி இருக்கிற வரைக்கும் தான் 'கண்ணே மூக்கே'ங்கிறதெல்லாம். கொஞ்ச நேரம் பிரிஞ்சாப் போதும். வரட்டும்.........இங்கே வரட்டும் பேசிக்கிறேன்.

அவள் கிளம்புவது கண்டு அழுகிருன் சகாயம்.

சகா : நீங்க இங்கேருந்து இப்ப போனீங்கன்ன, அவன் என்னே அநியாயமா கொன்னுடுவான்.

மத : நீ இங்கேயிருந்து என்னைப் போக விடலேன்ன உன்னைக் கொன்னுடுவேன்.

சகா : அதைச் செய்யுங்க. அப்பத்தான் என்னுடைய தியாகத்தைப்பத்தி அவனுக்குத் தெரியும்... செய்யுங்க.

மத : அப்படியா....தியாகம் பண்ணப்போறியா...இரு...

அவள் மெல்ல நகருகிருள்.

சகா : எங்கே...? போறீங்களா?

மதன செங்கோல், கிரீடம் முதலிய வற்றை அவன்மீது வீசி எறிகிருள். ஒதுங்கிப் போகிருள் மதன. வீராங்கன் அங்கே வருகிருன். சகாயத்தைக்கண்டு சிரித்தபடிக் கேட்கிருன்.

வீரா : என்ன சகாயம்?

சகா : ...ஆ...!

வீரா : இது என்ன அலங்கோலம்?

சகா : அம்மையாரின் போர்க்கோலம். அதனுல் அடியேன் பெற்றது இந்த அலங்கோலம்.

வீரா : சரி...சகாயம், போ!

சகா : நான் போறேன்...நான் போறேன்...உன் உடம்பு ஜாக்கிரதை.

சகாயம் சென்றதும் வீராங்கன் மதனவிடம் வருகிருன். பின்ன விருந்து அவள் தோளை அன்போடு பற்றுகிருன்.

வீரா : மதன!

மத : அட, என் பேர் இன்னும் நினைவிலிருக்கிறதே. இங்கு வந்ததும் அவள் பெயர் மறந்து விட்டதா? ஹூம்...

வீரா : எவள் பெயர்?

மத : இன்னும் நான் ஏமாற மாட்டேன். ஒரு பெண்ணைக் கையில் தூக்கிக்கொண்டு போன போது உங்கள் இதயம் என்னை வஞ்சித்தது. என் கண்கள் என்னை வஞ்சிக்கவில்லை.

வீரா : இந்த நாட்டின் ராணி அவள். கல்லறைக்குச் சென்ற போது மயக்கம்போட்டு விழுந்து

தருத்து, கூந்தல் செழிக்க — தஞ்சாவூர் T. A. அப்துல் ரஹீம் — சகல சுகமும் தரும்
காஷ்மீர்-குஸும் — சேவல் மார்க் — ஸான்டலக்ஸ்
நறுமணக் களிம்பு
நஞ்சன்கூடு பல்பொடி மற்றும்
54. குடும்ப மருந்துகள்
விபரப்புத்தகத்திற்கு எழுதுக
வைத்தியர் உதவி விரும்பினால் எழுதியும் சிகிச்சை பெறலாம்.

கஸ்தூரி பத்தி, சந்தன முகப் பவுடர், அரகஜா, கதம்ப அத்தர், சுவாக் அத்தர், ஜவ்வாது, ப்ளவர் டஸ்டு இவை நறுமணம் ஏற்றி ஆடைகளைக் காக்க உதவுபவை.

சோல் ஏஜண்டு : **யுனைடெட் கன்ஸர்ன்,**

54, பந்தர் தெரு, சென்னை-1.

படத்தின் வசனகர்த்தாக்களில் ஒருவரான இளைஞர் ரவீந்தர்.

விட்டாள். கவனிக்காமல் இருந்தால் யாராவது சந்தேகப்படுவார்களே, நடிப்பு வெளியாகி விடுமே என்று என் கரங்களில் தூக்கிச் சென்றேன்.

மத : அப்போது உங்கள் மனம் படக் படக் என்று அடித்தது. பந்தயக் குதிரையைப்போல் துடித்திருக்கும், பாவம்.

வீரா : நீ பெண்...உணர்ச்சி வசப்படுகிறாய்.

மத அவள் மட்டுமென்ன, பெண்ணில்லையா? உணர்ச்சி வசப்பட்டுத்தானே உங்கள் கரங்களில் சாய்ந்தாள்?

வீரா : கண்டதுபோல் பேசாதே. என் தாயைத் தவிர வேறு யாரையும் நான் வணங்கியதில்லை. ராணியை நான் தூக்கிச் சென்றது, என் தாய்க்குச் செய்த கடமையைப் போன்றது.

மத : உங்கள் கடமை முடிந்த பிறகு கூப்பிடுங்கள் வருகிறேன்.

வீரா : (தடுத்து) மதனா...ஆத்திரப்படாதே. சொல்வதைக் கேள்!

இருவரும் போகிறார்கள். மதனா, வீராங்கன், சகாயம் மூவரும் ரகசிய வழியில் செல்வதை மனோகரி பார்த்து வேதனைப்படுகிறாள். பிங்களன் கோஷ்டிக்கு இந்த விவரம் தெரிந்ததும் மதனாவை பிடிக்கப் போகிறார்கள். பிங்களன் மதனாவைக் கைதாக்க இழுத்து வருகிறான்.

காட்சி 15

ரத்னபுரி ரகசியம்!

மதனாவின் விருப்பப்படி வீரபாகுவை சந்திக்கிறான் வீராங்கன். தன் வரலாறு கூறுகிறான்.

வீர : ம்.......ரசமாகத்தானிருக்கிறது நீ நாடாளும் கதை.

வீரா : என்கதை இருக்கட்டும்; நீங்கள் யார் என்று சொல்லவேயில்லையே?

வீர : ம்...என் கதையா?...ம்... முன்னாள் மன்னரின் மெய்க்காப்பாளன் நான். ஒரு நாள் அவர் மகள் ரத்னா சில முரடர்களால் தூக்கிச் செல்லப்பட்டாள். நான் போரிட்டேன். அதில் என் கால் ஊனமாகி விட்டது. மகள் காணாமல் போன ஏக்கத்தில் மன்னரும் காலமானார்.

வீரா : இளவரசியைத் தேட யாருமே முயற்சிக்க வில்லையா?

வீர : எல்லோரும் தேடினதாகத்தான் சொன்னார்கள். ஆனால் உண்மையில் நான் ஒருவன்தான் இன்னும் தேடிக் கொண்டிருக்கிறேன்.

வீரா : ஆமாம், இளவரசியை எப்படிக் கண்டு பிடிப்பது? ஏதாவது அடையாளங்கள்......?

வீர : அவள் முதுகில் நட்சத்திர வடிவில் மச்சம் இருக்கும்...... ரத்னா என்ற பேரும் இருக்கும்.

அடையாளங்களைத் தெரிந்து கொண்ட வீராங்கன் உறுதியோடு அங்கிருந்து கிளம்பிப் போகிறான்.

காட்சி 16

ஐயோ மதனா!

கைதான மதனாவை கட்டிவைத்து அடிக்க பிங்களன் துணியும்போது

வீராங்கன் தோன்றுகிறன் அங்கே. பிங்களனும், கார்மேகமும் கைதாகிறர்கள். ஆனல் சிப்பாய்கள் மீண்டும் அவர்களைத் தப்புவிக்கிறர்கள். மதன குதிரையில் தப்பி ஓடும் போது, பிங்களன் கத்தியை அவள் முதுகில் வீசுகிறன். அவள் தங்கள் இருப்பிடம் சென்று படுக்கையில் விழுகிறள். வீராங்கன் வருந்திக் கதறுகிறன்.

வீரா : மதன! மதன! மதன!! என்னல்தானே உனக்கு இந்த வேதனை?

மத : நம் கண்ணேடு கண் சேர்ந்த வேளை உயிரோடு உயிர் கலந்து விட்டது. என் உயிர் பிரிந்தால் உங்கள் உயிருக்குத் துணையாய் இருக்கும். உங்கள் லட்சியங்களுக்குத் தூண்டுகோலாக இருக்கும்.

வீரா : மறுபடியும் பிரிவைப் பற்றிய பேச்சுத்தான? மதன! நீ இல்லாவிட்டால் நான் இல்லை.

மத : அத்தான்! நாம் காதலோடு பிறப்பதில்லை. கடமையோடுதான் பிறக்கிறேம். நீங்கள் கொண்ட லட்சியங்கள் நிறைவேறி விட்டால்...நாடு நலம் பெறும்...

வீரா : மதன...

மத : என் அத்தான் இத்தனை நாட்கள் நாடகம் நடித்து பலரால் பல நாட்களாகச் சாதிக்க முடியாததையெல்லாம் சாதித்து விட்டார் என்று ஊர் சொல்வதைக் கேட்டு என் உயிர் மகிழும் அத்தான்.

வீரா : மதன...மதன...! என்ன மதன?

மத : மூச்சு விடுவதே கஷ்டமாக இருக்கு.

வைத்தியர் மதனவை பரிசோதித்த பின் எச்சரிக்கை செய்கிறர்.

வைத்தியர் : மதனவுக்கு ஓய்வு தேவை. இல்லாவிட்டால் உயிருக்கு ஆபத்து நேரிடும்.

வீரா : மதன...மதன...!

வீரபாகு : வீராங்கா! மதனவை சில மணிநேரம் தனிமையில் விட்டு விடு. இல்லா விட்டால் அவள் உயிருக்கே ஆபத்து ஏற்படும்..வா.

வீர : (தயங்கியபடி) மதன...

மத : தைரியமாகச் செல்லுங்கள்.

வீரா : வருகிறேன் மதன...

அவள் மெதுவாகச் சிரிக்கிறள். வெளியே நிற்கிறர்கள் யாவரும்.

வீர : வீராங்கா! நீ அரண்மனையில் இல்லாவிட்டால் நாடே குழப்பம் அடையும். இத்தனை நாள் பட்ட கஷ்டங்களெல்லாம் பயனின்றிப் போய்விடும். சகாயம் இங்கேயே இருக்கட்டும். நீ அவ

வாணி தமிழ்–இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. பி. செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான் : தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0.

தையல் கலை : இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானலும் பிறர் உதவி இல்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ, தபால் பெட்டி 239, சென்னை-1.

சரமாக வேண்டியிருந்தால் நான் சொல்லி அனுப்புகிறேன்.

வீராங்கன் தயங்கியபடியே புறப் பட்டுச் செல்கிருன்.

காட்சி 17

அண்ணு...அண்ணு!

மதனுவை பிரிந்து வந்து வீராங் கன் மஞ்சத்தில் அயர்வுடன் படுத்திருக்கும்போது, வந்து அவன் கால்களைப் பிடித்து விடுகிருள் மனேகரி. துள்ளி எழுகிருன் அவன். பதறிப் போகிருள் அவள்.

மனேகரி: ஏன், தங்கள் காலை பிடிக்கும் பாக்கியம் கூடவா எனக் கில்லை?

வீரா: பத்தினிப் பெண்ணுகிய உனக்கு இப்படிப்பட்ட கேவல நிலை தேவையே இல்லை மனேகரி!

மனே: ம்...பத்தினிகளின் சொர்க்கமே கணவர் காலடியில் தானே இருக்கிறது?

வீரா: மனேகரி! நான்...

மனே: அறைகுறையாக நின்று விடும் இந்த வார்த்தை, அச்சம் நிரம்பிய இந்தப் பார்வை இவை யெல்லாம், அழியப் போகும் என் வாழ்வுக்கு அடையாளமாக அல் லவா இருக்கிறது?

வீரா: தவருன எண்ணம். நான் அழிந்தாலும் நீ அழியும்படி விடமாட்டேன். உன் வாழ்வு மலரத்தான் போகிறது. நீ வாழத் தான் போகிருய்.

மனே: எப்படி முடியும்? மரமே கருகும்போது மலர் எப்படி அத் தான் மலர முடியும்? நீங்கள் உரு வம் - நான் கண்ணுடி. அங்கு மகிழ்ச்சி இருந்தால்தானே இங்கு இருக்கும்?

வீரா: ...ம்......சரி.......எனக்கு வேறு வேலை இருக்கிறது. போய்த் தூங்கு.

மனே: **(நெருங்கிப் பிடித்து)** ம்...இன்று என்னை ஏமாற்றவே முடியாது...அத்தான்! நீங்கள் எங்கே வேண்டுமானுலும் சுற்றுங் கள்; எப்படி வேண்டுமானுலும் வாழ்க்கையை நடத்துங்கள். ஆனுல் இங்கே ஒரு உயிர் உங்க ளுக்காக ஊசலாடுகிறது என் பதை மட்டும் மறக்காதீர்கள்... அத்தான்...அத்தான் 'காலம் மாறி ஞல் மனைவியின் கோலம் மாறும். கணவனின் குணம் மாறும்' என் பார்கள். இங்கு மனைவி தாயாகு முன்பே கணவன் சந்நியாசியாகும் கதை நடக்கிறது.

வீரா: இல்லை மனேகரி. சந்நி யாசி கணவனுகும் கதைதான் இப்போது நடக்கிறது.

அவன் நகர, அவள் ஓடி வந்து வழி மறைக்கிருள்.

மனே: உங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய சக்தி உங்க ளுக்கே இருக்கிறதா என்பது எனக்கே புரியவில்லை. மணி மகு டத்தை உங்கள் தலையில் ஏற்றி வைத்தபோதே என்னை உங்கள் இதயத்திலிருந்து இறக்கி வைத்து விட்டீர்கள். பக்கம் நின்று பேசிய காலம் போய், முடிசூட்டு விழா வுக்குப் பிறகு என்னைப் பார்க்கவே வெட்கப்படுகிறீர்கள். நான் என்ன, தகுதியற்றவளா, தரம் இல்லாதவளா?....போகட்டும். நான்தான் கல்லில் செதுக்கிய மலரானேன். உங்கள் கண்ணுக் குப் பிடிக்காத பெண்ணுனேன். உங்கள் இதயம் ஏன் மரத்துப் போய்விட்டது? மாலை சூடிய காலத்தில் மெள்ள மெள்ளப் பார்த்து ரசித்த கண்கள் இப் போது ஏன் சக்தியற்றுப்போய் விட்டன? மாலை வரும்போது தென்றல் வரும். தென்றல் வரும் போது 'எங்கே என் மனேகரி?' என்று தேடுவாரே என் கணவர், அவரா இப்படி மாறிவிட்டார்?

வீரா: இல்லை மனேகரி' இல்லை. உன் கணவரும் மாற வில்லை. நானும் மாறவில்லை.

மனே: கணவர்...நான்...ஒரு உயிருக்கு இரண்டு உருவங்களா? ...என்னைக் குழப்பாதீர்கள்... இறுதியாக நான் உங்களைக் கேட்க விரும்புவது இதுதான். காதலோடு பேசி, கனிவோடு உற வாடிக் களித்திருந்த காலத்தை மீண்டும் பெறமுடியும் என்ருல்

என்னைத் தேற்றுங்கள்......தேம்ப விடாதீர்கள். இந்த மண்டலம் போதும்; மகுடம் போதும். கொண்டவள் வேண்டாம்; குடும்பமும் வேண்டாமென்றால் நாளுக்கு நாள் என்னை வதைக்காதீர்கள்.... வேல்கொண்டு வீசுங்கள்.....வாள் கொண்டு சிதையுங்கள். துண்டு துண்டாக இருக்கும் என் சதையைக் கூட உங்கள் கண்ணில் படாமல் தூரத்தில் கொண்டுபோய் வீசி விடுங்கள்...

வீரா: (இடைமறித்து) என்னைக் கொல்லாதே மனோகரி.

மனோ: கொல்ல வரவில்லை! 'உங்கள் கையாலேயே கொன்று விடுங்கள்' என்று கேட்க வந்திருக்கிறேன்.

வீரா: அதைச் செய்யவும் நான் ஆளில்லை. அழுது புலம்பும் உன்னைத் தேற்றும் இடத்திலும் நான் இல்லை.

மனோ: ஏன் இல்லை? என்னைப் பார்க்க வேண்டியவர்......?

வீரா: நான் இல்லை.

மனோ: ஆறுதல் கூறவேண்டியவர்?

வீரா: நானில்லை.

மனோ: என்னைக் காக்க வேண்டியவர்?

வீரா: மாலையிட்டவனும் நானில்லை; மணந்து கொண்டவனும் நானில்லை. காக்க வேண்டியவனும் நானில்லை.

மனோ: ஹா... நீங்கள்... நீங்கள்...?

வீரா: நான் உன் கணவனே இல்லை.

மனோ: என்ன? கணவனில்லை ...நீங்கள் என் கணவனில்லை...

மனோகரி கத்தியால் குத்திக் கொண்டு சாகத்துணிந்து, கத்தியை எடுக்கிறாள்; வீராங்கன் தடுக்கிறான். கதறியபடி படுக்கையில் விழுகிறாள் அவள். வீராங்கன் உண்மையை விவரித்துக்கூற ஆரம்பிக்கிறான்.

வீரா: என் இதயம் வெடித்து விடாமலிருக்க, சாவு உன்னைக் காவு கொள்ளாமலிருக்கட்டும். கற்புக்கு சிறிதும் மாசுவராமல் இருக்க...நடக்கும் நாடகம், மனோகரி! நாட்டின் நலத்திற்காக உன் கணவரைக் காப்பாற்றுவதற்காக 'யாரிவன், எங்கிருந்து வந்தான், என்ன இவன் பழைய கதை, ஏனிந்த நாடகம்?' என்றெல்லாம் உன் மனம் குழம்பும். தெள்ளிய நீருக்கும் இல்லறத்துப் பெண்ணுக்கும் கள்ளம் புரியாது; கபடம் தெரியாது. கண்ணாடி உன் மனம். அதிலே காணப்படுவது உன் கணவனின் முகம். அரண்மனை அதிகாரம், ஆள், அம்பு, சேனை அதுதான் நீ காணும் உலகம். இன்னும் ஓர் உலகம் உண்டு. நீ காணாதது, நான் கண்டது. கேள். காடு சுற்று வார்கள், கலப்பை பிடிப்பார்கள், உழுவார்கள், விதைப்பார்கள், அறுப்பார்கள். சுமப்பார்கள், உண்ணமட்டும் உணவில்லாமல் தவிப்பார்கள்... அந்த மாபெரும் கூட்டத்திலே நானும் ஒருவன். படையிலே சேர்ந்தேன்,மக்களுக்குப் பணிபுரிய நாட்டைக்காக்க ... சேர்ந்தபின் அறிந்தேன்; ஆற்றவேண்டிய படைமக்களை அழவைத்தது, வாழவைக்க வேண்டியபடை மக்களை மாய்க்க வைத்தது என்று. உங்கள் ஆட்சியின் கொடுமைகள் அனைத்தையும் கண்டேன். ஆதரவற்ற குடும்பங்கள் தவிப்பதையும் பார்த்தேன். மக்கள். அழுத கண்ணீர் ஆறெனப் பெருகும். 'தந்தை வேண்டாம், உணவு வேண்டும், வாழ்வு வேண்டும்' என்று அலறுவார்கள். அவர்களை அடிக்கச் சொல்லுவார் தளபதி. அணைக்கத்தாவும் என் மனச்சாட்சி—துடித்தது. உள்ளம் கொதித்தது. 'ஏனிப்படி, எதற்காக, நடக்கலாமா, சரிதானா?' என்று எனக்குள்ளாகவே கேட்டுக் கொண்டேன். ஒரே ஒரு முடிவுக்குத்தான் வந்தேன். மக்களிலே ஒருவன் தலைவனாகும்வரை மன்னராட்சி அக்கிரமத்துக்கு ஒரு முடிவு இருக்காதென்று அறிந்தேன். படையிலிருந்து விலகினேன். புரட்சிக் கூட்டத்திலே புகுந்தேன்.

மனோ: (பயந்து) ஹா...!

வீரா: புரட்சி என்றதும் பயந்து விடாதே. இது ஆளைச் சேர்க்கும் ஆயுதப் புரட்சி அல்ல. அதில் எங்களுக்கு நம்பிக்கையும் இல்லை. ஆனால் நாங்கள் தீயிடுவோம், தீமைக்கு. கொள்ளையடிப்போம், மக்கள் உள்ளங்களை. குவித்துவைத்து அனுபவிப்போம், அறிவுப் பொருள்களை...கத்தி எடுக்காத, ரத்தம் சிந்தாத, அறிவுப் புரட்சியில் பொல்லாமையைப் போதித்து, மக்கள் குணத்தை மாற்றி அதை 'கொடுமை' என்றது உங்கள் ஆட்சி. பிடிபட்டேன் ஒருநாள். உதைபட்டேன், சிறையில் வதைபட்டேன். பாராளும் மன்னனைப் பார்க்கிறாயே இப்போது, அவன் சிறையிலே இருந்தபோது பாராளுவோர் தந்த பரிசுகள் சூடு. பார் சகோதரி, பார்.

முதுகுப் பக்கம் சட்டையை ஒதுக்கிக் காட்டுகிறான். சூடு போடப்பட்ட அடையாளம் அவன் முதுகிலிருப்பது கண்டு 'அய்யோ' என்று அலறுகிறாள் மனோகரி.

வீரா: 'செல்வந்தர் வீட்டு மாடுகளுக்கு வைத்திய வசதி உண்டு. ஏழை அதனினும் இழிந்தவனா உன் ஆட்சியில்?' என்று கேட்டதற்கா இந்த தண்டனை? பட்டேனே பல துயரம், கெட்டேனா? பழிகாரனாக மாறினேனா? நான் கொடியவனாக இருந்திருந்தால் உன் கற்பை எளிதில் சூறையாடி இருக்க முடியும். இல்லை மனோகரி, இல்லை...நான் பலனளிக்கும் கருவியானேன்...குழப்பம் செய்யும் கூட்டம் ஒருபுறம்; என்னைக் கொலை செய்யத் துடிக்கும் கொடுமையாளர்கள் ஒரு புறம்; பருவத்தால், வாக்கினால், சிந்தனையால், 'இவன் என் கணவனே' என்று கலங்கும் நீ ஒரு புறம்; இதற்கிடையில்தான் வாழ்கிறேன் மன்னனாக...பட்டுப் பட்டுத் தேறிய என் இதயம் தாங்கிக் கொள்ளும். ஆனால் என்னை உன் கணவனாகக் கருதி மகிழ்ச்சியோடு பார்த்தால் என்னால் தாளமுடியாது சகோதரி, என்னால் தாள முடியாது...அதற்கும் இன்று ஒரு முடிவு வந்துவிட்டது. பாரம் இறங்கி விட்டது. நான் வருகிறேன்.

வீராங்கன் நகருகிறான். மனோகரி அவன் தியாக மனம் கண்டு மனம் நெகிழ்ந்து போய்க் கதறுகிறாள்.

மனோ: அண்ணா...! அண்ணா...! என்னை மன்னித்து விடுங்கள் அண்ணா!

வீரா: உண்மையிலேயே என்னை நம்புகிறாயா சகோதரி?

மனோ: நம்புகிறேன் அண்ணா, நம்புகிறேன். நான் மட்டும் என்ன, இந்த நாடே உங்களை நம்பித்தான் ஆகவேண்டும்!

ஆமாம், கணவனுக்காகவும் நாட்டு நன்மைக்காகவும் ஏராளமான தம்பிமார்களுக்காகவும் பாடுபட்டு வரும் தியாக உருவான ஒரு அண்ணா கிடைக்கும்போது மகிழ்ச்சியடையாதவர் யாராவது இருக்க முடியுமா? ஆகவே நாட்டையும் தன் கற்பையும் காக்க முற்படும் வீராங்கனை அண்ணனாக ஏற்றுக் காலில் விழுந்து கேவுகிறாள். வீராங்கன் அங்கிருந்து கிளம்பிப் போக இப்போது அவள் மறுப்பு கூற வில்லை.

வீராங்கன் மதனாவின் இருப்பிடத்திற்குச் செல்கிறான். அங்கே மதனா மரண மடைகிறாள். துடித்து நிற்கும் வீராங்கனுக்கு ஆறுதல் கூறுகிறான் வீரபாகு. அவன் நாட்டுக்காக எதையும் தியாகம் செய்யத் துணிந்தவன். பாசத்திற்கு இடங் கொடாத பண்பாளன்.

காட்சி 18

யார் இந்த ராஜகுரு?

குருநாதர் ரத்தினத்தீவுக்கு மார்த்தாண்டனைக் கொண்டு போய்ச் சிறை செய்கிறான். அந்தக் கன்னித் தீவின் தலைவன் அவன்தான். ரத்தினபுரியில் ராஜகுருவாக உலவும் அக்கொடியோன், சடை முடியணிந்த தலைவனாகக் காட்சி யளிக்கிறான் கன்னித்தீவிலே. பிங்களனையும் கார்மேகத்தையும் கன்னித் தீவுக்கு வரவழைக்கிறான். அங்கே அவர்களையும் மார்த்தாண்டனையும் ஒழித்துவிட்டு, ரத்தினாவை மணந்து, ரத்தினபுரி அரசனாகிவிட

அவன் திட்டம் தீட்டுகிறான். ஆனால் கார்மேகம் அவனை முதல் பார்வையிலேயே சந்தேகிக்கிறான். சகாயமும் வீராங்கனும் ரத்தினாவை கண்டுபிடிக்க கன்னித்தீவுக்கு வந்ததும் தனித்தனியே பிரிகிறார்கள். சகாயம் கன்னித்தீவுப் பெண்ணொருத்தியிடம் சிக்கி விடுகிறான். வீராங்கன் முரடர்களை ஏமாற்றிவிட்டு, அரண்மனையின் ஒரு அறையில் ஓடி ஒளிகிறான். அது ரத்தினாவின் தனியறை! அங்கே ஆடைமாற்றும் அவளைப் பின்புறமிருந்து கவனிக்கும் வீராங்கன் திடுக்கிட்டு, 'ஆ... இளவரசி' என்று கூவி விடுகிறான். ஆமாம், ரத்தினா என்ற பெயரும் நட்சத்திர குறியும் அவள் முதுகிலே காணப்படுகின்றன. அவளும் அவனைக் கண்டு, தன் தந்தையிடம் ஓடுகிறாள்.

ரத்: அப்பா...அப்பா...!

தலை: வா ரத்தினா, வா! உனக்காகத்தான் காத்திருக்கிறேன். உன்னிடம் ஒரு மகிழ்ச்சி நிறைந்த செய்தி சொல்லப் போகிறேன்.

ரத்: நானும் ஒரு நல்ல செய்தி சொல்லத்தான் ஓடோடி வந்தேன்.

தலை: நீ சொல்வது இருக்கட்டும். நான் சொல்வதைக் கேள். உன்னை மணக்கப் போகிறவன் யார் என்று தெரியுமா?

ரத்: (**வீராங்கனை மனதில் நினைத்து**) தெரியும்.

தலை: யாரது? சொல்.

ரத்: பேர் தெரியாது.

தலை: ஆள் தெரியும்!

ரத்: ஆம்......ஆள் தெரியும். காண்பிக்கட்டுமா?

தலை: (**தன்னைக் குறிப்பிடுகிறாள் என்று மகிழ்ந்து**) இவ்வளவு எளிதில் மாறுவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஆகா, என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்.

ரத்: இவ்வளவு நல்லவராக ஒருவர் எனக்குக் கிடைப்பது சாதாரணமா?

தலை: ஆமாம் ரத்தினா, என்னை விட உனக்கு ஒரு நல்ல கணவனைத் தேர்ந்தெடுக்க முடியாது என்றுதான் நானே உன்னை மணந்து கொள்வதென்று முடிவு செய்து விட்டேன்.

ரத்: (**திடுக்கிட்டு**) ஆ...அப்பா!

தலை: என்ன ரத்தினா, என்ன?

ரத்: தாங்களா? என்னை மணப்பதா? இது என்ன கொடுமை?

தலை: இதுவரை யாரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாய்? ஏன் ரத்தினா, மரம் வைத்தவன் கனியைப் புசிக்கக் கூடாது, விதை விதைப்பவன் கதிரை அறுக்கக் கூடாது, துணி நெய்தவன் அதை அணியக் கூடாது என்பது சட்டம் இல்லையே!

ரத்: தகப்பன் தன் மகளை மணந்து கொள்ளலாம் என்று மட்டும் சட்டம் இருக்கிறதா?

தலை: நான் உனக்குத் தகப்பனாக இருந்தால்தானே?

இப்போது கார்மேகமும் பிங்களனும் இதை மறைவிலிருந்து பார்த்து, கேட்டுச் சீறுகின்றனர்.

ரத்: ஐயோ, எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!

தலை: ஒன்றுமே புரியக்கூடாது என்பதற்காகத்தானே இங்கு கொண்டு வந்து வளர்த்தேன்.

ரத்: நான் தேவிக்கு அர்ப்பணம் என்றீர்களே!

தலை: அதனால்தான் உன்னைக் களங்கமற்ற கன்னிப்பெண்ணாக வளர்க்க முடிந்தது. அதனால் நான் சொல்வதைக் கேட்கின்ற முறையில் தான் எந்தச் செய்தியிலும் சுவையிருக்கும். நீ ரத்தினபுரியின் வாரிசு. காணாமல் போன இளவரசி என்று கதை கதையாகப் பேசப் படுகிறதே, ரத்தினபுரியின் அந்த இளவரசி நீதான். உலகம் முழுவதும் தேடும்படி உத்தரவிட்டார் மன்னர். நானும் தேடினேன், கடத்தி வந்தவன் நான் தான் என்று தெரியாமல் இருப்பதற்காக. அப்போது ரத்தின புரிக்குத் தளபதியாக இருந்த விஜயவர்மன் நான்தான். இப்போது ரத்தினபுரிக்குக் குருநாதர், இந்தத் தீவுக்குத் தலைவன். காண

வில்லை மகளை என்ற காரணத்தால் மன்னர் மாண்டு விட்டார். இப்போது மணி மகுடப் போட்டியில் மார்த்தாண்டனும் இறந்து விடப் போகிறான். ரத்தினபுரியின் சிங்காதனத்தின் வலது பக்கம் நான் இடதுபக்கம் நீ. நான் மன்னன்; நீ ராணி.

நீ இல்லாவிடில் நானில்லை...

பிங்களன் கோபத்தோடு போய் விடுகிறான். கார்மேகம் அகப்பட்டுக் கொண்டு கழுகு குகைச் சிறையில் மார்த்தாண்டனுடன் அடைக்கப் படுகிறான். ரத்தினா தன் அறைக்குத் திரும்புகிறாள். வீராங்கன் பேச்சை ஆரம்பிக்கிறான்.

வீரா : ரத்தினா! வந்து விட்டாயா? உன்னைப்பற்றிக் கூறி விட்டுப்போகத்தான் காத்திருந்தேன். அதாவது நீ ரத்தினபுரியின் இளவரசி.

ரத் : அதெல்லாம் எனக்குத் தெரியும்.

வீரா : அப்பா! எனக்கு ஒரு பெரிய வேலை குறைந்தது. உன்னைக் காப்பாற்றி ரத்தின புரிக்கு அழைத்துச் செல்லத்தான் இந்தத் தீவுக்கு வந்தேன். நல்ல வேளையாக உன்னை எதிர்பாராமல் கண்டு விட்டேன்.

ரத் : எப்போது அழைத்துச் செல்வீர்கள்?

வீரா : மார்த்தாண்டன் என்பவரை இங்கு சிறை வைத்திருக்கிறார்கள். அவரைக் காப்பாற்றியதும் உன்னை அழைத்துப் போகிறேன்.

ரத் : இரண்டொரு நாட்களில் கன்னி பூசை நடக்கப் போகிறது. அதற்குள் என்னை அழைத்துப் போக வேண்டும். இல்லையானால்...

வீரா : மார்த்தாண்டரை கண்டு பிடிக்காமல் உன்னை எப்படி அழைத்துப் போவது?

ரத் : கழுகு குகையில் சிறை வைத்திருப்பதாக அப்பா பேசிக் கொண்டிருந்தார். அந்த இடம் எனக்குத் தெரியும். என்னையும் அழைத்துக் கொண்டு போனால்...

வீரா : அவசரப்படாதே. என் நண்பன் சகாயத்துடன் நாளை வருகிறேன். அதற்குள் அங்கு செல்ல வேண்டிய வழிகளெல்லாம் அறிந்து வைத்துக் கொள். விஷயத்தை யாரிடமும் சொல்லி விடாதே.

ஓடிவிடுகிறான். ரத்தினா மகிழ்ச்சியோடிருக்கிறாள்.

காட்சி 19

துரோகியின் முடிவு

கார்மேகம் கழுகு குகையில் மார்த்தாண்டனிடம் விஷயங்களை விளக்கிக்கூறி, குருநாதரிடம்தான் கொண்டிருந்த பக்தி காரணமாகச் செய்த முட்டாள்தனமான காரியங்களுக்கு மன்னிப்பு கோருகிறான். அவன் தவறுக்கு மன்னிப்பு கிடைக்கிறது. ஆனால் பிங்களன் ரத்தினாவை கடத்திப்போய் மணந்து, ரத்தினபுரி சிம்மாசனத்தைக் கைப்பற்றத் தீர்மானிக்கிறான். மாற்றுடையில் அவளைக் கடத்திப் போகிறான். வழியிலே தன் பேச்சுக்குப் பதில் கூறாமல் வரும் ஆடவன் யார் என்பதை அறியமுயலும் போது பிங்களனை கண்டு திடுக்கிட்டுக் கூவுகிறாள். அவளைத் தேடிப் போகும் விராங்கன் செவியில் அவளது கூக்குரல் விழுகிறது. ஓடி வருகிறான்.

பிங்களனும் விராங்கனும் வாட்போரிட, முடிவில் பிங்களன் மாண்டு போகிறான்.

காட்சி 20

எங்கநாட்டுப் பண்பாடு

ரத்தினாவை காணாமல் ஆட்களை விட்டுத் தீவு முழுவதும் தேட உத்தர விடுகிறான் தலைவன். ரத்தினாவும் விராங்கனும் ஆட்கள் தேடுவதறிந்து மறைவிடத்திலிருக்கிறார்கள். பொழுது சாய்கிறது.

மார்த்தாண்டன் சுவற்றோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டுக் கட்டப்பட்டிருக்கிறான். அவன் கையை வலுக்கொண்ட மட்டில் இழுக்கும்போது, சுவர் தளர்ந்து ஆணி பெயர்ந்து வந்து விடுகிறது. ஆனால் அந்தச் சிறையில் அந்த இடுக்கு வழியாக நீர் புக ஆரம்பிக்கிறது. பொழுது விடிந்ததும், ரத்தினாவை அங்கேயே விட்டு விட்டுக் கழுகு குகையை அடையும் விராங்கன், மார்த்தாண்டனை காப்பாற்றி விடுகிறான். ரத்தினாவை மலைப்பாம்பு சுற்ற, அவள் திகிலடைந்து கூவுகிறாள். இதனால் மலைவாசிகளிடம் அகப்படுகிறாள்

அவளைத் தேடிவந்த விராங்கன், காணாமல் தவிக்கிறான். அவளைத்தேடக் கிளம்புகிறான். மன்னன் மார்த்தாண்டன் மயக்கமாகிக் கிடப்பதால் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுமாறு கார்மேகத்திடம் கூறுகிறான்.

என் உயிர் மகிழும் அத்தான்!

கொடிய செயல்கள் புரிந்து, கடின இதயம் படைத்தவனாக உலவி, இப்போது தவறுணர்ந்து நளின இதயம் படைத்தவனாகி விட்ட கார்மேகம், வீராங்கனின் தியாகச் செய்கை கண்டு அவன் பிரிவை விரும்பாதவன் போலக் கண்ணீர் சிந்துகிறான்.

காட்சி 21

சத்தியம் வென்றது

கன்னி பூசை பலமாக நடக்கிறது. அங்கே மாலையோடு வேண்டாவெறுப்புடன் ஆடிப்பாடியபடி வரும் ரத்தினாவின் முன் தோன்றுகிறான் வீராங்கன். அவள் அவனுக்கு மாலையிட்டு விடுகிறாள். அங்கே ஒரே களேபரமாகி விடுகிறது. வீராங்கனை எல்லோரும் தாக்குகிறார்கள். மயக்கம் தெளிந்த மார்த்தாண்டனும் அங்கே வந்து வீராங்கனுக்கு உதவுகிறான். ரத்தினாவை தலைவன் இழுத்துப் போவது கண்டு துரத்திப் போகிறான் வீராங்கன். கயிற்றுப் பாலத்தின் மீது பலத்த சண்டைக்குப் பிறகு தலைவனும் ராஜகுருவுமான கொடியவனை அடித்துத் தண்ணீரில் போட்டுச் சாகடிக்கிறான் வீராங்கன். ஒருபுறம் கயிறு அறுந்து விடவே மார்த்தாண்டன் இணைப்பாக இருந்து பிடித்துக் கொள்ளுகிறான். அப்போது ஒரு தடியன் வந்து மார்த்தாண்டனின் கழுத்தை நெறிக்கிறான்.

வீரா : விட்டுவிடுங்கள். உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். விட்டு விடுங்கள்.

மார் : (தடியனைச் சமாளித்தபடி) வீராங்கா! என்னைப் பற்றிக் கவலைப்படாதே. வா...

வீரா : (ரத்தினாவிடம்) கயிற்றை இறுகப் பிடித்துக் கொள், ஜாக்கிரதை.

மார்த்தாண்டன் தன்னைத் தாக்கும் தடியனை இடித்துத் தள்ளி விடுகிறான். கரையேறியதும் மார்த்தாண்டனும் வீராங்கனும் தழுவிக் கொள்ளுகிறார்கள். ஒரு கொடியவனின் ஆட்சியில் அவதிப்பட்ட கன்னித் தீவு வாசிகள், வெள்ளத்தால் அழிக்கப்படுகிறார்கள். வீராங்கன், மார்த்தாண்டன், கார்மேகம், சகாயம், ரத்தினா முதலியோர் நாடு திரும்புகின்றனர்.

காட்சி 22

கனவு பலித்தது

நாடு திரும்பியதும் சபையைக் கூட்டுகிறான் மார்த்தாண்டன். எல்லோரும் அங்கே கூடியிருக்கின்றனர்.

மார் : பெரியோர்களே, நண்பர்களே! உங்கள் விருப்பப்படியும் வீராங்கன் ஆசைபோலவும் இன்று முதல் மன்னன் ஆட்சி மறைந்து மக்களாட்சி மலர்கிறது.

சகாயம் நவமணியுடன் வருகிறான்.

சகா : ஆமா, நான் சோத்துக்கு என்ன செய்வேன்? ஆ...இல்லை... எங்க விஷயம்?

வீரா : கல்யாணந்தான்!

அப்போது மனோகரி எழுந்திருக்கிறாள். வீராங்க அண்ணாவின் தியாகத்தைப் பாராட்ட சிறியவளான அவளால் முடியுமா? கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை மூச்சாகக்கொண்ட அண்ணாவுக்கு விட்டுக்கொரு தம்பி கிடைத்திருந்தால் எத்துணை விரைவில் நாட்டை மீட்டிருக்கலாம்? இன்னும்கூட காலம் கடந்து விடவில்லை. அண்ணாவுக்குப் பக்கபலமாக ஏராளமான இளங்காளையர் திரண்டெழுந்தால் நாடு நலம்பெறும்; மக்களாட்சியின் பெருமை எட்டுத்திக்கிலும் பரவும் என்று பூரிப்படைகிறாள். தன் கற்பைக் காத்த அண்ணன் வீராங்கனிடம் கன்னித் தீவுப் பெண்ணும் நாட்டின் இளவரசியுமான ரத்தினாவை ஒப்படைக்கிறாள்.

மனோ : நமது ரத்தினாவை இந்த நாட்டின் முதல் தலைவரான வீராங்கனுக்கு மணம் முடித்து வைக்கிறோம்.

மக்கள் வீராங்கனின் தலைமையை ஏற்பதற்கு அறிகுறியாக வாழ்த்துக்கூறி கோஷம் எழுப்புகின்றனர். ★